


நட்சத்திரங்கள்
ஒளிந்து கொள்ளும்
கருவறை
பவா செல்லதுரை


நட்சத்திரங்கள்
ஒளிந்து கொள்ளும்
கருவறை
பவா செல்லதுரை

நட்சத்திரங்கள்

ஒளிந்து கொள்ளும் கருவறை

பவா செல்லதுரை

நட்சத்திரங்கள் ஒளிந்து கொள்ளும் கருவறை : சிறுகதைகள்

ஆசிரியர் : பவா செல்லதுரை

: பி ஆசிரியருக்கு

முதற்பதிப்பு : டிசம்பர் **2007**

எட்டாம் பதிப்பு : நவம்பர் **2018**

வெளியீடு : வம்சி புக்ஸ்

**19.**டி.எம்.சாரோன்,

செல்: **9445870995, 04175-235806**

அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை - **600 077**

விலை : **100/-**

**ISBN : 978-93-80545-65-3**

அப்பாவின் நேர்மைக்கும்

கருணாவின் நட்பிற்கும்

நன்றி

செம்மலர் ச கல்கி ச குங்குமம் ச இந்தியா டுடே ச காலச்சுவடு

புது விசை ச கணையாழி ச அம்பலம் ச ஆறாம்திணை ச ஆனந்த விகடன்

நன்றி

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

அபுல்கலாம் ஆசாத்

எம்.ஆர். விவேகானந்தன்

பச்சைக்கொடி சுற்றிய பவா செல்லதுரை - பிரபஞ்சன்

இரவின் நிறத்தில் தீற்றிய நெருப்புக் குயிலோசை - க்ருஷி

முடிவற்ற வசீகர வெளியில் வலி உணரும் தருணங்கள் - உதயசங்கர்

நிலப்பரப்பின் மீது நின்று - பவா செல்லதுரை

கதைகள்

முகம்

வேறுவேறு மனிதர்கள்

மண்டித்தெரு பரோட்டோ சால்னா

ஏழுமலை ஜமா

சிங்கார குளம்

வேட்டை

பச்சை இருளன்

ஓணான்கொடி சுற்றிய ராஜாம்பாள் நினைவுகள்

சத்ரு

சிதைவு

நட்சத்திரங்கள் ஒளிந்து கொள்ளும் கருவறை

# பச்சைக்கொடி சுற்றிய

# பவா செல்லதுரை

பிரபஞ்சன்

தமிழ்ச் சிறுகதை வெளியில், காத்திரமான வரவாக வந்திருக்கிறது பவா செல்லதுரையின் ‘நட்சத்திரங்கள் ஒளிந்து கொள்ளும் கருவறை’ தொகுப்பு. பெரிதும் வழக்கில் இராத சூழல்கள், கதைக்களன்கள், வியப்பேற்படுத்தும் மனிதர்கள் என விரிந்திருக்கிறது பவாவின் இந்த உலகம். ரசனையோடு வடிவமைக்கப்பட்ட, எளிமையின் பேரழகோடு செய்யப்பட்ட உணவு விடுதியின் குறைந்த வெளிச்சம் பழக்கப்பட்டு, பின் இதமும் ஆசுவாசமும் தரும் ஒளிவிரிப்பாவது போலக் கதைகள் ஒவ்வொன்றும் வாசித்த முடித்தபின் தரும் கலை இதம், வசீகர அனுபவங்கள். நிலைபேறுடைய பல கதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. பவா செல்லதுரையின் கதைகள் தனித்தனியாகப் படித்தபோது, எனக்குத் தந்த நிறைவும் மகிழ்ச்சியும், இவை தொகுதியாக வரவேண்டும் என்ற ஆசையை எனக்கு ஏற்படுத்தி இருந்தன. பல முறையும் இதை வலியுறுத்தியும் இருக்கிறேன். இப்போது அனைத்துக் கதைகளையும் ஒருசேரப் படித்தபோது, என் அனுமானம் பொய்க்கவில்லை என்பதில் நிறைவு ஏற்படுகிறது. மட்டுமில்லை, சங்கத்து ஔவையைத் தழுவிச் சொன்னால், ஒரு நாளில் ஒரு தேர் செய்யும் வல்லமை கொண்ட தச்சன், மூன்று மாதம் முனைந்து செய்த தேர்போல, நுட்பம் கூடிய புதிய கதைகள் சேர்க்கப்பட்டு, அடர்த்தி பொதிந்த தொகுதியாக இது வெளிப்பட்டு இருப்பது மகிழ்ச்சி தருகிறது.

சுமார் முக்கால் நூற்றாண்டு வயதேறிய சிறுகதைப் பரப்பில் பவா செல்லதுரை எங்கு நிற்கிறார்? விமர்சகர்கள் இதைச் சொல்லக்கூடும்.

இடையறாத தொடர்ந்த வாசிப்பை ஒரு வாழ்க்கையாகவே கொண்ட என் பார்வையையும் பதிவு செய்வது இளம் வாசகர்களுக்குப் பயன் தரக்கூடும். சிறுகதையை பாரதி அல்லது வ.வே.சு. ஐயரோடு இணைத்துப் பேசுவது ஒரு மரபாகி இருக்கிறது தமிழ்ச் சூழலில். என் பார்வை, இவர்கள் இரண்டு பேருமே சிறுகதைத் தந்தையர்கள் இல்லை என்பதே. பாரதி,

சிறுகதைகள் வாசித்துள்ளார் என்பது உறுதி. தாகூரை அவர் மொழி பெயர்த்தார். எனினும், அவர் சிறுகதையை விளங்கிக்கொள்ள வாய்த்ததா என்றால் இல்லை. குட்டிக் கதைகள் அல்லது குமரன் கதைகள், செய்திக் கதைகள், கருத்துக் கதைகள் என்றே அழைக்கப்படலாம் அவர் கதைகள். ஐயருக்கும் சிறுகதை தெரியும். முயன்றும் பார்த்தார். அவர் நோக்கம், வாசகர்க்குத் தேசிய இரத்தம் பாய்ச்சுவது. அவர் கதைகளோடு கதைத்தோற்றம் புதுப்பாதை கண்டது. சிறுகதை அல்ல. எனினும், சிறுகதை என்கிற புது இலக்கியப் பிரிவு தமிழில் இடம்கொள்ள வேண்டும் என்று இந்த நம் முன்னோடிகள் நினைத்துச் செயல்பட்டார்களே, அதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக வேண்டும்.

1850களைத் தொடர்ந்து, சென்னைப் பல்கலைக்கழகம், சோப்பு டப்பாக்களைப் போலப் பட்டதாரிகளை உற்பத்தி செய்யத் தொடங்கியது. பல்கலைக் கட்டிடங்களைச் செங்கல்லும் சிமெண்ட்டும் கொண்டு எழுப்பிய மக்கள், மக்களின் மக்கள், உள்ளே படிக்க மட்டும் நுழையவில்லை, நுழைய முடியவில்லை. கோவிலில் இருந்து, பல்கலை வரைக்கும் நுழையும் உரிமை பெற்றவர்கள் படிக்கப் போனார்கள். அமெரிக்க, ரஷ்ய, ஆங்கில, பிரஞ்சுக் கதையாசிரியர்களை அவர்கள் படிக்கும் நல்வாய்ப்பு பெற்றார்கள். பட்டம் ஏற்று, சேவகம் செய்த அவர்கள், தாங்கள் கல்லூரியில் படித்த கதைகளைப் போலத் தமிழிலும் ஏன் எழுதப்படக் கூடாது என்று யோசித்தார்கள். அச்சு வாகனத்துக்கு எழுத்துத் தீனியும் வேண்டப்பட்டு, தேவையே படைப்புகளைத் தீர்மானித்தன. கதைகள் எழுதப்படலாயின.

ஆற்றங்கரையை ஒட்டிய, சினிமாப் போஸ்டர் ஒட்டப்படாத காலத்துச் செம்பட்டை அடித்த அக்ரஹாரத்துச் சுவர்கள், ஆற்றுக்கு அந்தப்புறம் இருந்த சேரியிலிருந்து ஆசுவாசம் மிகுந்த தூரத்தில் வீடுகள், இருட்டு ரேழிகள், எண்ணெய் வழியும் சுவாமி மாடங்கள், பெருமூச்சுகள் வெடித்தெழும் கிணற்றடி, உத்தியோகச் சம்பத்து, சமையல் உள் மாமிகள், இளம் மாமிகளின் கொலு நேர்த்தி, சைவப் பட்சணப் பழக்கம், அ-மாமிசக் காதல் என்று அவர்கள் அறிந்த வாழ்க்கையை அவர்கள் எழுதினார்கள், அல்லது புனைந்தார்கள்.

புதுமைப்பித்தன், தன் ஜோபிகளில் ஆச்சரியங்களுடன் பிரவேசம் செய்தார். நிறைய குட்டிப் பிசாசுகள் அவரிடம் இருந்தன. வடிவம், சொடுக்கும் சொற்கள், சைவப் பிள்ளைமார்களில் நிறைவேறாத தாபங்கள், அற்புதமாக வடிவமைத்த குழந்தைகள், அப்பாவிப் பெண்கள், அந்தரத்தில் காமம் சொட்டும் பெண்கள் என்று முழு சனாதனம் கழறாத, அதே நேரம் மண்ணோடு ஒட்டிய மனிதர்களை எழுதி, தனித்வம் என்ற வகையில் முதல் கதாசிரியராக விகசித்து நின்றார். பிரத்யேக அனுபவங்கள் போர்த்த தத்துவச் சரடுகளும் சுழற்சிகளும் கொண்ட, தாசிகள் எனப்பட்டவரைப் பிரமை வீசும் பெண்களாக மாற்றியமைத்தவராக, ஊரோடு சேரியைச் சேர்க்க மனமற்றவராக, சிறுகதைக் கலைஞராக மௌனி தோற்றம் கண்டார். உள் வீட்டில், காதல் நெருப்பில் கனலும் பெண்களை, அவர்களின் சார்பில் வழக்காடும் புனைவாளராகக் கு.ப.ரா வந்து போனார். அழகிரிசாமி முழுமையான படைப்பாளி எனல் தகும். ஒரு வகையில், முன்னுதாரணம் இல்லாத படைப்பாளி அவர். பின்னாளில் மிக விரிவாகக் கட்டமைந்த சிறுகதை வெளிகளை நிர்மாணித்த முன்னோடும் பிள்ளை.

தமிழ்மொழியில் தனிப்பெரும் வியக்தி தி. ஜானகிராமன். மனித அழகுகள் ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேர்த்து, அழகைப் பேரழகாக மாற்றிய பெரும் கலைஞர் தி.ஜா வார்த்தை அழகு, உச்சரிக்கும் அழகு, வெற்றிலைச் செல்லத்தோடு குழறிப் பேசும் அழகு, நிற்கும் அழகு, நிகுநிகு உடம்பழகு, பாட்டு அழகு, மனப்பரிமள வாசனை அழகு, காமம் விகசித்துச் சூரியனையே போகத்துக்கு அழைக்கும் அழகு என அனைத்து அழகுகளாலும் பெண்களைப் படைத்த ஐம்பொன் குயவர் அவர். பெண்களின் விகாசம் தாங்காமல், ஆண்களைத் தற்கொலை செய்ய வைத்த, நேசத்துக்குரிய தன்பால் துரோகி அவர். அதனாலேயே அவரை எனக்கு மிகவும் பிடிக்கும். பெண்களின் புழங்கு வெளிகளை வானம் அளவு விஸ்தரித்த கலைஞர் அவர். நாகரிகர்கள் முகம் திருப்பும் சாயங்கால மற்றும் இரவு வாழ்க்கையின் சுயமற்றுப்போன பொலிகாளைகளின் அவமானச் சோகம் கப்பிய கதைகளைச் செய்தவர் ஜி. நாகராஜன். பலவீனங்கள் என்று தவறாகக் கருதப்படும் பயம், சுருங்குதல், போலச்

செய்தல் போன்ற குணங்களோடு கூடிய எளிய மனிதர்களின் மனக் கோட்டங்களை நகையும், அங்கதமும் கூடிய தொனிகளில் எழுதியவர் சுந்தரராமசாமி. வாழ்வின் முதல் பகுதியில் புறக்கணிக்கப்பட்ட மனிதர்களையும், பிற்பகுதியில் வளமான மனிதர்களையும் மேடைப்பேச்சு தோரணையுடனும், அறுபதுகளின் தமிழ்ச் சினிமா தாலிப்பேச்சு போல் மிகைச் சொற்களால் கதைகள் எழுதியவர் ஜெயகாந்தன்.

இவர்களுக்குப் பிறகு நாங்கள் வந்தோம். வண்ணநிலவன், நுண்மை மிகுந்த, வண்ணத்துப் பூச்சிகளின் பின்னால் பயணம் போன மிக முக்கியப் படைப்பாளி. இலைகளின் மறைவில் மறைந்திருக்கும் ஆலம்பழங்களைத் தேடித் தின்னும் கிளியைப் போன்றவர் வண்ணதாசன். சுயமாக உருவாகும் முன்பே, ஒடுக்கப்பட்டவர்கள் பற்றி எழுதிய, நெகிழ்வு குறைந்த நல்ல எழுத்தாளர் பூமணி. வசனத்தில் கவிதாம்சங்களைக் கொண்டு வந்தவர் ஜெயப்பிரகாசம். தனித்வம் தோன்ற, இறுக்கமான கதைகளை எழுதியவர் ஜெயந்தன்.

தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் பல அதிர்வுகளைக் கொண்டு சேர்த்தவர் அம்பை. நவீனத்துவத்தின் ஆயிரம் வாசல்களை, பிரதியின் பல அர்த்தச் சாத்தியப்படுதலை, தம் வரலாற்று நோக்கொழுங்கில் கதைகள் எழுதியவர்கள் பிரேமும், ரமேஷ÷ம். இனி வரப்போகும் வாசகர்களின் ஆராதனைக்குரியவராக விளங்கப் போகிற ஆசிரியர் கோணங்கி. கந்தர்வன், தமிழ்ச்செல்வன் இருவரும் மனிதப்பாடுகளை ஆழமான புரிதலோடும் நிகரற்ற வாஞ்சையோடும் கலாபூர்வமாகச் சித்தரித்தவர்கள். நாவல் புலத்தை அகலப்படுத்திய திறமையான எழுத்தாளர் ஜெயமோகன். கவனிக்கத்தக்க கதைகளின் ஆசிரியர். ராமகிருஷ்ணனின் சிறப்பு அலாதியானது. அவர் கதைகளின் நிலவிரிவுகள், வரலாறு போலக் கட்டமைக்கும் காலப் பரிமாணங்கள் விரியும் கதைப்புலங்கள், தனியானவை. விஷயங்களை அவற்றின் கச்சா நிலையிலேயே, தேவைக்கும் குறைந்த சொற்களால் கதை சொல்லும் சுரேஷ்குமார இந்திரஜித், மனதின் அடி ஆழத்தைத் தொட்டு வெளிக்கொணர்ந்த கோபிகிருஷ்ணன், அழகிய பெரியவன், ஜே.பி. சாணக்யா, கால பைரவன் என்று எத்தனை ஆகிருதிகள்.

இன்று எழுத வந்திருக்கும் இளம் எழுத்தாளர்கள் சந்திக்க வேண்டிய பெரிய சவால், புதுமைப்பித்தன் முதலான நேற்றைய எழுத்தாளர்களைக் கடந்துபோதல் என்பதாக இருக்கும். பூதாகாரமாக தெருவடைச்சான் சந்துகளாக அவர்கள் தங்கள் கலை வெற்றிகளைக் காட்டி மருட்டுவார்கள். போர்க்களத்தில் வெற்றியாளன் நட்டு வைத்த ஒற்றைப் போர்வாளைப் போல் அது ஒளிரும். என்றாலும், அந்த வெற்றிகள் முறியடிக்கப்படும்.

உலக இலக்கிய நியதி இதுதான். தந்தைமார்கள், தனயர்களிடம் புறம்தந்தே தீர வேண்டும். கடத்தல் என்பது பின்தள்ளப்படுதல். இளம் எழுத்தாளர்கள், அவர்களுக்கு முன் ஐரோப்பிய எழுத்தாளர்களும் மறித்துக்கொண்டு நிற்கக் காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத் தொடக்கம், மொழி ஆக்க இலக்கியங்களாலும் இயன்றது. மொழி ஆக்கத்தின் சிறப்பை முதலில் கண்டு உணர்த்தியவர் தொல்காப்பியர்தான். மொழிபெயர்ப்பு எனும் சொல்லே அவர் தந்ததுதான்.

டாக்டர் செகாவ், பச்சோந்திகளுடன் வந்தார். மாப்பசான், மந்திரக்கோல் வைத்திருந்த கலைஞன். டால்ஸ்டாய், எழுதினார் என்பதிலும் பார்க்க, இலக்கியம் அவரை எழுதியது. மோசமான ஓட்டையுடன் வந்திருந்தாலும், டாஸ்டாவ்ஸ்கி, பார தூரமான விளைவுகளைத் தமிழுக்குத் தரும் சாத்தியங்களைத் தந்தார். யதார்த்தவாத இலக்கியம் எனும் செழுங்கிளை, கார்க்கியோடு இங்கு பதியம் இடப்பெற்றது. க.நா.சு.வின் பூமிப் பரப்பில் உலக மரங்கள் அனைத்தும் வேர்விட்டன. சரத்தின் தேவதாஸ் காதலில் தோற்றவர்களின் முன்னோடிக் காதலன் ஆனார். பாரதி, ஐயர், புதுமைப்பித்தன், ஜானகிராமன் முதலான தமிழின் முதல்வரிசைப் படைப்பாளிகள் அனைவருமே மொழிபெயர்ப்பாளர்களே ஆவர். இது தமிழின் சிறப்பு. ஜெர்மனியிலிருந்தே, பிரெஞ்சிலிருந்தே தமிழுக்கு வந்தன இலக்கியங்கள். தமிழ் நாவலின் முகத்தை ÜÜஅன்னியர்கள்ÝÝ மாற்றி அமைத்தார்கள்.

எவ்வெக் காலங்களில் எல்லாம் மொழி ஆக்கங்கள் தமிழுக்கு வந்தனவோ, அக்காலங்களில் எல்லாம் தமிழ்ப் படைப்புகளும் மேம்பட்டன.

இலக்கிய வியாபகம் என்பது இதுதான். நவீனத் தமிழ், தன் ஜீவதாதுக்களைச் சங்கத்திலிருந்தல்ல, ஐரோப்பிய இலக்கியங்களில் இருந்தே சேகரித்துக் கொண்டன.

முன்னோர்களை வெல்லுதல் என்பது அவர்களைச் செரித்துக் கொண்டு முன்செல்லுதல் என்பதாகும். தமிழ்ப் படைப்பாளர்கள் அதை மேன்மையுறச் சாதித்துக் காட்டினார்கள். ஆப்ரிக்க, லத்தீன், ஐரோப்பிய நாடுகளிலும்கூட இலக்கியம் மலருமா என்ற கருதுகோள்கள் தகர்ந்து, இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அந்த நாடுகளே, ஆசிய இலக்கிய மறுமலர்ச்சிக்கு உரம் ஊட்டின.

தமிழ் எழுத்தாளர், வானத்தை இலக்கு வைத்தாலும், தம் வேர்களைத் தமிழ்மண்ணில்தான் தேட வேண்டும் என்ற போதம், மிக இயல்பாகவே இங்கு வந்து சேர்ந்தது. எண்பதுக்குப் பிறகு, நவீனத் தமிழ்மொழியில் உள் பிரதேசங்களில் உக்ரமும், வெடிப்புற்ற, கனல் சிதறலும் கூடிவந்தன. மூத்த எழுத்தாளர்கள், பாய்ச்சலை நிகழ்த்திய இளைய தலைமுறையைக் கண்டு அஞ்சி, தங்கள் இருப்பைத் தக்க வைக்க, இருக்கைகளைப் பீடங்களாக மாற்றினார்கள். காலம் முழுக்க ஒரு மாணவத் தும்பியாய் இலக்கியக் காடு மேய விதிக்கப்பட்ட (மூத்த) எழுத்தாளர்கள், குருவாகி, லோக குருவாகி, தம் படைப்புகளையும் கீழிறங்கித் தாமும் சரிந்து போயினர்.

ஒரு பக்கம், மேன்மையான இலக்கிய ஆக்கங்கள். மறுபக்கம், பிள்ளை பிடித்து சாக்கில் அடக்கும், அதிகார மையங்களைக் கட்டமைத்த "முன்னாள்" எழுத்தாளர்கள் என்று இலக்கிய உலகம் நுண்மையாகப் பிரிந்தது. தத்துவார்த்தமே எதிர்ப்பக்கமாக இருந்த நிலைமாறி, தான் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என்கிற பதைபதைப்புடன் உறக்கமற்ற இரவுகளை விழித்துத் தீர்ந்த மனிதர்கள், தம் சக எழுத்து மனிதர்களையே பகைச் சக்தியாகக் கொண்டு, இலக்கியப் புலத்தில் எருக்கையும், எள்ளையும் விதைத்து கழுதை ஏர் பூட்டி உழுதார்கள்.

தமிழ் எழுத்துப்புலம், காலம்தோறும் காலத்துக்குத்தக, தன்னைத் தகவமைத்துக் கொண்டது. நடக்கும் அதிகாரச் சதிகளில் சிக்குறாமல், தன் ஆத்மாவைப் பாதுகாத்துக் கொண்ட சில இலக்கியச் சக்திகள், இறந்த

காலத்தின் சாம்பலிலிருந்து வெளிப்பட்டார்கள். அவர்களில் ஒருவர், பவா செல்லதுரை.

மண்சார்ந்தும், மண்ணின் விழுமியம் சார்ந்தும், மனிதம் சார்ந்தும், உலக அளவுகோல் சார்ந்தும், படைப்புமன விகாசம் சார்ந்தும், கனன்று வெளிப்பட்ட அண்மைக்கால எழுத்தாளர் பவா செல்லதுரை. யதார்த்தங்களின் எழுத்தாளர் என்று இவரைச் சொல்ல முடியாது. புனைவுகளின், கவிந்த மாலை மயங்கிய, சற்றே இருண்ட, கறுப்பு வெள்ளையுடன் கூடிய, கூரிய கவனத்தைக் கோரும் கதையாளர் பவா. சம்பவங்களின் கோர்வையாக இவர் கதைகள் இல்லை. அது அறுபதுகளின் விளைபொருள். சம்பவங்களின் ஆதாரங்களைச் சுட்டி, அவை எழுப்பும் மனமூட்டத்தில் கதைகளை நடத்திச் செல்கிற, அதிகம் பேசாத, பேச்சில் நம்பிக்கை அற்ற, சொற்களைக் கஞ்சத்தனமாகச் செலவிடும் பொறுப்புமிக்க கதையாளர். கதைகளில் 'பேசுவது' என்பது, வாசகர் மேலும், தன் மீதும் அவநம்பிக்கை கொள்கிற எழுத்தர் செயல். எழுத்தாளர்கள், திரைகளை விலக்கி, காட்சிகளை உணர்த்தும் காரியங்களை மட்டுமே செய்பவர்கள். பவாவும் அப்படித்தான் செய்கிறார்.

தொகுப்பில் சோடை போன ஒரு கதையும் இல்லை. நான்கு கதைகள், தமிழ்க்கதை என்று தலைநிமிர்ந்து உலகுக்குத் தரலாம். அந்த நாலு எது என நான் சொல்லப்போவதில்லை. வாசகர்மேல் எனக்கு நம்பிக்கை உண்டு. 'சத்ருவை முன்வைத்து ஒரு விசாரணை செய்து பார்ப்போம். இது திருடனைப் பற்றிய கதை. திருடனைப் பற்றியதா என்ற ஒற்றை வரித் தீர்மானிப்பில் உள்ள நகை புரிகிறது. இது திருடனைப் பற்றியது இல்லை. திருடனைக் கட்டி வைத்து விஷமூட்டிக் கொல்ல முனையும் மனிதர்களைப் பற்றியதா என்றால் முழுமையாக அப்படியும் சொல்ல இயலாது. பேயாத மழையா என்றால் லேசாகத் தட்டுபடுகிறது, உண்மை. திருடர்கள், தமிழ்நாட்டுப் புறக்கதைகளை ஆக்ரமித்த, என்றும் வற்றாத கற்பனைகளுக்கு இடம் தருகிற ஆதார புருஷர்கள். தமிழில் மட்டுமல்ல, உலக நாட்டுப்புறக் கதைகளில் அதிகம் கனவு காணப்படும் பொருளாக இருப்பவன் திருடன். திருடன் கதைகளில், என்றுமே மக்கள் அவனைப் போலீஸ்காரப் பார்வையில் பார்த்ததே இல்லை. திருடர்களே

கதாநாயகர்கள். வீரர்கள். திருடர்கள் கதைகளைக் கேட்கும் போதெல்லாம், கடவுளே, இவன் போலீசிடம் மாட்டிக்கொள்ளக் கூடாது என்று நான் வேண்டி இருக்கிறேன். அந்த அளவு திருடர்கள் மிக உன்னதமானவர்கள். புதுமைப்பித்தன் கூடத் திருடர்கள்மேல் அளப்பரிய நேசம் கொண்டவன்தான். திருடர்கள், தம் தொழிலை, ஒரு கணக்குப்பிள்ளை, தலையாரி, தாசில்தார், கவர்னர், ராஜாக்கள் செய்யும் தொழிலைப் போலவே, அதற்கென்று இருக்கும் தார்மீக அறநெறிகளோடு செய்பவர்கள். திருடப்போகும் முன், சாமியைத் தொழுபவர்கள். அவர்கள் நம் வீடுகளை அல்ல, அரண்மனையைக் குறிவைப்பார்கள். நியாயம்தானே? கூடவே ராசகுமாரிகளையும் குறிவைப்பார்கள். இதுவும் நியாயம்தானே. நமக்குக் கிடைக்காதது திருடனுக்குக் கிடைக்கட்டுமே. மதுரை வீரனையும், காத்தவராயனையும் மக்கள் பாராட்ட இதுவும்தானே ஒரு காரணம். திருடர்கள் தானதருமக்காரர்கள். மொத்தத்தில் மகா மனிதர்கள். ஒரு சமூகம், கட்டமைத்த அற்புதமான பிம்பம் இது. இந்த மனோபாவம்தான், விளிம்புநிலைக் கதையாடல்களின் ஆதாரம். நீ எதை தர்மம் என்கிறாயோ எனக்கு அது அதர்மம் என்கிற நெறி இது. மிகவும் முக்கியமானது இந்த மனப்புரிதல்.

திருடர்கள், ஒரு சமுதாயத்தில் ஏன் உருவாகிறார்கள்? பகிர்தல் தவறாகும்போது, பூனைகளைக் குரங்குகள் ஏமாற்றும்போது, திருடர்கள், ஏமாற்றப்பட்டதின் ஓடுகளைத் திறந்து கொண்டு வெளியே வருகிறார்கள். அவர்கள் சூரர்கள். சூரர்கள் எல்லோருள்ளும் இருக்கிறார்கள். வெளிப்பட முடியாமல் கரைந்து உறைபவர்கள். சட்டம், நியாயம், சிறை முதலான ஒழுங்குமுறைகளுக்குப் பயந்தே சூரர்கள், சந்திக்க வேண்டிய சிங்கம் ்மியாவ்ப் என்பது மாதிரி, நாளடைவில் கனவுகளில் மட்டுமே வந்து போகிறவர்களாகிறார்கள். நிஜமான சூரர்கள் தெருவுக்கு வருகிறார்கள். நாம் மகிழ்ச்சியடைகிறோம். சில சமயங்களில், அவர்களை மக்கள் பகைக்கவும் நேர்கிறது. மனிதகுலத்தின் மன நெருக்கடி முந்தும் போதெல்லாம் தியாகிகள் காட்டிக் கொடுக்கப்படுவார்கள். அப்படிச் சிக்கியவன்தான் பவாவின் திருடனும். அவனைக் கொல்லும் பொறுப்பை, ஒரு கிழவி ஏற்கிறாள். கிழவிகள் அல்லர், பெண்கள் தைரியசாலிகள். ஆண்களை

விடவும் தைரியசாலிகள். இந்த உண்மையை பவா ஏற்கிறார். எனக்கு இது மகிழ்ச்சி தருகிறது. விஷம், உடலுக்குள் விரிவாக்கப்படும் முன், ஒரு அற்புதம் நிகழ்கிறது. அற்புதத்தின் பெயர் மழை. மழைக்கு இன்னொரு பெயர் கருணை. இந்தக் கருத்தியல் பவாவுடையது. என்ன அற்புதமான விஷயம் இது. மனிதர்கள், மழைக்கு முன்பு, கொலை வெறியோடு நின்றவர்கள். மழைக்குப் பின்பு

கருணாகரர்களாகிறார்கள். மாயாஜாலம் இது. தத்துவத்தின் மாயை என்பதற்கு இல்லாதது என்று பொருள் இல்லை. மாயைக்கு, ‘இருக்கும் பொருளின் இன்னொரு தோற்றம்’ என்று அர்த்தம். அதாவது பொருளின் இன்னொரு சாயை. மறைக்கப்பட்ட பகுதியின் மறையாத வெளிப்பாடு.

பவா, நாணயத்தின் மறுபக்கத்தைக் காட்டுகிறார். மழை வந்து, அது மக்களை நனைத்து, அவர்களை மக் களாக்கிய பிறகு, திருடன் விடுதலை பெறுகிறான். ‘மழை கொடுத்திருக்கா மாரியாத்தா, போ, போய்ப் பிழைச்சுக்கோ’ என்கிறார்கள், மக்களாகிய மக்கள்.

என் முன் பல கேள்விகளை வீசுகிறார் பவா. சத்ரு யார்? மழை என்பது யாது? மனிதர்கள், மனிதர்கள் ஆகாமைக்கும், ஆகிறமைக்கும் எது காரணம், முதலான பல கேள்விகள். இலக்கியம், இதைத்தான் செய்யும். கதைகள், அவை சிருஷ்டியாக மாறும்போது, அவை முடிந்த இடத்திலிருந்து பல பிசாசுக் குட்டிகள் வௌவ்வால் குட்டிகளைப் போல் எழுந்து பறக்கும். பவாவின் பல கதைகளில் இது நேர்ந்திருக்கிறது.

பவாவின் இந்த இலக்கியம், தமிழ் மரபில் எந்த நிலம் சார்ந்தது. மலைக்காரர் அவர். கதைகளில் மலை, காடுகள் பாத்திரமாகின்றன, மலையும், காடும், காட்டுயிர்களும், பவாவின் கதைகளில் அல்லாமல் வேறு எவராலும் இந்த அளவுக்கும், அகலத்துக்கும், துல்லியமாகத் தொட்டுக்காட்டப்பட்டதில்லை. இந்த வகையில் முன்னோடியான இந்தக் கதைகள் முல்லை நிலம் சார்ந்தவை. குறிஞ்சி மயங்கி வந்த முல்லை.

தமிழின் சிறந்த எழுத்தாளராகப் பரிணாமம் பெற்றிருக்கும் பவா செல்லதுரையின் கதைகள், தமிழ்க் கதைகளின் புலத்தை விரிவாக்கி இருக்கின்றன. மிகுந்த சொற்செட்டு, வர்ணனைகளில் துல்லியம், அசாதாரண

நம்பகத்தன்மை, அருமையான மொழி  இவையே பவாவின் கதைகள்.

# இரவின் நிறத்தில் தீற்றிய நெருப்புக் குயிலோசை

க்ருஷி

வாசித்து முடித்த புத்தகம் ஒன்றைக் கொஞ்சகாலம் கழித்து நினைத்துப் பார்க்கிறபோது மனதுக்குள் ஒரு வாசம் போல் குமிழியிட்டு நிற்பது அந்தக் காலமும் அந்த வெளியும் (ற்ண்ம்ங் ஹய்க் ள்ல்ஹஸ்ரீங்) தான்.

உயர்ந்த படைப்புகள் எதுவும் வழக்கமான தடத்தில் ஒரு போதும் நகர்வதில்லை.

மத்தியதர வர்க்க மனோபாவங்கள் வாசிப்பைச் சலிப்பூட்டுகின்றன.

புதிய சூழல், புதிய மனிதர்கள் புதிய உயிர்கள், புதிய நிலக்காட்சி, வேறொரு காலநிலை என்று புதிய உலகத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும். வீர்யத்தின் வீச்சோடு சுழித்தோடும் காட்சிகளாக இருக்க வேண்டும்.

இதுவரை பார்த்தறியாத காலமும் வெளியும் - செக்குமாடாய் உழலாத மனிதர்களும் மற்ற உயிர்களும் பயிர்களும் பவாவின் கதை உலகில் நிரம்பி இருக்கின்றன.

இருள் வெளியும், இரவின் நிறமும், அடர் வனத்தின் புதல்வர்களும், புதல்விகளும்தான் பவா செல்லதுரையின் ப்நட்சத்திரங்கள் ஒளிந்து கொள்ளும் கருவறைý.

கருமையின் எல்லா த்வனிகளிலும் இரவின் நிறத்தால் தீற்றப் பட்டவைதான் இக்கதைகள், பவாவின் கதைகள். தமிழின் முதல் வருகை.

வெறும் வெளிச்சம் மட்டுமே எப்படி நல்ல ஓவியமாகவோ புகைப்படமாகவோ ஆவதில்லையோ அது போல் கருமையின் வண்ணம் படியாத படைப்பும் நிலைத்து நிற்பதில்லை.

நிழலற்ற ஒளி அழகாகாது. நிதர்சனமுமன்று. அடர்ந்த இருட்டில் வழியும் மெல்லிய ஒளிக்கீற்று ஒரு படைப்பிற்கு அழகூட்டவல்லது.

அந்த அபூர்வ அழகுதான் பவாவின் கதைப்பரப்பு எங்கும் பரவியிருக்கிறது.

எந்த எழுத்திலும் இதுவரை பார்த்தறியாத பச்சை இருளனைப் பார்க்கும் கண்கள் பவாவுக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது.

காய்ப்பேறிப் போன தன் விரல் நகங்களில்தான் ஜால வித்தைகளை ஒளித்து வைத்திருந்தாள் அந்த அற்புதப் பாட்டி.

இன்னும் விடிந்திராத கருக்கலில் பனியும் தூறலும் ஊற்றிக் கொண்டிருக்க ப்மல்லாட்டý பொறுக்க வந்த பாட்டியின் நடையோடு போட்டிபோட முடியவில்லை பேரனுக்கு.

மல்லாட்டக் காய்கள் நிரம்பி வழிந்த சொம்பை பேரனிடம் கொடுத்து ப்உரிச்சு துண்ணுý என்று கொடுத்துவிட்டு வேலையில் மும்முரமாகிறாள் பாட்டி.

மல்லாட்டைகளை உரிக்க உரிக்க ரோஸ் நிறப் பருப்பிலிருந்து ராஜகுமாரிகள் உயிர்ப்போடு வந்துகொண்டே இருக்கிறார்கள். ரயில் பெட்டிகளாய் மாறி ஒருவர் பின் ஒருவராக ரயில் புறப்படுகிறது.

ராஜகுமாரிகளின் ரயில் வரிசை.

கார்த்திகை மாதம். நாகமரங்கள் அடர்ந்திருக்கும் நதிக்கரை. இவன் பின் சட்டையைப் பிடித்தபடி ராஜாம்பாக்கள். ஓணான்கொடி சுற்றிய ஊஞ்சலில் ஒவ்வொரு ராஜகுமாரியையும் வைத்து தள்ளிவிடுகிறான். நதியின் நடுமுதுகு வரை அநாயாசமாய் போய் வருகிறது ஊஞ்சல். இக்கரைக்கும் அக்கரைக்குமாய் போய் திரும்பத் திரும்ப வந்த ஊஞ்சல் நதியின் அக்கரையில் நின்றுவிடுகிறது. எல்லோர் முகங்களிலும் உற்சாகம் வழிந்து விடுகிறது. படிக்கும் ஒவ்வொரு வாசக மனதின் இக்கரைக்கும் அக்கரைக்குமாய் எப்போதும் ஒரு ராஜாம்பாள் ஊஞ்சலாடிக் கொண்டேயிருக்கிறாள்.

ப்சத்ருƴ எந்த மொழியில் மொழிபெயர்த்தாலும் அந்தந்த மொழிக்காரனை நீரில் பரவும் நிலத்தின் நிறம் போல இயல்பாய் அவன் மனதை மாற்றிவிடக்கூடிய ஆகச்சிறந்த கதை இது. ப்ரேƴயின் பதேர் பாஞ்சாலியில் மழை தரும் ஆனந்த நிறைவு நம் கண்களை நிறைக்கிறது. பஞ்சம் பற்றி விவரிக்க வேண்டியதில்லை. பசித்தழும் குழந்தைக்குப் பசியமர்த்த ஒரு சொட்டுப் பாலின்றி கர்ப்பிணிகளின் முலைக் காம்புகள் வெடித்திருக்கின்றன.

மனித மனங்களில் ஒருவரையொருவர் அடித்துத் தின்னும் கொலைவெறி எரியத் துவங்கிவிட்டது.

வயல் வயலாய் மிஞ்சிக் கிடந்ததில் சேகரித்த கம்பையும், கேழ்வரகையும் இனிமேல்தான் இடித்து மாவாக்கி கூழ் ஊற்ற வேண்டும் மாரியம்மனுக்கு. அம்மனுக்குப் படைக்கப்போகும் படையலில் கைவைத்து விடுகிறான் பொட்டு இருளன். கிராமத்தால் பிடிக்கப்பட்டு காசிரிக்கா நாரினால் கட்டப்பட்டு மரணத்தின் விளிம்பில் நிற்க வைக்கப்பட்டிருக்கிறான். பூமியே எரிவதுபோல் நாசியெல்லாம் கருகி எரியும் வாடை. எங்கோ தூரத்துப் பாறையில் குடையப்பட்ட உரலில் நாளை நடக்கப்போகும் திருவிழாவிற்கு மாவிடித்துக் கொண்டிருக்கிறாள் ஒருத்தி.

கண்களில் இரைஞ்சும் பசியோடு மூன்று குழந்தைகளை அணைத்து நின்று இடித்த மாவை யாசகம் கேட்கிறாள் இன்னொருத்தி. பஞ்சத்திலும் நெஞ்சில் ஈரம் காயாத அவள் நீட்டிய பாத்திரத்தில் இடித்த மாவை அள்ளி அள்ளிப் போடுகிறாள். போடப்போட உரலில் மாவு பொங்கிக் கொண்டே போகிறது. பாறையின் குழி அவள் மார்பின் அமிர்தப்பால் போல சுரக்கிறது. யாசகம் பெற்றவளின் இடக்கண்ணிலிருந்து ஒரு துளி நீர் சொட்டுகிறது. மாரியாத்தா சிலையின் இடது கண்ணிலிருந்தும் ஒரு சொட்டு பூமாதேவியின் மடியில் விழுகிறது. எங்கும் இருள் உருண்டு புரள, பூமியை விழுங்குகிறது. பெருமழைங ஊழிக்கூத்து. பாறைகளையே கரைக்கும் மழை கல் மனங்களைக் கரைக்காதா? காசிரிக்கா நாரின் இறுக்கம் தளர்கிறது. மனித மனங்களின் இறுக்கமும் உடைகிறது. எல்லோர் முகங்களிலும்

குழந்தைகளின் புன்னகை. ப்ப்இனிமே திருடாத. போ, போய் பொழைச்சுக்கோý்ý எல்லோர் குரலும் நனைந்திருக்கிறது. வாசகனின் மனம் நெகிழ்ந்து போகிறது. காடுகளில் திரிந்து பச்சை இருளனையும் பொட்டு இருளனையும் ராஜாம்பாளையும் மேரியையும் சிநேகித்தவன். பச்சை இருள் படிந்த கானகத்தின் தீராத பாடல்களைப் பாடும் கலைஞன். அதுதான் அவன் கதைகளின் நிறம். அவனே ஒரு திருடன்.

பித்தேறிப்போன நகர் மயக்கத்தாலும், ஊடகங்களின் ஆரவாரத்தாலும் வேரோடு மண்ணிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட தெருக்கூத்துக் கலைஞன் கோணலூர் ஏழுமலை. பிழைக்க வழியின்றி வயிற்றுப்பாட்டிற்குப் பிறந்த இடத்தைவிட்டு திசையற்று திரிந்து அலைந்து மீண்டும் சொந்த மண்ணிற்கே வந்து பசியிலும் அவமானத்திலும் போதையிலும்கூட அவன் காதில் விழுகிற பாட்டு தாளம் தப்புகிறபோது, அடவு மாறுகிறபோது கலை ஆவேசத்தில் அக்குழுவிற்குள் ஒரு பிசாசு மாதிரி குதித்துக் கூத்தாடும் கோணலூர் ஏழுமலையின் அதிர்வலைகள் தமிழ்ச் சிறுகதை வெளியில் நீண்ட காலத்திற்கு நின்றுகொண்டிருக்கும்.

பனைமரக் கறுப்பும், பீவேலி மரங்களும், எட்டிமர இலைகளும், காசிரிக்கா நாரும், தலைமுடி பொசுங்க ரங்க நாயகிக் கிழவி தேடி அலையும் விஷத் தழைகளும், முல்லைப் பந்தல் விரித்த ஓட்டு வீட்டு வாசலும், மதில் சுவரின் உட்புறம் காய்த்துத் தொங்கும் பலாக்காய்களும், பல நூற்றாண்டு வாழ்ந்து திமிரேறிய மரங்களும், தாலியறுத்தான் பாறைகளும், செவடன் குளமும், நுணாத் தழைகளும், திப்பக் காடும், பிருஷ்டத்தில் சுரீரெனக் குத்தும் கார முட்களும், மகுட மரங்களும், மகிழம் பூக்களின் வாசனையும், நூக்க மர நாற்காலியும், சகட வண்டியை இழுத்து வர ஓடும் ஒட்டர்களும், தொந்தாலியின் தமுக்குச் சத்தமும், பாதம் பட்டு உருகி வழியும் கோட்டாங்கல் பாறையும், பனியும், தூறலும் பச்சைப் பிள்ளைக்கு ஆகாதென கொங்காணி போட்டு பேரனை அழைத்துச் செல்லும் பாட்டியும், ஓணான் கொடி சுற்றிய ஊஞ்சலும், பெரு நாக மரங்களும், சித்திரை மாத இருட்டும், வண்ணம் நிறைந்த இரவும், உடம்புக்குள்ளே படுத்திருக்கும் பெருநரிகளும், மூர்க்கத்தால் வலுவேறியிருந்த துஷ்டமிருகங்களும், பெண் ஸ்பரிசமும் படாமல்

முறுக்கேறிய உடம்பு, மரகத வெளிச்சம் விசிற - அவள் அழகில் அவளே இறுக - துருவேறிய காலம் உதிர்ந்து போக - ஒரு ஆணின் தீண்டுதலுக்கான நீண்ட காத்திருப்பும், அனுக்கமலை தச்சனும், ருசிகளால் ஆன ராஜாம்பாளின் உலகம் - மடிமடியாய்ப் பிரியமும், யாருமற்ற தனிமை பயத்தை வாயோடு கவ்விக்கொண்டு வாசலில் காத்திருப்பதும் - பட்டாம்பூச்சிகள் பறந்து திரிந்த அவள் கனவின்மீது ஊமையன் எறியும் கொள்ளிக் கட்டையும், பூமியின் முலைகளில் கசியும் ஊற்றும், ஒரு தலைமுறைக் கனமாய் மிதக்கும் பிணமும், செவிடன் குளத்துத் தண்ணியும், உடும்பு வத்தல் குழம்பும், யாரோ ஒரு பெயிண்ட்டரோடு ஓடிப்போன பின் எப்போதும் பூட்டிக்கிடக்கும் ஜ÷லி அக்காவின் வீடும், வன்முறைக்கும் பேரன்புக்கும் இடையில் நின்று கொண்டிருக்கும் தகப்பனும், இருட்டைச் சுக்கு நூறாக்கும் தேவாலய மணி ஓசையும், அந்த இரவைப் பிளப்பதற்கு பீடி நுனியில் கனியும் கங்கும் அடைந்திருக்கும் சின்னக் கதவைத் திறந்தால் விரியும் கல்லறையும், ஆண்களின் ஏக்கப் பெருமூச்சாலும், நிறைவேறாத கனவுகளாலும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் அவளின் மடிப்பு மடிப்பான இடுப்புச் சதையும் நம்மைத் துன்புறுத்துகின்றன.

கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் உலவி வந்த ஒரு வகையான மத்திய தர மனிதர்களின் இடத்தை - கருமையும் இரவின் நிழலும் கானகத்தின் குரலும் படிந்த முரட்டு ஆத்மாக்கள் தீவிரப் போக்குடன் வந்து ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். கானகத்தை ஊடுருவிச் செல்லும் மரகத ஒளி இழை நம்மை அழைத்துச் செல்கிறது. வனத்தின் ஆழத்தை நோக்கி அல்லது சிகரத்தை நோக்கி.

# முடிவற்ற வசீகர வெளியில் வலி உணரும் தருணங்கள்

உதயசங்கர்

கலை ஒரு வசீகரம், கலை ஒரு வலி மிக்க வேதனை, கலை ஒரு துயர் மிகுந்த பாடல். கலை ஒரு நம்பிக்கைக் கீற்று. கலை ஒரு புலம்பல்.

கலை வாழ்வின் உயிர்த்துடிப்பு. கலை ஒரு விந்தைவெளி. கலை ஒரு இன்பம். கலை ஒரு மாயஜாலம். கலை தனக்கான இரத்த பலிகளைத் தானே வேட்டையாடிக் கொள்ளும் காட்டுத் தெய்வம். கலை உக்கிரம் மிகுந்த அக்னிக் குண்டம். கலைக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தவர்களின் பட்டியலில் இதோ இன்னுமொரு புதிய வரவு. ஒரு புதிய கலைத்திறப்பாய் நம் முன் விரிந்து படபடக்கிறது ϋநட்சத்திரங்கள் ஒளிந்து கொள்ளும் கருவறைý, பவா செல்லதுரையின் சிறுகதைத் தொகுப்பு.

புத்தகத்தை விரித்தவுடன் கல்லும் முள்ளும் கீறிப் பிறாண்டி ரத்தம் துளிர்க்கும் திரேகம். எதையும் ஊடுருவி உள்ளொளி காணும் தீர்க்கமிக்க கண்கள். தீராத வாழ்க்கையை நடந்தே தீர்க்க முளைத்த உறுதியான கால்கள். எதையும் எதிர்கொள்ள, எதையும் புரட்டிப்போடும் வல்லமை கொண்ட கவிச்சி வாடை வீசும் கைகள். பச்சை மணம் கமழும் முறுக்கேறிய உறுதியான உடலோடு மரணத்தையும் நேர்கொள்ளும் தைரியத்துடன் நாம் சற்றும் எதிர்பாராத தருணத்தில் நம்முன்னே வந்து நிற்கும் ஜப்பான் கிழவன் இல்லை பச்சை இருளன் இல்லை பொட்டு இருளன் இல்லை பவாசெல்லதுரை.

அன்றாடத்தின் செயற்கை நீருற்றின் செயற்கையான சுழிப்புகளோடு ஓடிக்கொண்டிருக்கும் நம் வாழ்வின் கணங்கள் திகைத்து நிற்கின்றன. மூச்சு திணறுகிறது. உடல் பதறுகிறது. நா நடுங்க எதிர்பாராத இந்தத் தாக்குதலினால் நிலைகுலைந்து யார் நீ என்று குழறுகிறது வாய். போலியான இந்த நாகரீக வாழ்க்கையின் அந்தப் பக்கத்திலிருந்து தன் முரட்டுக்கைகளை நீட்டுகிறான். தப்பிக்கவே முடியாத முட்டுச்சந்துக்குள் மாட்டிக் கொண்ட நாம் சந்தேகத்துடனும் பயத்துடனும் தயங்கித் தயங்கி நம் கைகளை நீட்டித் தொடுகிறோம். தொட்ட கணத்திலேயே நம் வாழ்வு மாறி விடுகிறது. வாழ்க்கை பற்றிய நம் மதிப்பீடுகள் சுக்குநூறாகித் தகர்ந்து விடுகின்றன. ரசவாதம் நிகழ்ந்தது போல காட்டின் நடுவே மலங்க மலங்க விழித்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு முன்னால் ஜப்பான் கிழவன் போய்க் கொண்டிருக்கிறான் திப்பக்காட்டிற்குள். அவனுடைய வேட்டையின் தந்திரங்களை காடு முறியடிக்கிறது. தற்காலிகமாய் தோல்வியடைந்த அவன் ஸ்தோத்திரப் பாடல்களுக்குள் அடைக்கலம் புகுவதற்குப்

புறப்படுகிறான். ஆனால் இன்னமும் வேட்டையின் கண்ணிகள் அவன் நெஞ்சில் பத்திரமாகவே இருக்கின்றன, திரும்பி வரும் பெரும் நம்பிக்கையோடு.

கண்மூடித் திறப்பதற்குள் காசிரிக்கா நாரினால் கட்டப்பட்ட திருட்டு இருளன், விசித்திரங்களால் அடுக்கப்பட்ட பஞ்சத்தினால் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கும் அந்த ஊரின் பாறை வீட்டில் மரணத்தின் கடிவாயில் கிடக்கிறான். அனுக்குமலை காட்டின் பச்சிலைச் சாற்றினால் உடல் ஊதிச் செத்துப் போகக் காத்திருக்கிறான். பஞ்சத்தினால் வன்மமும், குரோதமும் கொலைவெறியும் ஏறிய மனிதர்கள் ஓரிரவு மழையினால் கருணை நிரம்பி வழிகிறார்கள். மழை கருணையைப் பொழிகிறது. பவா செல்லதுரையின் கலை நம் உயிர்வரை பாய்கிறது. நமக்குள் தூர்ந்துபோன ஊற்றுக்கண்ணைப் பொத்துக்கொண்டு கருணை பொங்குகிறது.

கூண்டுக்குள் அடைபட்ட பச்சை இருளன். நரியின் பற்களையே ரம்பமாக்கி கூண்டை உடைத்து ஜமீன் மாளிகையிலிருந்த மரகதப்பச்சை ஒளி பின் தொடர, பாய்ந்து செல்கிறான் கோட்டங்கல் குன்றை நோக்கி. அதிகாரங்களுக்கு எதிரான கலகக்குரல் எழுப்புகிறான்.

எல்லோரிடமும் மனசின் ஒரு நிலவறையில் கருமியின் கைக்காசு போல பத்திரப்படுத்திய ஈரமும் கதகதப்பும் நிரம்பிய ஒரு ராஜாம்பாளின் நினைவுகள் இருக்கும். மனசு துயருரும் போதெல்லாம் அந்த நினைவுகளை எடுத்துப் போர்த்தி மீண்டும் வாழ்வை எதிர்கொள்ளும் வலிமை பெறவைக்கும். ஓணான்கொடி சுற்றிய ராஜாம்பாளின் நினைவுகள், ரயில்வண்டி விளையாட்டில் பின்னால் கொத்தாய் சேர்த்துப் பிடித்த உணர்வில் ததும்பிக் கொண்டிருக்கிறது. அங்கே ராஜாம்பாள் இல்லை. ஆனால் அவள் சேர்த்துப் பிடித்துக் கசக்கிய சட்டையின் கசங்கல் இன்னும் இருக்கிறது. ராஜாம்பாளும் தோழர்களும் நதியின் அக்கரையிலுள்ள காட்டின் முகப்பிலிருந்து அழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஏரோதின் வாளின் கூர்மை மேரியின் எத்தனை குழந்தைகளைப் பலி கொண்டு விடுகிறதுங கன்னிமரியாளின் பிரசவ வலியினூடாக தன்

குழந்தையையும் காப்பாற்றி ஆசீர்வதிக்க ரட்சகர்களைத் தேடுகிறாள். வழிகாட்டும் நட்சத்திரமும் வழிமறந்து மறைந்து விடும்போது துயருற்ற மேரி கன்னிமரியாளுக்குச் சுகப்பிரசவம் என்ற சேதி கேட்டபோதுதான் நம்பிக்கை கொள்கிறாள். பரிதவித்து வலியும் வேதனையும் இறைஞ்சுதலுமாக மேரி நம்மையும் ஆட்கொண்டு விடுகிறாள்.

எத்தனையோ தலைமுறைகளாய் யாரும் காணாத மர்மமான சிங்காரக்குளம் ஒரு குறியீடாகிறது. குளத்தில் விழுந்து இறந்து போன மல்லிகா தன் மரணத்தின் மூலம் ஒரு புதிய துவக்கத்தை ஏற்படுத்துகிறாள். அந்த ஆத்திரம், கோபம், பயம், இயலாமை சிங்காரக்குளத்தை வெவ்வேறு தளங்களில் வாகிக்கத் தூண்டுகிறது.

கலையின் உயிர் எது என்றறிந்த கலைஞனான கோணலூர் ஏழுமலை, நவீன வாழ்க்கையின் கோரநகங்களில் சிக்கிச் சிதறுண்டு போகிறான். வாழ்க்கை அவனை பெங்களூர் மார்க்கெட்டில் மூட்டை சுமக்கச் சொல்கிறது. அவனை அவமானப்படுத்துகிறது. அவனுடைய கலையை இழிவு படுத்துகிறது. கோணலூர் ஏழுமலை சவால் விடுகிறான். அடங்க மறுக்கிறான். கலகம் செய்கிறான், மீறலின் துடிப்பு கோணலூர் ஏழுமலையை மீண்டும் கிராமத்திற்கு அழைக்கிறது. இரத்தபலி கேட்கும் வாழ்க்கைக்கு எதிராக போராடத் தயாராகிறான் கோணலூர் ஏழுமலை.

ப்மண்டித்தெரு பரோட்டா சால்னாýவில் தன் வாழ்வை கடைத்தேற்றும் ஈஸ்வர் தாயின் அரவணைப்பறியாமல் தந்தையின் லட்சியச் சுமையைத் தன்மீது ஏற்றிக்கொண்டு நிராதரவான நிலைமையில் அலையும் ஈஸ்வரன் வாழ்வின் விசித்திரமான இன்னொரு பக்கம்.

தன் உடலை அர்ப்பணித்து, எந்த ஜாமத்திலும் யாருடனும் சைக்கிளின் பின்னால் ஏறிச் சுற்றும் சுதந்திரத்தைக் கொண்ட விஜயாவின் சத்தமான சிரிப்பின் பின்னாலுள்ள வாழ்வின் துயரம். உறவுகளின் போலிமையை முகங்களிலும், வாழ்வின் அவலத்தை வேறு வேறு மனிதர்களிலும் எதிர்கொண்டு திகைத்து நிற்கிறோம். பொங்கிவரும் கண்ணீரை அடக்க முயற்சிக்கிறோம். நீண்ட பெருமூச்சு விடுகிறோம்.

கூர்ந்த வாசிப்பைக் கோரும் பவா செல்லதுரையின் கதைகள்

தமிழிலக்கியத்தின் பரப்பை இன்னும் விரிவாக்கி இருக்கின்றன. முதல்தொகுப்பு என்று யாராலும் சொல்லமுடியாதபடிக்கு கதைகளைத் தேர்ந்த சிற்பியைப்போல செதுக்கியிருக்கிறார். மௌனமான பல இடங்களில் கலை ஆட்சி செய்கிறது. புனைவின் உச்சத்தையும், ஒரு புதிய யதார்த்தவாதத்தையும் இவருடைய கதைகள் கட்டமைக்கின்றன.

அனுபவங்களின் சாரம் ஏறிய முதிர்ந்த மொழிநடை, அடர்த்தியான இந்த வாழ்வைச் சொல்ல அடர்த்தியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பல ஒற்றை வரிகளில் வாழ்வின் தரிசனமும் கவித்துவமும் பொங்கி வழிகின்றன. வாசிக்கும் போதுதான் அதை உணர்ந்து அனுபவிக்க முடியும்.

தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் இது ஒரு முக்கியப் பதிவு. ஒரு புதிய கொடை. உலகத்தின் எந்தமொழியிலும் இந்தத் தொகுப்பிலிருந்து குறைந்தது நான்கு கதைகளையாவது மொழிபெயர்க்க முடியும். அதற்கான வலிமையும் கலை உச்சமும் இந்தத் தொகுப்பில் இருக்கின்றன. பவா செல்லதுரை என்ற கலைஞனுக்கு கலை கைவரப்பெற்றுள்ளது. எனவேதான் தொகுப்பை வாசிக்கும்போது நம்முடனேயே இருக்கிறார் பவா செல்லதுரை. அழுகையும் கோபமும் கண்ணீரும் ஆனந்தமும் நம்மை ஒரு பைத்தியக்காரனைப் போல மாற்றிவிடுகிறது. வாசித்து முடிக்கும்போது பித்துப் பிடித்த நிலையில் நீண்ட பெருமூச்சுகள் விடுகிறோம். நாம் விடும் ஒவ்வொரு பெருமூச்சும் பவா செல்லதுரை என்ற ஜப்பான் கிழவன் என்ற பச்சை இருளன் மீது படும்போது அவர்கள் சிரிக்கிறார்கள். அது பைத்தியக்காரனின் வசீகரமான சிரிப்பு, கலையும் மர்மமாய் நம்மை நோக்கிச் சிரிக்கிறது.

# நிலப்பரப்பின் மீது நின்று

பவாசெல்லதுரை

என் பால்யம் முழுவதும் இருளர் இன மக்களாலானது.

கல்லாங்குத்துக்களாலும், மலையின் கீழுள்ள பாறைகளின் மறைவிடத்திலும் வசித்துவந்த அவர்களுக்கு, என் அப்பா போராடி, நிரந்தர

குடியிருப்புகளையும், ஒரு உண்டு உறைவிடப்பள்ளியையும் உருவாக்கித் தந்தார். என் குழந்தைப் பருவம் விளையாட்டுகள், குறும்புகள், காடு, மலைசுற்றல் என விரிந்திருந்தது. என் ஆத்மார்த்த நட்பு, ஸ்நேகிதம் எல்லாம் அந்தப் பழங்குடிக் குழந்தைகளின் பால்யத்தோடு ரத்த சம்மந்தப்பட்டது.

நான் திமிரத்திமிர காலம் என்னை அங்கிருந்து அறுத்துக்கொண்டு வந்து, இந்த நகரத்தில் போட்டது. என்னை ஆக்ரமித்திருந்த ஈரமான, குதூகல ஞாபகங்களை அதனால் இன்னும் கூட அழிக்க முடியவில்லை. அறுத்து முடித்த தாளடி நிலத்தில் வலை, வலையாய் அவர்களோடு என் சின்ன வயதில் எலி பிடிக்கத் தேடி அலைந்த கால்கள், என் கால்கள். வலை மீது கவிழ்க்கப்பட்ட சட்டியில் புகையும் கங்குவை பெரிதாக்க முட்டிபோட்டு என் கறுப்பு முகத்தில் செம்மண் அப்ப ஊதின உதடுகள் இது.

குளிரூட்டப்பட்ட எந்த சொகுசு அறையிலும், ஜனநெருக்கடி யிலும் என் ராஜம்பாளின் மீதிருந்து வீசின இந்த வாசனையை எப்போதும் உணர முடியும் என்னால். நாகரீகத்தின் விளிம்பில் நின்று பயணப்பட நேரும்போதும், வாழும்போதும் நினைவுகளில் அந்தக் காடும், கல்லாங்குத்தும், அரை நிர்வாணமாய் என்னோடலைந்த சின்ன வயசுத் தோழர்களும் இப்போதும் நிறைந்திருக்கிறார்கள். வாழ்ந்து தீர்க்கும் இந்நாட்களில் வாழத்துடித்த அந்த நாட்களின் பத்திரப் படுத்தப்பட்ட பதிவே ‘ஓணான் கொடி சுற்றிய ராஜாம்பாள் நினைவுகள்’.

ஜப்பான் கிழவனோடு திப்பக்காட்டில் அலைந்த ஒரு இரவின் அனுபவமே ‘வேட்டை’. மட்டற்ற சுதந்திரமும், அலாதியான அன்பும், சுற்றித் திரியும் வாழ்வையும் விடச்சொல்லி மதங்கள் அவர்களோடு மல்லுக்கட்டித் தோற்றுப்போகிறது. வனத்தையே தனக்குள்ளடக்கி ஒன்றும் தெரியாத அப்பாவி போல் நம்மை கடந்து போகும் ஜப்பான் கிழவனின் உரமேறிய திரேகத்தை ஒரு நாள் தோல்வி உரசிப்பார்க்கலாம்! அடுத்த நாள் காலையிலேயே அவன் வருகையைக் காதலோடு கோரும் காட்டின் சிநேகிதத்தை நாம் என்ன செய்துவிட முடியும்?

மேல்சாதித்திமிரின் ப்இருளன வீட்ல வச்சி சாப்பாடு போட்டா, அவன் சாப்பிட்டுக்கிட்டே மோட்டுவளயைப் பாப்பான்ý- சின்னவயசில் நான் எப்போதும் கேட்டது. ஆனால் அவர்கள்தான் எத்தனை சுவாரஸ்யமான திருடர் களாயிருந்தார்கள்! மனிதத்தீங்கற்ற அந்த களவின் உன்னதத்திற்கு இன்னும் என்னை பறிகொடுத்திருக்கிறேன். அந்தப்பகிர்தலே ப்பச்சை இருளன்ý, ப்சத்ருý.

என் நிலப்பரப்பு எனக்கு மட்டுமே சொந்தமானதென்றும், ஒரு ராவேட்டைக்காரனைப்போல என் மொழியின் துணையோடு அதன் நீள அகலத்தில் நான் மட்டுமே நடந்து திரிய வேண்டுமென்ற பேராசையும் எனக்குண்டு.

என் பிஞ்சு உடம்பெங்கும் சொடலிமுள் தைக்க, எக்கி எக்கிப் பறித்த சொடலிப்பழமும், ஜீவிதம் முழுக்க நானறியாத ருசியோடு சப்பிப்போட்ட காரப்பழமும், விரிந்த காடெங்கும் மின்சார பல்புகள் பூத்ததுபோல் பழுத்திருந்த நொனாப்பழத்தையும் சொத்த கலாப்பழத்தின் புளிப்பு ருசியையும் எவருக்கும் எடுத்துத்தர விருப்பமின்றி என் ஜோபியில் மறைத்து வைத்துக் கொள்ளவே விரும்புகிறது மனம்.

நான் விட்டுப்பிரிந்த பதுங்குமுயலையும், ஒழக்குள்ளநரியையும், தவக்கரடியையும் சந்திக்கவே முடியாத துயரத்தை காலம் என்மேல் ஏற்றியிருக்கிறது. என் படைப்பின் மூலமாவது மீண்டும் அந்த நிலப்பரப்பை, பழங்களை, விலங்குகளை, பால்யகாலத் தோழர்களை சென்றடைய எத்தனிக்கும் முயற்சியே இந்நூல்.

இத்தொகுப்பிற்கு இத்தனை சிறப்பானதொரு முன்னுரை வழங்கிய படைப்பாளி பிரபஞ்சனுக்கு நன்றி சொல்லி என்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் ...

இப்படைப்புகளின் ஒவ்வொருபொழுதும், இது அச்சேறும் இக்கணம் வரையிலும் ஒரு சக படைப்பாளியாகவே இதனுள் பயணிக்கும் என் உயிர் ஸ்நேகிதி ஷைலுவுக்கு என் அன்பும், பிரியமும்.

இப்படைப்பின் பக்கங்களைக் கொஞ்சமும் மிச்சம் வைக்காமல்

அருந்தி முடித்து அதிலிருந்து என் ஆத்ம நண்பர்கள் கிருஷியும், உதயசங்கரும் எழுதின பிரதிகளை இம்மூன்றாம் பதிப்பில் சற்றே கூச்சத்தோடு இணைத்திருக்கிறேன். இடையில் இக்கதைகள் திருமதி. ஜானகி வெங்கட்ராமன் அவர்களால் ஆங்கிலத்திலும், திரு. ஸ்டான்லி அவர்களால் மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வேறு ஒரு வாசகப்பரப்பை அடைந்தது, இக்கதைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதுகிறேன்.

**bavachelladurai@gmail.com**

**bavachelladurai.blogspot.com**

**9443222997**

# முகம்

அவன் ஆபீஸ் போயிருந்தபோதே மனோ வீட்டிற்கு வந்து கல்யாண ஆல்பத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தான். அவன் வீட்டிற்குள் நுழையும்போதே, üüசித்தப்பா உன் போட்டோýý என்று அம்முக்குட்டிதான் கையில் ஆல்பத்துடன் ஓடிவந்தாள். பேண்டைக் கழற்றிப் போட்டுவிட்டு, வெறும் லுங்கியுடன் திண்ணையில் உட்கார்ந்து ஒவ்வொரு பக்கமாய் புரட்டினான். அந்தப் புகைப்படங்கள் வேறு ஒரு குதூகலமான உலகத்துக்கு அவனைக் கொண்டுபோயின. அந்த ஆல்பம் முழுவதும் சந்தோஷமும் பெருமையும் நிரம்பி வழிந்தது. கைகளால் அதன் முதுகில் தடவிக் கொடுத்தான்.

சில படங்களின் நேர்த்தியில் அவன் தன்னைக் கரைத்துக் கொண்டபோதும், அருகில் அவளும் உட்கார்ந்திருக்க மனசு விரும்பி ஆல்பத்தை மடிமீது வைத்துக்கொண்டே அவளைத் தேடினான். அவள் அடுப்படியில் வேலையாயிருந்ததால், அவளைக் கூப்பிட தைரியம் வரவில்லை.

ஒருவேளை இந்த ஆல்பம் ஒரு வாரத்திற்கு முன்பே வந்திருந்தால், üüஎன்ன பெரிய வேலை ...? அம்மாவைச் செய்ய சொல்லிட்டு வாýý என்று சத்தம் போட்டு அழைத்திருப்பான். கடந்து போன ஒரு வாரம்

அவனை, அவளை, வீட்டை எல்லோரையும் மௌனமாக்கிவிட்டது.

இந்தக் கல்யாணப் பேச்சை ஆரம்பித்து வைத்ததே அம்மாதான். அவன் ஒவ்வொரு முறையும் அதைத் தள்ளிப்போட்டுக் கொண்டே போனபோது, அம்மா அவனைச் சம்மதிக்க வைக்கச் செய்த முயற்சிகளையெல்லாம் நினைவுபடுத்திப் பார்த்தான்.

நீண்டநாள் யோசனைக்குப் பிறகு அவன் சம்மதித்தபோது இந்த உலகமே தன் கைக்கு வந்துவிட்டதைப்போல மகிழ்ந்த அம்மா அவள்... கல்யாணத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்பே பேச்சு ஆரம்பித்து விட்டது. தெருவில் பாயை விரித்துப் போட்டு இரவில் வெகுநேரம்வரை அம்மா தெருப்பெண்களோடு பேசிக் கொண்டிருந்தாள். இப்போதிருந்தே பேசுவதற்கு என்ன இருக்கிறது இந்தக் கல்யாணத்தில் என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.

ஆனால் அம்மாவுக்குச் சொல்லவும், அவர்களுக்குக் கேட்கவும் நிறைய இருந்தது.

கல்யாணத்திற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பே வீடு தன் இயல்பிலிருந்து விடுபட்டு சுறுசுறுப்பாய் இயங்கியது. வழக்கமான தன் வீட்டு மௌனம் கலைந்து, பேச்சும் சிரிப்புமாய் மாறிவிட்டது. இதைத்தான் அம்மா கல்யாணக்களை என்று சந்தோஷப்பட்டுக் கொள்கிறாள்.

அப்பா தன் பழைய நண்பர் ஒருவரைப் பார்த்துப்பேசி, பந்தலுக்கும், மைக்செட்டிற்கும் ரொம்ப சீப்பாக பேசி முடித்துவிட்டு வந்து அன்று இரவு அவனிடமும், அம்மாவிடமும் அந்த நண்பருக்கும் தனக்குமான நட்பு வந்த கதை, அவரின் நல்ல குணம், அவர் மனைவி, பிள்ளைகள் என்று ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

அவனுக்கென்று அந்தக் கல்யாணத்தில் ஒதுக்கப்பட்ட வேலை இருபதாயிரம் ரூபாயைக் கடன் வாங்குவது மட்டும்தான்.

மற்ற எல்லா வேலைகளையும் அப்பா, அம்மா, சேது அண்ணன், திண்டிவனத்தில் இருந்து இதற்காகவே தன் மகளோடு பத்து நாட்களுக்கு முன்னாலேயே வந்துவிட்ட சுசீலா சித்தியென, எல்லோருமாய்ப் பகிர்ந்து

கொண்டார்கள். இதுவரை இவன் பார்த்தேயிராத சிலர் எல்லாம் வீட்டிற்கு வந்து கொண்டும், போய்க் கொண்டுமிருந்தார்கள்.

ஒவ்வொருவர் வருகைக்கும் அம்மாதான் ஓடிவந்து, ÜÜஇவரு நம்ப சுசீலா சித்தியோட மூத்த மருமகன்டா, விழுப்புரம் பெரியார் டெப்போவுல வேலைÝÝ ÜÜஇவ எங்க அண்ணன் மருமகளோட மூத்தவÝÝ என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள். அம்மாவை இப்படிப்பட்ட அபூர்வமான சந்தோஷங்களில் எப்போதாவது தான் பார்க்கமுடியும். சேது அண்ணன் கல்யாணத்தில், அப்புறம் அம்முக்குட்டி பிறந்தபோது, அதற்கப்புறம் இப்போதுதான்.

வீட்டுக்கு வந்த ஒவ்வொருவரிடத்திலும் தனக்கு என்ன வேலை? எங்கே வேலை? மாசத்துக்கு எத்தனை நாள் லீவு, இந்த வேலை எனக்கு எப்படிக் கிடைத்தது? மேலதிகாரியிடம் முதுகுத்தண்டு வளைய நடந்து கொள்கிறேனா? என்றெல்லாம் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியிருந்தது.

இந்த நாட்களில் அவனின் வழக்கமான உலகம் நைந்து போய் இருந்தது. நண்பர்கள், இலக்கியம், ஓவியம் என்று எல்லாமும் இல்லாத உலகத்தில் அவன் வாழ்ந்தால் எப்படி இருக்கும் என்பதற்கான ஒத்திகையைப் போலிருந்த இதையே சகித்துக்கொள்ள முடியாமல் நெளிந்தான்.

ஆனாலும் இந்த மாதிரியான நேரங்களில் அவன்மீது விழுந்த மற்றவர்களின் பார்வை வழக்கமான பார்வையாய் இல்லை. அது பெருமை மிக்கதாக, ஒருவித அன்பும் பிரியமும் நிறைந்ததாக மாறியிருப்பதை நினைத்து அவனே உள்ளுக்குள் சந்தோஷித்தான்.

கல்யாணத்திற்கு முந்தின நாள் காலையிலிருந்தே போட்டோ எடுப்பது ஆரம்பித்துவிட்டது. இந்த நெரிசல், அவர்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் மாற்றி மாற்றிப் பேசிய பேச்சுக்கள், எதிலும் கொஞ்சமும் எரிச்சலடையாமல் மனோ அவர்களைத் தன் கேமராவுக்குள் பதிவு செய்துகொண்டிருந்தான். ஒவ்வொரு படத்தை எடுத்து முடிக்கும்போதும் ஒருவித திருப்தி அவன் முகத்தில் படர்வதையும், இலேசான புன்னகையால் அதை அவனே

அங்கீகரிப்பதையும், அத்தனை சலசலப்புக் கிடையிலும் இவன் கவனித்த நிமிஷங்கள் இப்போது ஞாபகத்திற்கு வந்தன.

கல்யாணத்துக்கு முந்தைய இரவு, கடைசி பஸ்ஸில் இறங்கி ஆட்டோ பிடித்து வந்த லலிதா அக்காவும், அவள் குழந்தைகளும் தான் போட்டோ எடுத்துக்கொள்வதில் அதிக ஆர்வமாயிருந்தார்கள். பவுடரை முகமெல்லாம் அப்பிக் கொண்டு, ‘‘எங்க ப்ரீத்தியை மட்டும் தனியாக ஒண்ணு எடுங்க’’ ரமேஷையும் ப்ரீத்தியையும் சேர்த்து ... ‘‘டேய் எங்க குடும்பத்தோட நீயும் வந்து நில்லுடா’’ என்று அவனை வேறு இழுத்து இழுத்து நிற்க வைத்துக் கொண்டிருந்தாள்.

அக்காவின் கல்யாணத்திற்கு முன் எடுக்கப்பட்டு வீடு முழுவதும் நிறைந்திருக்கும் போட்டோக்களை நினைவுபடுத்திப் பார்த்தான். இந்த லலிதா அக்காவுக்குத்தான் போட்டோ எடுத்துக்கொள்வதில் எத்தனை பிரியம்?

வந்த ஆல்பத்தில் ஒவ்வொரு படமாக நுட்பமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். அந்தப் படம், அதில் தெறிக்கிற சந்தோஷம், அதன் பின்னணி, என்று ஒவ்வொன்றாய் ரசிக்க, கொஞ்ச நாட்களாய் வீட்டில் படர்ந்திருந்த மௌனம், நேரம் ஒதுக்கித் தந்தது.

இந்த மௌனத்திற்கும் இந்தப் புகைப்படங்களுக்குமான தொடர்பு மனதை என்னவோ செய்தது. எவ்வளவு கஷ்டப்பட்டு மறக்க முயன்றும், கல்யாணத்தன்று நடந்த நிகழ்ச்சிகள் வரிசை வரிசையாய் வந்து மனதில் நின்றுகொண்டன.

‘‘யாருக்குத்தாண்டா கஷ்டம் இல்லை. கூடப் பொறந்தவளுக்கு ஒரு பட்டுப்பொடவை எடுக்க முடியல? அப்புறம் எதுக்குடா இவ்ளோ பெரிசா கல்யாணம்? எங்கியாவது ரிஜிஸ்டர் ஆபீசுல போய் பண்ணிக்க வேண்டியதுதானே?’’ என்று தன் குழந்தைகளை இழுத்துக்கொண்டு அந்த ராத்திரியில் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்த லலிதா அக்காவின் முகத்தையும், இதற்காகவே காத்திருந்தது போல அவசர அவசரமாய் ஒரு ஒயர்க்கூடையை எடுத்துக்கொண்டு நடந்த மாமாவின் முகத்தையும் இந்த ஆல்பத்தில் தேடிக் கொண்டிருந்தான்.

ῠῠநாங்க ஒண்ணும் சோத்துக்கு வக்கத்துப் போயிடலம்மா, கூடப்பொறந்தவளாச்சேன்னு பத்து நாளக்கி முன்னாலேயே வந்தேம்பாரு. என் புத்தியைச் செருப்பால அடிக்கணும் ...ΰΰ என்ற சுசீலா சித்தியின் முகம் ஞாபகத்திற்கு வந்தது.

ῠῠஎன்னை விடும்மா, அவ என்ன நெனைப்பா, இப்படி ஒரு பொடவையை எடுத்திருக்கானே, கூடப் பொறந்தவனுக்குச் செய்யற மரியாதையா இது? கொஞ்சம் எளச்சிட்டா ஒலகமே இப்படித்தான்மாΰΰ என்று பேசிய சேது அண்ணன்தான் இந்த புகைப் படங்களில் உலகத்துச் சந்தோஷங்களையெல்லாம் முகத்தில் ஒழுகவிட்டுக்கொண்டு நிற்கிறான்.

பழைய காட்சிகளில் மனசு அறுந்துபோனது. கல்யாணம் என்பது இத்தனை கசப்பானதாகவா இருக்கும்? அவனுடைய கவிதைகளின் உலகத்தைப் போல, ஓவியங்களின் உலகத்தைப் போல சந்தோஷமானதில்லையா? இது புதுசு. இந்த அடிகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கன்னத்தைத் திருப்பிக் காட்டக் காட்ட, பல திசைகளிலிருந்தும் அடி விழுகிறது.

ῠῠஇன்னக்கி ஷாப்பிங் போறோம் பொறப்படுΰΰ புறப்பட்டார்கள். அவள் மறுக்க மறுக்க அவளின் குளிர்ச்சியான நீள நீளமான விரல்களைப் பிடித்துக்கொண்டே நடந்தான். கர்வமாயிருந்தது. அந்த டெய்லர் கடையில் நின்று, இப்படி கைப்பிடித்து நடந்தவர்களைப் பார்த்துப் பெருமூச்சுவிட்ட நாட்கள் நினைவுக்கு வந்தன. அவர்கள் அப்போது இவனை என்ன நினைத்திருப்பார்கள்?

இவனுக்கெல்லாம் வேலை கெடைச்சி... செட்டில் ஆகி அப்புறம் கல்யாணம் முடிச்சி...

இதோ என் மனைவியின் விரல்களில் நான்.

அன்று இரவு வீட்டிற்குத் திரும்பும்வரை உற்சாகம் ஒட்டிக்கிடந்தது. அவள் அந்தப் புடவையை அம்மாவிடம் காட்டாமலிருந்திருந்தால் அது இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நீடித்திருக்குமோ?

ῠῠஎப்படி அத்தை இருக்கு இந்தப் பொடவை? அவரு மொத மொத

எனக்காக வாங்கித் தந்தது. வெலைதான் கொஞ்சம் ஜாஸ்தி. நானூத்தி அம்பது... ஜாக்கட்டோட...ÿÿ

ÜÜபொடவை நகைல்லாம் அப்புறம் பாத்துக்கலாம். மொதல்ல இருபத்திரண்டாயிரம் கடனை அடைக்கிற வழியப்பாருங்க ரெண்டுபேரும்ங அவன்தான் எடுத்தான்னா நீ சொல்லத் தேவலை?ÿÿ என்கிற வார்த்தைகளைக் கொட்டும்போது இருந்த அம்மாவின் முகம் இந்த ஆல்பத்தில் ஒரு இடத்திலும் பதிவாகவில்லை.

இப்போது அவனுக்குள் ஒரு வித்தியாசமான ஆசை ஊர்ந்தது. அப்பா, அம்மா, சேது அண்ணன், அண்ணி, சித்தி, லலிதா அக்கா என்று எல்லோரையும் இப்போது மறுபடியும் படங்கள் எடுத்து ஒரு ஆல்பம் போட்டுப் பார்க்க வேண்டும். இரண்டாவது ஆல்பத்திற்கான முகங்களின் விகாரங்களை நினைத்துப் பார்க்க முடியாமல் ஆல்பத்தை மூடினான்.

ÜÜசித்தப்பா எனக்கெங்க காட்பரீஸ் சாக்லெட்?ÿÿ என்று சிரிப்பொழுக எதிரில் அம்முக்குட்டி நின்றிருந்தாள்.

கல்யாண ஆல்பத்திலும் அம்முக்குட்டியின் முகம் மட்டும் இப்படியே தான் இருந்தது.

# வேறுவேறு மனிதர்கள்

அவருக்கென்று ஒரு பெயர் இருந்ததே எல்லோருக்கும் மறந்து போய்விட்டது. வயது, அனுபவம், உருவம், தும்பைப்பூவாய் வெளுத்த தலை, அதை உதிர்த்து விழுந்த முன்பக்க வழுக்கை, எப்போதும் சலவை மணம் மணக்க உடுத்தும் வெள்ளை உடை. இவைதாம் ஜேக்கப் வாத்தியாரைப் பெயர் சொல்லி யாரையும் அழைக்கவிடாமல் Üசார்ÿ, Üதலைவரேÿ, Üஅய்யாÿ என்றெல்லாம் அழைக்க வைத்தது. அவருடைய எஸ். ஆர்.புத்தகம், பி. எப், ஆர்.டி.,பென்ஷன் எல்லாம் சரிபார்த்து, கணக்கு டேலி ஆகிக்கொண்டிருந்தபோது நான் அந்த ஸ்கூலில் வேலைக்குச் சேர்ந்தேன். அது இன்னும் ஓரிரு வருஷங்களில் அவர் ரிடையர்டு ஆவதற்கான அறிகுறிகள். மனுஷன் அப்போதே

விரைவாதத்தால் ரொம்ப அவஸ்தைப்படுவார். வேஷ்டியை இழுத்து இழுத்து விடுவதற்கே இடது கை நன்கு பழகிவிட்டிருந்தது. நடக்கும்போது ரொம்ப கஷ்டப்படுவார். ஆனாலும் அதற்கான வருத்தம் எதுவும் அவருக்கிருந்ததில்லை. எப்போதும் சிரிக்கிற முகம் அவருக்கு வாய்த்திருந்தது. அவரை நினைக்கிற யாருக்குமே முதலில் வந்து நிற்பது எப்போதும் அவர் அக்குளில் வைத்துக் கொண்டிருக்கும் குடைதான்.

ஸ்கூல் கேன்டீனில் நாங்கள் யார் சாப்பிடும்போதும், டீ குடிக்கும்போதும் அவர் வந்துவிட்டால் அவர் எதைச் சாப்பிட்டாலும் கணக்கு எங்கள் கணக்கில் ஏறும். அதற்காக நாங்கள் ஒருபோதும் வருந்தினதில்லை. எங்கள் எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் ரொம்பவும் பிரியமானவராக இருந்தார். வயசுக்குத் தகுந்த மாதிரி அவரைத் தாண்டி சடசடத்துப் போன காலங்கள், அவர் எங்களுக்குச் சொல்ல நிறைய கதைகள், அனுபவங்களை மீதி விட்டுவிட்டுச் சென்றிருந்தன. வயது வித்தியாசமின்றி எல்லோருக்கும் சொல்ல அந்த ஊட்டி கதை எப்போதும் உதட்டு நுனியிலேயே இருந்தது.

இவருக்கு முதல் அப்பாயிண்ட்மென்ட் ஊட்டியில் ஒரு இங்கீலீஷ் கான்வென்ட்டாம். üüஇதெல்லாம் என்ன பள்ளிக்கூடம்? இங்கே இருக்கிற ஸ்டாப் ரூம், அங்கே இருக்கிற கார்செட்டுக்குக் கூட ஆகாதுநுýý இந்த நேரத்தில் யாராவது வருகிறார்களா எனத் திரும்பிப் பார்த்துக் கொள்வார். அப்போதெல்லாம் கோட்டப் போட்டு டை கட்டுவாராம். எப்போதாவது கோட் ரோஜாப்பூக்கூட வச்சிருப்பாராம். கதை செல்லும் குரலே மாறி வேறு ஒரு இதமான காதல்பூர்வமான உலகத்துக்குள் அவர் நுழைவது இந்த ரோஜாவின் சமயத்தில்தான்.

üஹØம்ý என்றொரு நீண்ட பெருமூச்சோடு üüஅந்த வெள்ளைக்காரப் பொண்ணை மட்டும் கட்டிக்கினு இருந்தா இப்ப ஏன் ஒரு சிங்கிள் டீக்கு லோலுப்படறேன்ýý என்று கொஞ்சங்கொஞ்சமாய் அவள் நிறம் பற்றி, உடல்வாகு பற்றி, சரளமான இங்கிலீஷ் பற்றி, இவர்மீது அவள் கொண்டிருந்த அடர்த்தி மிகுந்த காதல்பற்றி எல்லாமும் இந்த முதல் அத்தியாயத்திலேயே சொல்லி முடிப்பார்.

üüசரி அதெல்லாம் விடு தலைவா, எல்லாம் முடிஞ்சிருச்சாýý என்று ஒருமாதிரியான கிண்டலோடு யாராவது கேட்கும்போது லேசாக முகம் மாறும். ரொம்ப வேதனையும் துக்கமும் கலந்த ஒரு சோகம் கட்டிய முகம் திடீரென உதயமாகும்.

üüச்சீ...சீ அவளும் என்னை அது மாதிரி நெனைக்கல. நானும் அவளை அந்த மாதிரி நெனைக்கல.ýý அவருக்கு ட்ரான்ஸ்பர் ஆகி கடைசியாக அவளிடமிருந்து விடைபெற்ற நிகழ்ச்சியை அவர் விவரிக்கும் அழகை எப்படி எழுதுவது? üஐ வாண்ட் டு மேரி யுý என்று அவளைப் போலவே ஆங்கிலத்தில் பேசி, கைகளை விரித்துக் காட்டுவார். ஸ்டாப் ரூமில் மேசைகளைத் தட்டி நாங்கள் ஆரவாரத்தோடு விடைபெறுவோம்.

இதோடு கதை முடிந்துவிட்டதாக பல பேர் கலைந்து விடுவார்கள். அல்லது இதற்குமேல் கதை சுவாரஸ்யமாய் இருக்காது. ஆனால் அதற்குப் பிறகு தான் அவருக்குச் சொல்வதற்கு நிறைய கதைகள் இருந்தன. ஆனால் சுவாரசியம் இல்லாத கதைகள். டெய்சி எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே, அவர் கல்யாணம் பண்ணிக் கொண்டது. தொடர்ந்து நாலு பெண்களும், அப்புறம் மூணு பையன்களும் பிறந்தது. ஒவ்வொரு பெண்ணைக் கட்டிக் கொடுக்கவும் அவர் பட்ட அவஸ்தை, போட்ட மேரேஜ்லோன், வாங்கின கடன், கட்டின வட்டி அப்படியும் கடைசி இரண்டு பெண்களும் மீந்து போனதை, üரிடையர் ஆன பணம் வந்ததும்தாம்பா எதனாச்சும் ஒரு வழி பண்ணணும்ý என்று முடிப்பார்.

üüஎன்ன சார் இது, நடக்கும்போது அசிங்கமா இருக்கு, ஒரு ஆபரேஷன் பண்ணிக்கறதுதானýý என்று ஒரு நாள் டீக்கடையில் வைத்து நான் கேட்டபோது, üüஎங்க தொரை... சாண் ஏறினா மொழம் சறுக்குது. ரிடையர் ஆன பணம் வந்தப்பறம்தான் மொதக்காரியமா ஒரு ஆபரேஷன் பண்ணிக்கணும்ýý என்றார்.

**1989** மே **31**ஆம் தேதியோடு அவருடைய ஆசிரியப் பணி முடிவடைகிறது. ஆனாலும் ஏப்ரலில் நடந்த ஆண்டு விழாவை எப்படி மறக்க முடியும்?.

வழக்கமாக வந்திருக்கும் விருந்தினர்களைத் திருப்திப்படுத்த

பேசப்படும் புகழ் வார்த்தைகள், நினைவு தெரிந்த நாட்களிலிருந்தே நாம் பார்க்கிற ஓரங்க நாடகங்கள், குரூப்டேன்ஸ்கள் என்று விழாக்கள் மீதே ஒரு நெருக்கம் உண்டாக்குதலைத் தடை செய்து வைத்திருந்ததை மீறி, ஒரு நிமிஷமும் அசையாமல் நான் உட்கார்ந்திருந்ததற்குக் காரணம் நிகழ்ச்சியின் இறுதியில் ஜேக்கப் சார் கவுரவிக்கப்படுவதைப் பார்க்கத்தான்.

கலெக்டருக்குப் போட்ட மாலையில் பூ ஒவ்வொன்றாய் உதிர்ந்து கொண்டிருந்தது. என் நிமிஷங்களும் அப்படியே. கலெக்டர் கையால் ஜேக்கப் சாருக்கு அசோசியேஷன் சார்பில் ஒரு பவுன் மோதிரம் அளிக்கப்பட்டது.

இனி வாழ்வில் ஒருபோதும் ஜேக்கப் சாரை அந்த கம்பீரமான சிரிப்போடும், பெருமையோடும் யாரும் பார்க்க முடியாது. சுந்தரைக்கூட இதற்காகப் பாராட்டத்தான் வேண்டும். நல்ல அற்புதமான கலரில் அந்தச் சிரிப்பை அப்படியே தன் கேமராவில் சுவீகரித்திருந்தான். ஜேக்கப் சாருக்குத் தெரியாமல் எனக்கும் ஒரு பிரிண்ட் வேண்டும் என்று கேட்டு பத்து ரூபாயை நீட்டினபோது ஆச்சர்யப்பட்டான். அதற்கு தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியை எப்போது நினைத்தாலும் சிரித்துக் கொள்ள முடியும். எங்கள் குழு சார்பாக அவருக்கு மேடையிலேயே ஒரு மான் மார்க் குடை வழங்கப்பட்டது. ஸ்டூடன்ஸ், டீச்சர்ஸ், கலெக்டர், கலெக்ட ரின் மனைவி என்று எல்லோர் சிரிப்பும் கொட்டிச் சிதறின மாலை அது. அப்போதுதான் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த அவர் மனைவியைப் பார்த்தேன். இரண்டு கைகளாலும் கன்னத்தை மூடிக்கொண்டு அவர்கள் வெட்கப்பட்ட அழகு ... சே ... இந்த சுந்தர் எங்க போயிட்டான்?

ஜØன் மாதம் பள்ளி திறக்கிறது என்பது ஒரு புறம் உற்சாகமாயிருந்தாலும், மே மாதம் முழுவதும் வீடு, ஓய்வு, நண்பர்கள், புத்தகம் என்று இருந்துவிட்டு திடீரென அதை அறுத்துக்கொண்டு பள்ளிக்குப் போய் அந்தச் சூழ்நிலையோடு ஒட்டவே ஒரு வாரம் ஆகிவிடுகிறது. அநேகமாக அந்த ஒரு வாரமும் ஜேக்கப் சாரை பற்றி யாருமே பேசிக் கொள்ளவில்லை. ஆனால் அடுத்த வாரமே, ஒரு வியாழக்கிழமை மத்தியானம் வீசிக் கொண்டிருந்த காற்று அதில்

பறந்த பேப்பர்கள் என்று ஒரு களேபரமான நேரம், அக்குளில் ஒரு குடையோடு அவர் ஸ்கூல் காம்பவுண்டில் நுழைவதற்கும் நான் ஒரு டீக்காக கேன்டீனை நோக்கி நடப்பதற்கும் சரியாய் இருந்தது.

என்னை முந்திக்கொண்டு அவரே வணக்கம் சொன்னார். அவரிடம் வழக்கமான கிண்டலோடு பேசவே எனக்குப் பய மாயிருந்தது. ஆளின் உருவம், விரக்தி, முகத்தில் படர்ந்திருந்த கவலை எல்லாம் என் உற்சாகத்தை எச்சரித்தது. üüவாங்க சார், காப்பி சாப்பிடலாம்ýý என்று நிதானமாக ஆரம்பித்தேன்.

üüகாபியெல்லாம் இருக்கட்டும் தொரைýý என்று கையில் வைத்திருந்த நடராஜா டெக்ஸ்டைல்ஸ் என எழுதப்பட்ட மஞ்சள் பையில் இருந்து நீலக்கலரில் ஒரு புத்தகத்தை எடுத்து விரித்தார்.

üüஇது என்னோட எஸ்.ஆர். தொரை. மொத்தம் முப்பத்தி மூன்று வருஷம் சர்வீஸ். ஆனா என்னோட ஊட்டி சர்வீசை இதுல சேக்கவே இல்லை. எனக்குப் பின்னாடி வேலைக்குச் சேர்ந்தவன்லாம் அறுநூறு ரூபாய்க்கு மேல பென்ஷன் வாங்கறான். எனக்கு நாநூற்று அம்பதே வரலை. ஏம்பா என்னய மாதிரி ஏழைங்ககிட்டயே ஜீசஸ் வெளையாடுறார்? ýý என் இரண்டு கைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டார். கண்கள் ஒரு மாதிரி அலைந்து திரிந்து நிலைகுத்தி நின்றது. நீர் அலம்பி நின்று எந்த நேரத்திலும் கீழே விழத் தயாராக நின்றது.

üüகிராஜ÷ட்டி, பென்ஷன், பி.எப்., பணம் எதுவுமே கைக்கு வரலை. தப்பையெல்லாம் ரிவைஸ் பண்ண ரெண்டு மூணு வருசம்கூட ஆகுன்றாங்க...ýý என்றபோது அவரை மீறி இரண்டு மூன்று துளி விழுந்து விட்டது.

üüஅய்யய்ய, என்ன நீங்க சின்னக் கொழந்தையாட்டம் அழறீங்க.. அதெல்லாம் ஒண்ணும் ஆகாது... டி.இ.ஓ... ஆபீஸ்ல நம்ப பாலுசார்கிட்ட சொல்லி சீக்கிரம் போடச் சொல்லலாம். இப்ப ஒரு காபி சாப்பிடுங்கýý என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஆபீஸ் ரூமை நோக்கி நடந்தார்.

சே... எப்படி இருந்த மனுசன். எப்போதும் கொத்துக் கொத்தாய்

சிரிப்பும், பேச்சும்... எல்லாமும் எங்கே? அவர்... கையில் இருக்கும் சர்வீஸ் ரிஜிஸ்டரில் தேடிப் பார்க்க வேண்டும்.

அடுத்த வாரம் ஒரு செவ்வாய்க் கிழமை பிற்பகலில் வேறு ஒரு பிரச்சனை அடிபட்டுக்கொண்டிருந்தது. எங்கள் ஸ்டாப் ரூமில் வி.பி.சிங்கில் ஆரம்பித்து உள்ளூர் எம்.எல்.ஏ. போன வாரம் ஒரு வாத்தியார் பையன் விஷயமாய் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததுவரை அடிபட்டது. அப்போதுதான் திடீரென ரகோத்மன் எதற்கோ ஜேக்கப் சாரை ஞாபகப் படுத்தினார். எதற்கு ஞாபகப்படுத்தினார் என்றாகி விட்டது.

ὒὒஅவன்அவனுக்கு ஆயிரம் வேலை இருக்குன்ற விஷயமே அந்தாளுக்குத் தெரியல சார்... எப்பப் பாத்தாலும் கையில
எஸ். ஆரோட வந்து இங்க தப்பா, அங்க தப்பான்னு ... போன வாரம் சண்டே ஒய்ஃபோடு சினிமாக்குப் போறேன். வழியில மாட்டிக்கினேன் ... டிக்கட் கெடைக்காம வீட்ல செம டோஸ். ὒὒசினிமாவுக்குப் போனமா வந்தமான்னு இல்லாம வழியில கண்டவன்கிட்ட நின்னு வெட்டியா பேசினா எப்படி டிக்கட் கெடைக்குன்றா.ẏẏ தாங்கிக் கொள்ள முடியவில்லை. ரணரணமாய் எழுந்து வெளியேறி வேப்பமரக் காற்றுக்குத் தலை நீட்டி... நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தேன்.

அந்த ஞாயிற்றுக்கிழமை சர்ச்சில் அவர் மனைவியை எதேச்சையாய்ப் பார்க்க நேர்ந்தது. நம்பவே முடியவில்லை அவர்களா என்று. பள்ளிக்கூட ஆண்டு விழாவில் அவருக்குக் குடை கொடுத்தபோது உடம்பிலிருக்கும் எல்லா ரத்தமும் முகத்துக்கு ஏற நாணி வெட்கப்பட்ட முகமா இது? இன்றைக்கு அவர்களைப் பார்க்கிற யாரும் பக்கத்தில் போய் துக்கம் விசாரிப்பார்கள்.

சர்ச் முடிந்து வெளியே வரும்போது என்னைப் பார்த்து ஸ்தோத்திரம் சொன்னார்கள். சொல்லும்போதே கண்கள் கலங்கிவிட்டது. தயங்கி, தயங்கி நிறைய சொன்னார்கள். அவர் இரவுபகலாய் பாக்கிற எல்லோரிடமும், ὒஇப்படி ஆயிடுச்சே இப்படி ஆயிடுச்சேẏ என்று புலம்புவதை... மகள், மருமகள், டீக்கடை என்று அந்த எண்ணிக்கை நீண்டு கொண்டே போவதை..

ஒரு நடுராத்திரி இரண்டு பொண்ணுங்களையும் அருகில் அழைத்துத் தலையைக் கோதி, ùùஎன்னை மன்னிச்சிருங்கடா... எனக்கு இப்போதைக்கி அந்தப் பணமெல்லாம் வருமுன்னு நம்பிக்கை இல்லை. நீங்க யாரையாச்சும் லவ் பண்ணி மாலையோட வந்தாக்கூட நான் தடுக்கப் போறதில்லைஙுý என்று அழுததை...

கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பாட்டைக்கூட மறந்து ùஎங்கோ தப்பு நடந்துருச்சி, எப்படி நடந்துச்சிý என்று தனியாகவே புலம்ப ஆரம்பித்ததை... நாலு நாளைக்கு முன்னாடி அவரை பாகாயம் மெண்டல் ஆஸ்பத்திரியில் வலுக்கட்டாயமாய் சேர்த்தனர். அதுக்கு ஸ்கூல் ஹெட் மாஸ்டர்கிட்ட ரெண்டாயிரம் கடன் வாங்கினதை...

ஆஸ்பத்திரில சமயத்துல அவர் மனைவியைப் பார்த்தே ùமேடம் என் பொண்ணுங்க கல்யாணம், எனக்கு ஒரு ஆப்ரேஷன், எல்லாம் நடந்தாகணும் மேடம். கொஞ்சம் யார்கிட்டயாச்சும் சொல்லி ஒதவி பண்ணுங்க மேடம்ý என்று கேட்பதை ... இதைச் சொல்லும் போதுதான் அது சர்ச் வாசல் என்பதைக்கூட மறந்து வெடித்து அழுதார்கள்.

ùùஅவருக்கு வர்ற பணம், எம் பொண்ணுங்க கல்யாணத்துக்குக் கூட வேணாம் சார். அவரு பழையபடி நல்லா நடமாட ஒதவுனாப் போதும்ýý என்று கண்களைத் துடைத்து கொண்டார்கள். அடுத்த ஆராதனைக்கு சர்ச் மணி அடித்தது.

அந்த அம்மா அவசர அவசரமாய் ஓடும்போது கவனித்தேன். எப்போதும் அவரை விட்டுப் பிரியாத நாங்கள் தந்த மான் மார்க் குடை அந்த அம்மா கையில் இருந்தது.

# மண்டித்தெரு பரோட்டா சால்னா

கேட்க நினைத்து, கேட்க நினைத்து இருபத்தாறு வருடங்கள் போய்விட்டன. அப்பாஙு கேட்க முடியாத கேள்விகளைத்தான் நோட்டில் எழுதி வைத்திருக்கிறேன். அவற்றைத்தான் கவிதைகள் என்கின்றனர் நண்பர்கள். சுய புலம்பல்கள் என்கின்றனர் இலக்கிய நண்பர்கள். எனக்கு

ஏதப்பா கவிதையும், கதையும்? எனக்குச் சொந்தமானதெல்லாம் ஒரே கவிதையும் ஒரே கதையும்தானேங்ு இரைச்சல் கேட்டு அடைந்து போயிருக்கும் என் காதுகளுக்கும், சோடியம் வேப்பர் வெளிச்சத்திலேயே இத்தனை வருஷமும் தூங்கிப் பழக்கப்பட்ட என் கண்களுக்கும், தூக்கம் மிகுந்த கண்களைக் கசக்கி முன் ஜாமத்திலேயே மண்டிக்காரர்களுக்கு டீ வாங்கிவர ஓடிக் கொண்டிருந்தவனுக்கும் எப்படி அப்பா கதையும், கவிதையும் சாத்தியம்?

உன் அன்பின் வன்முறைதான் இந்த மாதிரியான நிறைய்ய கேள்விகளைக் கேட்க முடியாதவனாக்கி விட்டது அப்பா. பாசம், ஆறுதல், கட்டுப்பாடு இப்படி நிறைய வார்த்தைகளால் நீ போட்டு வைத்திருந்த இரும்புக் கம்பிவேலிகளுக்குப் பின்னால், புது மழையில் பூத்த சிறு பூக்களைக்கூட நான் நின்று கவனித்ததில்லை. எனக்கு ஸ்கூலுக்கு நேரமாகி விடும். அந்தத் தேவடியாவுக்கு எதிரா நான் படிச்சி கலக்டராவணும். இதையெல்லாம் அந்தச் சின்னஞ்சிறிய பூக்களின் மென்மையும் அழகும் பாதிக்கலாம், இல்லையா அப்பாங்ு

ஒரே ஒரு கேள்விதான் அப்பா எனக்கு.

கெட்ட வார்த்தைகளற்ற அம்மாவின் பெயரை ஒரு முறை நீ சொல்லி நான் கேட்க வேண்டும். சொல், எளிமையாக.... நிதானமாக. என் மீதான உன் பாச வன்முறையை எல்லாம் தூரத் துடைந்தெறிந்து விட்டு,

மூன்று மாதக் குழந்தையாய்,

அம்மாவின் இளஞ்சூட்டில் ஒட்டிக்கிடந்து அவள் கவுச்சி யேறிய உடலிது.

உன்னையும், என்னையும் ஒரே நிமிடத்தில் உதறி எறிந்தாளா?

இதை ஒரு குற்றமாக, கையாலாகாத்தனத்திற்காகவெல்லாம் கேட்கவில்லை. தாய்ப்பறவை தன் செட்டைக்குள் தன் குஞ்சை வெதுவெதுப்போடு வைத்திருந்ததை விடவும் பாதுகாப்பாக, நீ என்னை வைத்திருந்தாய். நீ பறக்கச் சொன்னபோது நான் பறந்தேன். நீ சொன்ன மரக்கிளைகளில் மட்டும் பழருசி அறிந்தேன்.

உடன் வேலை பார்ப்பவர்கள் இசை பற்றிப் பேசுகிறார்கள், விவாதிக்கிறார்கள். இசை மனிதனை மெய்மறக்க வைக்கிறது என்கிறார்கள். நீ தூங்கிக் கொண்டிருந்த ஒரு பின்னரவில் நானும் மிக ரகசியமாய் இசை கேட்டேன் அப்பா.

கடா முடா சத்தங்களும் நவுரு, நவுரு என்கிற இரைச்சலும், இடைஇடையே மாடுகளின் குரலும், வண்டிகளின் ஹாரன் ஒலியும்... முடியலை அப்பா, இதற்கு மேல் போக தூக்கமும், துக்கமும் அழுத்துகிறது. முப்பத்தி மூன்று வருஷமாக காது இச்சத்தத்திற்குப் பழக்கப்பட்டு பழுத்துப் போயிருக்கிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட சத்தங்கள்தான் இசையாம்ஙு நான் கேட்க நேரும் சத்தங்கள் எப்போது ஒழுங்குப்படுத்தப்பட்டன?

ஸ்கூலில் படிக்கிறபோது எந்த வாத்தியாரும் இந்தக் கேள்வியைக் கேட்காமல் இருந்ததில்லை.

üஉங்க வீடு எங்க இருக்கு? ý

எல்லோரும் தெரு சொல்வார்கள். சிலர் வீட்டின் எண் சொல்வார்கள். இன்னும் சிலர் வீட்டுக்குப் பேர்கூடச் சொன்னார்கள். நான் மட்டும்தான் எழுந்து üமண்டித்தெருý என்பேன்.

üமண்டித்தெருவுல எங்க? ý

இந்த கேள்வி என்மீது எறியப்படும் தீஜ்வாலை. என்ன சொல்வது? மணி முதலியார் மண்டி, ராஜமாணிக்கம் கமிஷன் மண்டி, சீத்தாபதி நாய்க்கரின் நெல்தரகு மண்டி என நீளும் என் பட்டியலில் எந்த மண்டி சீக்கிரம் மூடுவார்களோ அதுதான் அன்றைய இரவு என் வசிப்பிடம். அசைவற்றிருந்த அந்த கணங்கள் நினைவிலிருந்து அகலாதவை அப்பா. தொண்டை அடைக்க, உடல் நடுங்க மொய்க்கும் பார்வைகளைத் தவிர்த்து, சொல்லி முடித்து ஒரு பிணம் மாதிரி...

எல்லோரும் கேட்டார்கள். உன் அப்பா இல்லாத நீ சாத்தியமே இல்லையா?

சோடியம் வேப்பர் விளக்கு வெளிச்சம் விழும் மண்டிகளின் வராண்டாக்களில் நான் படித்து முடிக்கிற வரை என்றைக்கு நீ தூங்கி

இருக்கிறாய்? என் விழிப்பிற்குப் பிறகு ஒருநாளும் நீ எழுந்ததில்லை, ஒரு வீட்டைப் பாதுகாக்கும் கூர்க்காவின் கூர்மையை விட நுட்பமானது உன் விழிப்பு. வரம் வேண்டும் ஒரு முனிவனின் தவம் போல எனக்காக நீ காத்திருந்தாய்.

குளிரில், புழுக்கத்தில், நடத்திக் கூட்டிப்போய் டீயும், எப்போதாவது பன்னும் வாங்கித் தந்து என் விடிதல்களை உற்சாகப்படுத்திய கூட்டாளி நீதான் அப்பா.

இருட்டு பிரியும் முன்பே, ஒரு மைலுக்கும் அப்பால் இருக்கிற தாமரைக்குளத்துக்குக் கூட்டிப் போய், குளிர்ந்த தண்ணீரில் என்னை முக்கி, சோப்பு போட்டு உடம்பு கழுவி நூலிழைத் துண்டால் துவட்டிவிட்டதெல்லாம் எந்த அப்பனும் செய்யாதவைதான். பத்தாவது படிக்கிறவரைகூட கால் சட்டையோடு நிற்கவைத்து குளிப்பாட்டிவிடுவாய். ஒரு நாளும் அடுத்த படியில் இறங்கவிடவோ நீந்தத் துடித்த என் சிறகுகளையோ நீ கவனித்ததேயில்லை. எனக்கு ஏதாவதொன்று ஆகிவிட்டால் உனக்கு யார் இருக்கிறார்கள் அப்பா? இதைத்தான் அப்பா அன்பின் வன்முறை என நான் வார்த்தைப்படுத்தி இருக்கின்றேன்.

முதல்முதலில் நாம் வீடு என்று வாடகைக்கு வந்தது என் பிரைவேட் ஸ்கூல் வாத்தியார் வேலைக்குப் பிறகுதானே. என் அவஸ்தையின் உச்சம், நான்கு சுவர்களாலான ஒரு அறையில் படுப்பதென்பது. ட்யூப் லைட்டும், ஸிக்ஸ்டி வாட்ஸ் பல்பும் போட்டுப் படுத்தால்கூடத் தூக்கம் வர மறுக்கிறது. சோடியம் வேப்பருக்குப் பழகிய தூக்கம். அதைவிட புது அனுபவம் கக்கூஸில் உட்கார்ந்து வெளிக்கிருப்பது. ஸ்கூலில், காலேஜில் மட்டும் பார்த்து, எப்போதாவது ஆசையாய்ப்போனது. தினம் தினம் அதில்தான் எனும்போது பரவசமாகிறது. பன்னிரண்டுக்கும் இரண்டுக்குமான இரவின் இடைவெளியில் தானே அப்பா வழக்கமாக நாம் சேர்ந்து போவோம். வெங்காயத்தோல்களும், அழுகிய காய்கறியும், புடைத்த மிளகாய் வத்தலில் மீந்த காம்புகளும் மிதக்கும் முனிசிபாலிட்டி கால்வாயில் கால்களை அகட்டி...

இரவின் அடர்த்திகளானாலும் அப்பாவும் மகனும் எதிர் எதிர்

கால்வாய்களில் உட்கார்ந்து கழிப்பதென்பது கல்லூரிப் படிக்கிற எந்தப் பையனையும் நடுங்க வைத்துவிடும்தானே அப்பா?

அதைவிட அவஸ்தை, இதே மாதிரி நீயும் கால்களை அகட்டி எதிர்க் கால்வாயில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக் கொண்டே கழிப்பது. இரண்டாம் ஆட்டம் முடிந்து வருகிறவர்களைப் பார்த்து பார்த்து எழுந்து முகத்தைத் திருப்பி நிற்பது. நிழல்கள் மறைகிற வரை காத்திருப்பது.

இறந்த கால அவமானங்களால் நத்தை கூட்டுக்குள்ளே உடலை இழுத்துக்கொள்வது மாதிரி என்னைச் சுருக்கிக் கொள்கிறேன் அப்பா. எப்போதுமே மண்டித்தெருவின் நெரிசல் மிகுந்த சாலைகளைத் தவிர்க்கிறேன், எதேச்சையாகத் திரும்ப நேர்கிற மண்டிகளின் வராண்டாக்கள் உடம்பு முழுக்க எதையோ பாய்ச்சுகிறது.

காக்கி கால்சட்டைத் துணிக்கும், எட்டு ரூபாய்க்கும் குறைவான கஞ்சி வடிக்கும் வெள்ளைத்துணியைச் சட்டைத்துணி என அவர்கள் வாங்கிக் கொடுத்ததற்கும் நீ பல நாட்கள், இந்தப் பெரிய மனிதர்களின் முன்னால் கூனிக் குறுகியும், நான் டீ வாங்கி வரவும், அவங்க வீட்டு அம்மாக்களுக்குப் புடவை தேய்த்துக் கொண்டுபோய் கொடுக்கவுமான என் இறந்தகால நடுக்கம் இன்னும் நீடிக்கிறதப்பா.

நடுத்தெருவில் நடந்து போய்க்கொண்டிருக்கையில் ‘டேய் ஈஸ்வரா ஓட்றா ஓட்றா நாலு ஸ்டிராங் டீ,’ என்று ஒரு குரல் வந்துவிடுமோ என்ற பதட்டத்தில் ஒரு வாத்தியார் வாழ்ந்து கொண்டிருப்பதின் அதிகபட்ச காயம் உனக்கு இன்னும்கூடப் புரிபடவில்லை என்பது பெரிய துயரம்தான்.

உனக்கு, நான் இன்னமும் மண்டிக்காரர்களுக்கு ஓடுகிறவனாக, கால்சட்டை போட்டுக்கொண்டு, உன்னைக் கழுவிவிடச் சொல்லித் தாமரைக்குளக் கரையில் தலைகுனிந்து நிற்பவனாக நீடிப்பது சந்தோசமாக இருக்கலாம்” என் உடல் முழுக்க அவமானம் சேறு மாதிரி பூசப்பட்டிருக்கிறது. நானே கழுவிக் கொள்கிறேன், கொஞ்சம் வழி விடு அப்பா”

பரோட்டா சால்னா பார்க்கும் போதல்ல, நினைக்கும்போதே

குமட்டுகிறது அப்பா. மீந்த காய்கறிகளும், அழுகிய தக்காளியும், நம் நிலைமைக்கு இதுதான் என்ற உன் நியாயமும் சேர்த்து குமைய வைக்கிறது. தர்மலிங்க நாயக்கர் வீட்டில், பவுர்ணமிக்கு, இலைபோட்டுப் பரிமாறிய சுடுசோற்றை, சாப்பிட முடியாமல் திணறி, பிசைந்துகொண்டே இருந்தேனே. அது பரோட்டா சால்னாவைத் தாண்டிப் போய்விட்டோம் என்ற ஆனந்தமில்லை. ‘தின்னு தின்னு’ என்ற உன் வார்த்தைகளுக்குப் பதிலாக, என் கண்கள் இத்தனைகாலம் கழித்துத் திரண்டிருந்ததே, அதுதான் அப்பா பதில்.

இதெல்லாம் சொல்ல என்ன வந்தது எனக்கு இப்போது? இதுதானே நீ?

மூன்றுமாதக் குழந்தையை அம்மாவின் பழம்புடவையால் சுற்றித் தூக்கிக்கொண்டு வந்து, மாரி மண்டி வாசலில் கிடத்தி விட்டு மூட்டை தூக்கிச் சம்பாதித்துக் காப்பாற்றி இருக்காவிட்டால் தெரியும், நான் எப்படிப்பட்ட பொறுக்கியாய் மண்டித் தெருவில் சுற்றிக் கொண்டிருப்பேன் என்று.

‘ராக்கண் முழிச்சி உனக்கு பசிக்கிறபோது, எனக்கும் பசித்து, உன் வயிற்றைக் கழுவின மிச்சத்தில் நானும் வாழ்ந்த வாழ்க்கையைக் குத்தம்னா சொல்ற? ’ என்று நீ ஆத்திரப்படாதே அல்லது ஆத்திரப் படு. யாரைப் பார்த்தாலும் அவமானப்பட்டு, உள்ளடங்கி பதுங்கிப் பதுங்கி ஒரு மனிதன் வாழ நேர்ந்த அவலத்தை உன்னிடம் பகிர்ந்து கொள்ளாமல், அல்லது உன் வாக்குப்படியே உன்னிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியலை அப்பா.

கடைசியாக ஒன்று,

மனசுக்குள்ளேயே தேக்கி, தேக்கி வைத்த இந்தக் கேள்வி ஊத்துக்கண் மாதிரி கசிந்து, சில நேரம் பீச்சியடித்து, சில நேரம் வற்றி...

அம்மா செத்தா போனாள்?

திரும்பும் பக்கமிருந்தெல்லாம் புறப்பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் கேள்வியால் நொறுங்கி, சாவின் விளிம்பில் நின்றபோதெல்லாம், ஒரு

நிழல்... ஒரு நிழல்...

கைப்பிடித்திழுத்து, உச்சிமோர்ந்து, தலைக்கோதி, என் துக்கங்களை, உறிஞ்சிவிடத் துடிக்கும் கருணையும், காதலும் நிரம்பித் ததும்பும் அந்தக் கண்களால் மட்டுமே ஒவ்வொரு முறையும் தப்பிக்கிறேன் அப்பா.

மரத்திலிருந்து கழித்துப் போடப்பட்ட தனிக்கிளையாய் மண்டித்தெரு மூலையில் யாரோ ஒரு மூட்டை தூக்கும் குடிகாரனோடு சதா சண்டையும், சச்சரவுமாய் காலம் தள்ளும் அவளின் கண்களுக்கு, ஒரு உயிரைக் காப்பாற்றிப் பொத்தி வைத்திருக்கும் வல்லமையும் ஜீவனும் எப்படி அப்பா சாத்தியம்?

ஒத்துக் கொள்கிறேன் அப்பா, அவளுக்கும் உனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

எனக்கு?

## ஏழுமலை ஜமா

சொந்த ஊருக்குப் போகிறோம் என்கிற நினைப்பே மற்ற எல்லாத் துயரத்தையும் வடியச் செய்தது. உடல் முழுக்க புதூ ரத்தம் ஊறுவது மாதிரியிருந்தது. பஸ் முழுக்க கூட்டம் நசநச வென்றிருந்தது.

எல்லாவற்றிற்கும் பழக்கப்பட்டிருந்தது மனசு. சிட்டி ரவுண்ட் மார்க்கெட் மோரி நாத்தம் பழகிப் புதிய மணமாய் அவனுள் உறைந்திருந்தது. சீட் நெம்பர் தேடி உட்கார்ந்து ஆசுவாசமாய் பக்கத்தில் பார்த்தான். அழுக்கும் சோர்வும் அப்பிய முகங்களில் அதையும் மீறின லேசான உற்சாகம் துளிர்ந்ததைக் கவனிக்க முடிந்தது. ஊருக்குப் போகிறோம் என்கிற, துளியே துளியான சந்தோஷம் அது. கிராமத்தில் இரண்டொரு நாளில் அது மறையும். பக்கத்து சீட்டில் இருப்பவனைப் பார்த்து விட்டு இவ்வளவு யோசிக்க முடிகிறது. இப்போது பழைய நினைவுகள் ஞாபகத்துக்கு வந்தது.

பெங்களூரில் சாய்ந்த தலை ஓசூரில் வந்துதான் நிமிர்ந்தது.

அப்புறமும் தூங்க முயன்று, முடியாமல் முழித்துக் கிடந்தபோது வந்த பயம் இன்னமும் அப்படியேதான் இருக்கிறது.

ஏன் இப்படி சம்மந்தமில்லாத நினைவுகள் வந்து அலைகழிக்கிறது? எல்லாவற்றையும் சிட்டி ரவுண்ட் மார்க்கெட் மோரியிலேயே கரைத்தாகிவிட்டது. எதைப் பற்றியும் நினைக்காமல் ஊர்போய்ச் சேர வேண்டும். மனசு மட்டும்தான் இப்படி நினைத்தது. கண்கள் இப்படியும் அப்படியும் அலைந்தது. பஸ்ஸில் உட்கார்ந்திருப்பவர்களில் சிட்டி ரவுண்ட் மார்க்கெட் முகங்கள் அடையாளம் தெரிகிறது. பழக்கூடை சுமந்து காய்ப்பேறிய கைகள் அவனைக் கஷ்டப்படுத்துகிறது. அழுகை அழுகையாய் வருகிறது.

இறங்கி விடலாமா?

இல்லை. இந்த நகரம் இனியும் எனக்கு வேண்டாம்.

ஊருக்குப் போய் என்ன பண்ண?

குடும்பத்தோட கொளத்துல விழுந்து மாஞ்சாலும்சரி, இங்க வேணாம். கம்பியில் தலை சாய்ந்து, கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டான். எதற்கோ காத்திருந்தது போல, எது ஞாபகம் வரக்கூடாதோ அதெல்லாம் பிய்த்துக்கொண்டு வந்தது.

Üஏழுமலை, கூத்தாடும் போதுதான் இந்த ஜிட்டு தலப்பெல்லாம், கூடை தூக்குறப்போ வேணாம். கெராப்பு வெட்டிக்கோடா.ý

சொல்றவனுக்கு இவன் மகன் வயசிருக்கும். இங்கு எல்லாருமே போடா வாடாதான். எத்தனை வயசுக்காரனையும் இப்படி சொல்ல சிட்டி ரவுண்ட் மார்க்கெட் சீனியாரிட்டி தைர்யம் கொடுத்திருந்தது. யாரும் எதையும் பேச முடியாது. மரியாதைக்கெல்லாம் ஆசைப்பட்டா எவன் கை வேணுன்னாலும் நீளும். கைகள் ஊர்வாரியா, ஜில்லாவாரியா, ஜாதிவாரியா பிரியும்.

எந்த நேரமாயிருந்தாலும் கூடையை இறக்கி வைத்துவிட்டு ஆட வேண்டும். பாதங்களில் சலங்கைகளின் சப்தம் எழ, சுற்றி ஆடின ஊர் ஞாபகம் மனசில் முட்ட, மார்க்கெட் கொய்யா இலையும், சப்போட்டா

இலையும் காலில் மிதிபடும்.

மார்க்கெட்டில பல உருவங்கள் நின்று பார்க்கும். ÿÿலூசுýý என்ற புரிதல் பல முகங்களில் எதிரொலிக்கும்.

அதெல்லாம்தான் அவனுக்கு மரண அடிகள், வேட்டைநாய் மாதிரி துரத்தித் துரத்திக் குதறியது. தப்பிக்க, எங்கும் ஓடிப்போக முடியவில்லை. சுற்றிச் சுற்றி சிட்டி ரவுண்ட் மார்க் கெட்டுக்குள்ளேயே வாழ்க்கை அவனை இயக்கிக் கொண்டிருந்தது.

மீறியாகி விட்டது. இதுவரை இவன் மென்னியைப்பிடித்துக் கொண்டிருந்த வாழ்வின் கலகத்தைத் திருப்பி இறுக்கியாகி விட்டது. இனி ஊர்போய்விட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாய் வெளியாக இந்த எண்ணம் உருக்கொண்டது. ஊர்தான் இவனை நெட்டித் தள்ளி கண்டோன்மென்ட் நெரிசலில் தள்ளியது என்பதெல்லாம் இதுவரை இருந்த வெறியில் ஞாபகம் வரவில்லை. ஆனால் இந்த பஸ் பயணம் இப்போதே அதைக் கொண்டு வந்து ரப்பர் பந்து மாதிரி மனசில் மோதுகிறது. சுற்றுப்பக்கம் இருபது மைலுக்கு இருபது மைல் ÿÿஏழுமலை ஜமாýý தான்.

பாக்கு வைக்கும்போதே கிராமங்களுக்குள் போட்டி கிளம்பும். அத்தனை மவுசிருந்தது ஏழுமலை ஜமாவின் சலங்கை சத்தத்திற்கு. கிராமங்களுக்குப் பெரும்பாலும் நடந்தே புறப்படுவார்கள். அது ஒரு மாதிரியான போதை. வழிநெடுகப் பேசிக் கொண்டே போவது. சாராயம் விற்கிற புதரை நோக்கிக் கால்கள் தானாக அடையும். ஒரு மாதிரியான பக்தியோடு யாருக்கும் அதிகமாகி விடாமல் மருந்துமாதிரி குடிப்பார்கள். அப்புறம் பேச்சு நின்றுவிடும். பாட்டு... பாட்டுதான் வழிநெடுக.

பாட்டின் சத்தமும், லயமும், இந்தப் பிறவிக்கான முழு சந்தோஷத்தையும் இம்மி, இம்மியாக அனுபவிக்கிற மாதிரி மற்றவர்களைப் பொறாமைப்படுத்தும் அடர்த்தியான அந்த ராத்திரிகளின் நினைவுகள்தான் இவனை பஸ் ஏற்றி விட்டிருக்கிறது.

விடியவிடியக் கூத்து நடக்கும். மறக்க முடியாத கதைகள். கூத்து முடிய, காலை பத்து,பதினொன்றுகூட ஆகும். வேஷம் கலைக்காமலேகூட

படுதாவுக்குப் பின்னால் சாராயம் குடிப்பார்கள். புதுசாய்ப் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாய் இருக்கும். பீமன், தர்மர், துரியோதனன், கர்ணன் என்று ஆளாளுக்கு ஒரு டம்ளரை உள்ளே இறக்குவார்கள்.

அநேகமாய்ப் பல ஊர்களில் ஏழுமலையை விட்டுவிட்டு ÜÜஜமாÝÝ ஊர் திரும்பும். ஏழுமலைக்கென்று திறக்கும் கதவுகளும், ஒரு கோடி பிரியத்தோடு பரிமாறப்படும் மாட்டுக்கறியும், சாராயமும், ராத்திரிக்கு கிடைக்கும் ஒடம்பும் என அவனுடைய வாழ்வின் சுவாரஸ்யங்களே தனிதான். ரெண்டு மூன்று நாட்கள்கூட ஆகும் ஊர் திரும்ப.

திகட்டத்திகட்ட வாழ்கிற மாதிரி இருந்தது, செல்லங்குப்பம் கூழ்வார்க்கும் விழா நோட்டீஸ் வருகிறவரை. நம்பமுடியாமல் மறுபடி மறுபடி படித்தான். நோட்டிஸின் கீழே கொட்டை எழுத்துகளில் போட்டிருந்தது.

இரவு எட்டு மணிக்கு ரஜினிகாந்த், கமலஹாசன், ஸ்ரீதேவி நடித்த 16 வயதினிலே வீடியோ படம் காண்பிக்கப்படும்.

ஏதோ மனசுக்குள் அறுந்து விழுவது கேட்டது. இவன் திமிரத்திமிர ஒரு திகில் வந்து வலுக்கட்டாயமாய் இவனுள் நுழைவது புரிந்தது.

ÜÜஇன்னாடா இது, சாமிக்கு முன்னாடி, சினிமாக்காரனை ஆடவுட்ரானுங்கÝÝ, வேதனை வாய்வழியே சிந்திவிடாமல் கேட்டான்.

அதன் நியாயம் பல வகைகளில் அவனுக்கு விளக்கப்பட்டது.

ÜÜஉங்களுக்குன்னா ரெண்டாயிரம், மூவாயிரம் ஆவும். இது முன்னூறு நானூறுல எல்லாம் முடிஞ்சிடும். மழை மாரி இல்லாத இந்த நேரத்தல ஜனங்க கைல காசு இல்லைன்னா...ÝÝ

ÜÜபோதும், போதும். நிறுத்திக்குங்க.ÝÝ தாங்க முடியவில்லை. அவனுக்கு எல்லோருக்கும் முன்னால் ஆத்திரம் சிதறியது.

அப்பறம் சுத்துப்பக்க கிராமத்துல இருந்து வந்த எல்லா நோட்டீஸ்களிலும் நடிகர், நடிகைகள் பெயராகத்தான் மாறியிருந்தது. இத்தனைக்குப் பிறகும்கூட சில ஊர்த்தெருக்களில் கூத்து நடந்து

கொண்டிருந்தது இவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

ப்ப்இந்தக் காலனிக்காரனுங்கதான் இப்படி சினிமாக்காரனுக காலுல உழுந்துட்டானுங்க ச்சீ... இந்த ஜாதில பொறந்தம்பாருýý சதா இதே புலம்பல்தான். கூத்துக்காக இதுவரை ஊர்த்தெருவில் இந்தப் பாதம் பட்டதில்லை.

கரும்பு வெட்ட, சூளை போட, ரிக்ஷா ஓட்டவென்று, தர்மரையும், பீமனையும், பாஞ்சாலியையும் வாழ்க்கை பிரித்தனுப்பியது. இவன்தான் பிடிவாதமாய் எதிர்த்து நின்றான்.

எந்தப் பிடிவாதமும் ஒரு மாசத்துக்குக் கூட தாக்குப் பிடிக்கவில்லை. ஊருக்குச் செல்ல வெட்கப்பட்டுக் கொண்டு, நடுராத்தரியில் பெங்களூருக்கு பஸ் ஏறினான்.

ப்போதும், போதும் என்னை நெரிக்காதேý என்று ஏதோ எதிரில் நின்ற பிசாசிடம் கெஞ்சுவது மாதிரிதான் சிட்டி ரவுண்ட் மார்க்கெட்டில் இருந்து இதோ இப்போது தப்பியது.

தெருவில் நடக்கிறபோது ஒன்றிரண்டு வீட்டு அரிக்கேன் விளக்குகள் விழித்திருப்பது தெரிந்தது. நடை தானாகவே சத்தத்தைக் குறைத்துக் கொண்டது. இவனுக்கு இவ்வளவு அந்நியமாகிவிட்ட ஊரைப் பார்க்கப் பார்க்கக் கோபமாய் வந்தது.

சத்தம் போடாமல் வள்ளியை எழுப்பினான். ரெண்டு பேருக்குமே பேச ஏதுமற்றுப்போனது. விரித்திருந்த பாயில் படுத்து அவள் பழைய புடவையைப் போர்த்திக் கொண்டான். அவள் இவனைப் போர்த்திக் கொண்டாள்.

மத்தியானத்துக்கு மேல், இவன் வந்திருப்பது ஊருக்குத் தெரிந்தது. ஒவ்வொரு கூரையிலும், கேள்விகள் முளைத்தன. இதுக்குப் பயந்துதான் பெங்களூருக்கு ஓடினது. மீண்டும் அதே கேள்விகள். எப்படி ஏழுமலை வந்தாப்பலே?

இப்படித்தான் துவங்கின அவை. அப்புறம், அவை காயத்தில் குத்துகிற கோணி ஊசிகளாய் மாறும், மாறின.

சித்தப்பிரமை பிடித்தவன் மாதிரி எல்லாருக்கும் ஒரே பதில் சொன்னான்.

ÜÜஅப்புறம் இன்னா பண்ணப் போற? ÝÝ யார் மூலமோ வாழ்வு அவனைக் கேட்கிற அழுத்தமான கேள்வி இது. முடியவில்லை இதற்கு பதில் இல்லாமலே பெங்களூரை விட்டுப் புறப்பட்டிருக்கிறான்.

இருட்டினதுக்கப்பறம், ÜÜஜமாÝÝ ஆட்கள் விசயம் கேள்விப் பட்டு வந்தார்கள். அதே மரியாதை இருந்தது ஒவ்வொரு மொகத்திலும்.

கரும்பு வெட்டக் கூப்பிட்டார்கள், சந்தையில் மாட்டுத்தரவு செய்வது கவுரவமான தொழில் என்றார்கள், எதையும் கேட்கிற மாதிரி இல்லை மனசு.

ÜÜஎவனுக்கும் கூத்தைப் போடலாம் வாத்தியாரேன்னு சொல்ற தைர்யம் வரலையேÝÝ என்று குச்சியால் தரையைக் கிளறிக் கொண்டிருந்தான்.

எல்லாரும் போனபிறகு மனசு கனத்திருந்தது. எதுக்கோ ஏங்கியது. வாடகைக்கு சைக்கிள் பேசி எடுத்துக் கொண்டு வேளானந்தலை நோக்கி மிதித்தான்.

பிரிட்ஜ்ஜைத் தாண்டுகிற போது ஆசை வந்தது. ÜÜபாடிப் பார்க்கலாமா? ÝÝ

முடியவில்லை. திட்டுத் திட்டாய் மனதில் உறைந்திருந்த ரத்தக் கறைகளில் பாட்டும் சந்தோஷமும் ஒட்டிக் கிடந்தன. பாட்டுக்கு ஏதோ ஒன்று முட்டித் தள்ளுவதும், பின்பு அதுவே கையைப் பிடித்துக் கொள்வதுமாய் அவஸ்தைப் பட்டான்.

மொத்தமாய் நாலு டம்ளர் குடித்து, பச்சை மொளகா அதிகமா போடச் சொல்லி, மொச்சையைக் கையில் வாங்கி சைக்கிள் மிதிச்சப்போ நிதானம் இழக்க ஆரம்பித்தான்.

இன்னைக்கு மத்தியானம் கண்ணுசாமி காட்டின கோணலூர் கூழ் ஊத்ர நோட்டீஸ் ஞாபகம் வந்தது. ÜÜஅம்மன் கோயில் கிழக்காலேÝÝ

கலர்ப் படமாம்.

சொந்த ஊரே இவனை எட்டி ஒதைச்சி, வேணான்னு முடிவு செஞ்சிட்டப்புறம் இனி எவன் கூப்புடுவான்?

சொந்த ஊர்க்காரனை விட, விஜய்காந்தும், ராதாவும் முக்கியமாகி விட்டது ஊருக்கு.

பிரிட்ஜ்ஜை தாண்டும்போது லாரி ஒன்று இவனைக் கடந்து போனது. நிதானமாக சைக்கிள் ஓட்ட முயன்றான்.

வடக்கே இருந்து கூத்துப்பாட்டு சத்தம் கேட்டது.

பிரமை. வெறும் பிரமை. நாளெல்லாம் இதே நெனப்போட இருந்தா இப்படித்தான்.

இல்லை சைக்கிள் நகர நகர பாட்டு துல்லியமாகிக் கொண்டே வந்தது.

இப்போது பெட்ரோமாக்ஸ் வெளிச்சமும் தெரிந்தது. வெறிபிடித்த பிசாசு மாதிரி சைக்கிள் வேகமெடுத்தது. மண்ரோட்டில் சைக்கிளை நிறுத்திவிட்டுத் தட்டுத் தடுமாறி மரத்தடிக்கு நடந்தான்.

பத்துப் பதினைந்து உருவங்கள் மங்கலாய்த் தெரிந்தன. மர ஸ்டூல் போட்டு ஒருத்தன் உட்கார்ந்திருந்தான். கையில் பெரிய நோட்டிருந்தது.

கூத்து பழகிக் கொண்டிருந்தவர்கள் எல்லாருமே புது ஆட்கள். எல்லார் முகத்திலும் அது திட்டுத்திட்டாய்த் தெரிந்தது. ஒரு செடி, மனசுக்குள் முளைப்பது மாதிரி இருந்தது இவனுக்கு. தள்ளாடி விழப் போனவனை மரம் தாங்கிக்கொண்டது. கூர்ந்து அந்தக் கால்களைப் பார்த்தான். சரியில்லை. அந்தக் கிருதாக்காரனின் அடவு தப்புத்தப்பா வருது. உள்மனசு இவனுக்குள்ளேயே பேசிக் கொள்வது கேட்டது. என்ன வாத்தியார் இவன், அடவைக் கவனிக்காம புஸ்தகத்தைப் பாத்து படிச்சிட்டா போதுமா, üüஅடவு தாண்டா உசுரு ஆட்டத்துக்குýý

கிருதாக்காரன் தொடர்ந்து தப்புப் பண்ணிக் கொண்டே இருந்தான். ஏதோ உள்ளிருந்து கிளம்ப, üதகிதோம், தகிதோம்ý என அந்த

வட்டத்துக்குள் பெரிய வன்முறையாளனைப் போலக் குதித்தான். அவசரமாய் ஒருவன் பெட்ரோமாக்ஸ் விளக்கை நகர்த்திக் கொண்டான். அவனுக்குள்ளிருந்த வெறிபிடித்த பேய் விடாமல் ஆடியது.

மடேரெனக் கீழே விழுந்த போது, ரெண்டொருவர் அதிர்ந்தனர். பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில், ஒரு கை மூக்கில் கை வைத்துப் பார்த்தது.

ǘǘமூச்சி இருக்குýý

ǘǘபோதை போலிருக்கு.ýý

வாத்தியார் நிதானமாய் எழுந்து வந்தார். முகத்தைத் திருப்பி வெளிச்சத்தில் பார்த்தார்.

ǘǘநம்ம கோணலூர் ஏழுமலைநுýý

எல்லோரும் வாத்தியாரையே பார்த்திருந்தார்கள். யாருமே எதிர்பார்க்காமல் அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு ǘǘதண்ணி கொண்டாடாýý என்ற சத்தத்திற்குப் பலகால்கள் ஓடின. அந்த வார்த்தைகளில் அவ்வளவு பிரியமும் ஏதோ நம்பிக்கையுமிருந்தது.

## சிங்காரக் குளம்

கருங்கற்களாலான மதில்சுவரின்மீது எப்போதோ அடிக்கப்பட்ட வெள்ளைச் சுண்ணாம்பில் பாசி படிந்து ஒருவித அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பிரமாண்டமான அந்த மதில் சுவரின் உட்புறம் காய்த்துத் தொங்கும் பலாக்காய்களும், பல நூற்றாண்டுகள் வாழ்ந்த திமிரோடு நிற்கும் மரங்களும் எந்த வெளி ஆளையும் மிரட்டும். மலையைச் சுற்றி மதில் சுவரென்பதே ஆச்சரியமும் அச்சமுமான விஷயம்தான். மதில் சுவரை மீறி வெளியே தெரியும் இரண்டே இரண்டு விஷயங்களில் இந்த மரங்கள் ஒன்று. அதற்கு நிகராக நிற்கும் கோவில். அதற்குள்ளேதான் வேட்டவலம் ஜமீனோ, குதிரைகளோ, தானியக் கிடங்கோ, அதன் தனி ராஜ்ஜியமோ இயங்குவதாக யாரும் எளிதில் நம்பிவிட முடியாது.

நகரத்தையே அடைத்த ஜமீனின் ராட்சத இரும்புக் கதவுகள் தொடர்ந்தாற்போல் அஞ்சு நிமிஷம் திறந்திருந்து யாரும் பார்த்ததில்லை.

தெற்கு மதில் சுவரோரம், எந்த ஆரவாரமுமின்றி ஆனால் உள்ளூர ஒரு பயங்கரத்தோடு ஜமீனைப் போலவே தேங்கியிருந்தது சிங்காரக்குளம். இந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது? மலையிலிருந்து குளத்திற்கான வழி எது? அல்லது முழுவதுமே பூமியின் முலைகளில் கசியும் ஊற்றா?

ஒவ்வொருவரும் ஒவ்வொரு செய்தியைச் சிங்காரக் குளத்திற்காக வைத்திருந்தார்கள், பறத்தெருக்காரர்களைத்தவிர. காமராஜரைப் பார்த்தேன்; இந்திராகாந்தி அம்மாவைப் பார்த்தேன் என்பது போன்ற அந்த ஊர் செய்திகளின் அபூர்வங்களில் ஒன்று சிங்காரக்குளத்தைப் பார்த்த பறத்தெருக்காரர்களின் எண்ணிக்கை.

எளநீர் குடிக்கும்போது ǘǘசிங்காரக்கொளத்து தண்ணீ மாதிரி இனிக்கிதேýý என்றும் ǘǘநைனார் வீட்ல வெறகு பொளந்துட்டு மத்தியான சாப்பாட்ல ரெண்டு சொம்பு சிங்காரக்கொளத்துத் தண்ணி குடிச்சேன். ரெண்டு நாள் வாய்க்கு ஒனக்கையா எதுவும் கேக்கலýý என்பது மாதிரியும் காலனியில் அவ்வப்போது அடிபட்டுக் கொண்டிருக்கும் சிங்காரக்குளப் பேச்சு.

இப்போ மாதிரியில்லை.

இப்போ பறத் தெருவையே நாலா பிரிச்சி, பாரதி, பாரதிதாசன் தெருன்னு பேர் மாத்திட்டாங்க. ஆனா எவன் அதை கேக்கறான். மிலிட்ரிக்குப் போன வயசு பசங்க மட்டும் இந்தப் பேரில் விலாசம் எழுதி கடிதம் போட்டு சரியா வந்து சேராததனால, மறுபடி வேட்டவலம் காலனின்னே எழுதறானுங்க. ஊர் ஒலகத்துக்கு மட்டும் அது பாரதி, பாரதிதாசன் தெருவுன்னு பல்லை இளிச்சிக்கிட்டு நிக்கும்.

ஆனா இப்போ நாலு கூரை வூட்டுக்கு மத்தியில் ஒரு சீம ஓடு போட்ட வீடும் பத்து வூட்டுக்கு ஒரு மெத்தை வீடுமா கட்டித் தள்ளிட்டானுங்க. வாத்தியாரா ஆனவன், மிலிட்டரிக்குப் போனவன், கவர்மெண்டு உத்தியோகம் பக்கமா போனவன், தலையாரி ஆனவனையும்

சேத்தா எண்ணி பத்து வீடு தேறும் முழுசா மெத்தை வீடுன்னு.

அப்பவே வகையறாவுக்கு வகையறா பிரிவு போட்டு, அத்தனை அம்சமா பறத்தெருவுக்கு நடுவுல மாரியம்மன் கோயில் கட்டி, அதுக்கு வடக்கால நிக்குதே அந்த மேடை, அது அப்பா கட்டினதுதான். இப்போ சமூக நாடகம், அம்பேத்கார் கூட்டம் எல்லாம் அதுலதான். ஆனா ராத்திரில படுத்துக்க சொகமான எடம் அது. அன்னிக்கு ராத்திரி கூட்டாளிங்க கூட ரொம்ப நேரம் பேசிட்டு இருந்துட்டு, மேடையில படுத்தப்பதான் திடீர்னு பொறிதட்டுச்சு அவனுக்குச் சிங்காரக்குளத்து ஞாபகம்.

ஞாபகம் எங்க வர்றது? முன்னே பின்ன பார்த்திருந்தாதானே ஞாபகம் வர. அதைப் பேசின ஆளுங்களைப் பற்றி, மலைலதான் பொறப்பட்டு ஜமீன் வழியா கீழ எறங்குது என்ற செய்தி பற்றி, வர்ற வழியில ஜமீன் பொம்பளைங்க அதுலதான் குளிப்பாங்களாம் என்ற ஆச்சரியம் பற்றி, அந்தக் கொளத்துக்கு ஊர்த் தெருக்காரனுங்க காவலுக்கு ஆளு போட்டு மாசு, மருவு, தீட்டு படாம காப்பாத்தி வருவது பற்றி, அந்தக் காவலாளுங்களுக்கு வேலையே வைக்காம இந்தப் பறத்தெரு பத்து, பனிரெண்டு வகையறாவுல இது வரையும் அந்தக் குளத்துல ஒரு உள்ளங்கை தண்ணி அள்ளி குடிக்காதது பற்றி ... இது ... இதுதான் ... இதைப் பற்றின யோசனையின்போதுதான் இதயத்தில் ஏதோ புதுசாய்த் தேங்குவதை உணர்ந்தான்.

விடிந்திருந்தபோது அது கண்கள் வழியே தெறித்திருந்தது. கோபம்... ஆத்திரம்...

அன்னிக்கு காலையிலேயே தொடங்கிய பேச்சுதான். நிக்கல. நெருடல. வயது, ஆளு, வகையறா, தலக்கட்டு எந்தப் பேதமும் அவனுக்குக் குறுக்கே வரலை. எல்லார்ட்டேயும் அவன் சிங்காரக் குளத்தைப் பத்திதான் பேசிக்கொண்டிருந்தான்.

பேசிக் கொண்டிருந்தவன் ஒரு நாள் திடீர்னு பேசறத நிறுத்திட்டு, பேசினதைப் பத்தி யோசிக்க ஆரம்பிச்சதும் இதே மாரியம்மன் கோயில் மேடையில்தான்.

அதிர்ந்து போனான்.

சிங்காரக்குளப் பேச்சு அவனிடமிருந்து பலரைப் பிரித்திருந்தது இப்போது புரிந்தது. இவனைப் பார்த்துப் பார்த்து பொம்பளைகள் குசுகுசுவெனப் பேசிக் கொண்டது, சில ஆளுங்க அவனைப் பைத்தியக்காரன் கணக்கா பார்த்தது, இது வீணான வெவகாரம்னு நாட்டாருங்க அறிவுரை சொன்னது, எல்லாத்துக்குமே காரணம், üபறத்தெருக்காரங்களும் சிங்காரக்குளத்துல இறங்கி ஒரு கை தண்ணி குடிச்சாகணும்ýü என்ற வார்த்தையின் ஆபத்துதான் அது. ஆனாலும் அப்படி, இப்படியென்று பறத்தெருவில் அம்பது, அறுபது பேர், அவன் வார்த்தைகளுக்கு ரத்தமேற்றிக் கொண்டிருந்தார்கள்.

அந்த பலமோ, பலவீனமோ, அவனைப் பறத்தெருவைத் தாண்டி வேதக்காரத் தெருவிலேயும் கால்வைக்கவும் சிங்காரத்தெருவுலேயும் கால்வைக்கவும் சிங்காரக்குளத்தைப் பற்றிப் பேசவும் செய்தது.

வேதக்காரத்தெரு இன்னா வேதக்காரத்தெரு. இவன் சொந்த அக்காவே அங்கதான் வாழுது. ரெண்டு தெருவுக்குமான கொள்வினை, கொடுப்பினை சகஜம். என்னா, பறத்தெருப் பொண்ணு அங்க வாழப்போச்சுன்னா புதுநன்மை எடுத்து ஞானஸ்தானம் வாங்கனுன்னு ஒத்த கால்ல நின்னு ஜெயிச்சிட்டு இருந்தாங்க வேதக்காருங்க. பறத்தெரு பசங்களும், வேதக்கார பொண்ணுங்களை மாசத்துக்கு ஒண்ணுன்னு கூட்டியாந்து தாலி கட்டிக் குடும்பம் நடத்திக்கிட்டு வாழ்க்கையால பதில் சொல்லிக்கிட்டுதான் இருக்காங்க.

சிங்காரக்குளப் பேச்சு வேதக்காரத்தெருவுலேயும் பயத்தைக் கௌறினாலும் பறத்தெருவுக்கு பரவாயில்லைன்னுதான் இருந்துச்சி.

அவன் அவனில் முன்னேறிக்கொண்டுதான் இருந்தான். ஓட்டம் ஓட்டமாய் ஓடிக்கொண்டிருந்தான். அந்த ஓட்டந்தான் மார்ச் 12 அன்னிக்கு பறத்தெரு, வேதக்காரதெருவுல இருந்து மொத்தமா 15 பொம்பளைங்க சிங்காரக்குளத்துல இறங்கி, தண்ணி மொள்ளுவாங்க என்பதில் போய் நின்றது.

அதன்பிறகு மார்ச் 12 நடவடிக்கையை தேசியமாக்கினான். நிகழப் போகும் ரத்தச்சேதம் எந்த நேரமும் நினைவில் இருந்தது. முதலில் நம்பிக்கைக்குரிய பதினைஞ்சு பொம்பளை ஆளுகளைத் தேர்ந்தெடுத்தான்.

இனி அவனில்லை. அவர்கள். பொறி, கனிய ஆரம்பித்திருந்தது.

ஊர்த் தெருவைத் தாண்டி தண்ணி எடுக்க போவப்போற பொம்பளைங்க, கூடப் போக ஆம்பள ஆட்கள், அவங்களுக்கு ஆயுதங்கள், எல்லாமும் பறத்தெரு, வேதக்காரத்தெருவின் சகஜத்தை மீறி நடந்து கொண்டிருந்ததை யாரும் அறிந்து கொள்ள முடியவில்லை, பங்குத் தந்தையைத் தவிர.

அவர்கள், மாரியம்மன் கோவில் மேடையில் படுப்பதைத் தவிர்த்திருந்தார்கள். ரகசியங்கள் கசிந்து ரத்தம் கேட்கலாம். கதவு தட்டப்படும் ஓசையில் அதிராமல் ஆனால் சகல ஜாக்கிரதை யோடும் கதவுக் கொண்டியை நீக்கி வெளியே பார்த்தான்.

எல்லாம் வேதக்காரத்தெரு ஆட்கள். எல்லார் முகங்களும் பயத்தில் தொங்கியது. ஒன்றிரண்டு முகங்களில் ஏமாற்றமும் கோபமும் தெரிந்ததை நிலவு வெளிச்சந்தான் சொன்னது. நேரடியாக விஷயத்துக்கு வந்தார்கள்.

ÜÜநாளன்னிக்கு காலைல நடக்கப்போற நடவடிக்கைல வேதக்காரத்தெரு ஆளுங்க யாரும் கலந்துக்கல. ஒரு ரத்தக்களறிய திருச்சபை விரும்பல. நாங்க பங்குத் தந்தையை மீற முடியாது. வாழ்வோ சாவோ மானமோ மரியாதையோ எல்லாமே எங்களுக்கு அவருதான்.ýý

ÜÜமானம் மரியாதைக்குக் கூடவா?ýý

கேள்வி முடியும் முன்பே கோபத்தோடு பிரிந்தார்கள். அதன் பிறகு வீட்டுக்குள் போக முடியல. பீடியும் புகையுமாய் மாமரத்தைச் சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்தான்.

இது நின்று விடுமா?

தலைமுறை தலைமுறையாக குனிந்த தலைகள் நிமிரவே வழியில்லயா? முதுகெலும்புகளின் நிமிர்வு காண சாத்தியமே இல்லையா?

ஒரு வேளை ஜெயிச்சிட்டா வரலாற்றின் உச்சம். இல்லை, இல்லை. இதில் பின்னடைவில்லை. இத்தனை மாத உழைப்பு, பேச்சு, கோபம் எல்லாம் நாளை மறுநாள் நிரூபணமாகியாக வேண்டும்.

ஆனால் அவன் கவலையெல்லாம் வேதக்காரத்தெருக்காரங்க நடவடிக்கையில பின்வாங்கிட்டாங்கற செய்தி பறத்தெரு சனங்களுக்கு எப்படியும் தெரிந்திடக் கூடாது என்பதுதான்.

ஆனால் விடிந்து வீட்டுக்கு வருவதற்குள் பறத்தெரு முழுக்க செய்தி பரவியிருந்தது.

அவனுடைய üüஅவர்களேýý பெரிசாய் பயந்திருந்தார்கள்.

அவனது எந்தப் பேச்சும் எடுபடவில்லை. அன்றிரவு அவர்களில் பலர் மீண்டும் மாரியம்மன் கோயில் மேடைக்கே படுக்க வந்தார்கள். யாருடனும் பேசப் பிடிக்கவில்லை அவனுக்கு.

üüஎன் மகனாவது சிங்காரக்குளத்துத் தண்ணி அள்ளி குடிப்பானா?ýý

இதுவரை எதுவுமே நடக்காதது மாதிரி அல்லது நடக்க இருந்ததை மாரியாத்தாளா பாத்து ஒதுக்கிவிட்ட மாதிரி ஆழமான உறக்கத்திலிருந்தது தெரு.

ஏதோ கூச்சல் கேட்டுதான் எழுந்தான். கும்பல் கும்பலாய் ஆண்கள், பெண்கள். வேதக்காரத்தெரு ஆட்களும் கலந்திருந் தார்கள்.

üüநம்ம பொண்ணுதாண்டா.ýý

üüஎத்தை வச்சி உறுதியா சொல்ற.ýý

üüவந்தவன்தான் உறுதியா சொல்றானேஙுýý

திகில் பரவிய முகத்தோடு சைக்கிளிலேயே உட்கார்ந்து கால்களைத் தரையில் ஊன்றி நின்றிருந்தான் ஊர்த்தெரு ஆள். பறத்தெரு அடுத்த அரைமணி நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்திருந்தது. தடியும் கம்புமாய் புறப்பட்டவர்களின் இடுப்பில் கொடுவாள் உறைந்திருந்தது.

பொம்பளைங்களை வரவேண்டாமெனத் தடுத்தது கூட்டம். இதை

எதிர்பாக்காதவனாகப் பெரும் அதிர்ச்சியுடன் சைக்கிளை அழுத்தினான் ஊர்த்தெருக்காரன்.

கூட்டத்தில் பொம்பளைங்களும் இருந்ததை யாரும் கட்டுப்படுத்த முடியாமல் போய்க்கொண்டிருந்தார்கள். ஒட்டுமொத்த ஊரே சிங்காரக் குளக்கரையில் நின்றிருந்தது தூரத்திலிருந்தே தெரிந்தது.

கும்பல் அருகில் போனபோது பெரும் அதிர்ச்சியும் பயமும் காற்றில் அலைமோதியது. அதுவரை வாழ்நாளில் அவர்கள் அறிந்திராத திகில் ஒவ்வொருவரையும் கவ்வியது.

ஆம்பளைகளைத் தள்ளிவிட்டு விட்டு பொம்பளைங்கள்தான் குளத்தைப் பார்த்தார்கள். இந்த ஜென்மத்தில் இந்தக் குளத்தை முதன்முதலாய்ப் பார்க்கின்றார்கள்.

குளத்தில் வடக்கால ஓரத்தில் எந்தச் சலனமுமின்றி பாவாடை தாவணியோடு ஒரு பெண்ணின் பிணம் மிதந்து கொண்டிருந்தது.

ÜÜநம்ம காத்தவராயன் மக மல்லிகாடா,ýý அமைதியைக் கிழித்து எழுந்த குரலில் நடுக்கம் இருந்தது.

ஒட்டுமொத்தக் கூட்டமும் குரல் வந்த திசையை நோக்கித் திரும்ப, அவனுக்குப் பொறி தட்டிற்று.

இன்னிக்குக் காலைல குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்க பெயர் கொடுத்திருந்த மல்லிகாų

அழுதுவிடக் கூடாது. வெடித்துவிடக் கூடாது.

சொல்லமுடியாத மௌனத்திலிருந்தான்.

பறத்தெருக்கூட்டம் யாருக்காகவும் காத்திராமல் தபதபவென சிங்காரக்குளத்தில் இறங்கிப் பிணத்தைத் தூக்கியது.

ஒருதலைமுறை கனமாய்ப் பிணம் கனத்தது.

# வேட்டை

தெருவில் மூட்டப்பட்ட கல் அடுப்புகளில் எரிந்த சைக்கிள் டயர்களில் சோறு வெந்து கொண்டிருந்தது. சில சட்டிகளில் புனுகுபூனைக் கறி வத்தல். சாராயநெடி தெருவெங்கும் பனிமூட்டமாய் இறங்கி, உற்சாகமூட்டிக் கொண்டிருந்த சாயங்காலத்தில் ஜப்பான் கிழவன் கிழக்குப் பார்த்துக் கும்பிட்டு தெருவிறங்கினான்.

üநானும் வரேன் தாத்தா.ý

என்ற குரலை அலட்சியப்படுத்தினான். üவேட்டைன்றது எனக்கும் காட்டுக்குமான சண்டைý என்ற குரல் அலட்சியத்திற்குள் புதைந்திருந்தது. இனி அவன் மட்டும்தான். எல்லாமும் அவனுக்கு அலட்சியம்தான். வெகுநாட்களாகவே துயருற்றிருந்தான். துயரம் அவன் பேச்சை உறிஞ்சி விட்டிருந்தது. ஆலமர மைதானத்திலிருந்து மறுக்க, மறுக்க கூட்டிவந்து இந்த ஓட்டுவீட்டில் உட்கார்த்தி வைத்தபோது, அவன் நினைவில் மைதானம் காணாமல் எகிறிப்போயிருந்தது. தூங்கி எழுந்தவுடன் சுவர்களின் முகத்தில் முழிச்சது தாங்கமுடியாமல் இருந்தது. எந்நேரமும் அவன் முன்னால் விரிந்திருந்த மைதான பலியில் அவன் பேச்சை இழந்திருந்தான்.

எதுவுமே பிடிக்கவில்லைதான். அப்புறம் எதுக்கு வாழ?

காட்டுக்கு... இவனோடு சதா மல்லுக்கட்டிக் கொண்டிருப்பது அதுதான். இவன்தான் எப்போதும் ஜெயித்துக் கொண்டிருந்தான். கொஞ்சம் கொஞ்சமாக காடு இவனிடம் இழந்து கொண்டிருந்தது தன்னை.

தெருவில் கால் வைத்த நிமிஷம் எதிரில் பெரிய பெரிய வாத்யக் கருவிகளோடு வேதக்காரர்கள் கரேலென்ற அட்டை போட்ட தடிதடியான புத்தகங்களோடு எதிர்ப்பட்டார்கள்.

üஇவனுங்க வேற...ýமுணுமுணுத்தான். üகுர்யகாரனுங்க கிட்ட என்னத்த கண்டுட்டானுங்க... ராத்திரில, காட்ட சுத்தற பையனுங்களைக் கூட்டி வச்சிக்கினு பாட்டு பாடி... கத்தி, கூப்பாடு போட்டு... ச்சேய்...ý

ரோட்டுக்கு வந்துவிட்டிருந்தான். பஸ், லாரி சப்தங்களால் அதிர்வுற்றான். சத்தம் எப்போதுமே பொறுக்க முடியாததுதான். ஆலமர

மைதானம்தான் ஒட்டிக்கிடந்தது மனசோடு.

மரத்தை விட்டுவிட்டு, இவனை வேரோடு பிடுங்கி வந்து தெருவில் நட்டார்கள். துளுக்காமல், கொள்ளாமல் மரக்கட்டையாய் கணக்குக்கு நின்றுகொண்டிருந்தான் ஜப்பான் கிழவன்.

தோளில் தொங்கிய திட்டுத்திட்டாய் தீட்டுக்கரை போலப் படிந்திருந்த தோல்பையில் புதைந்திருந்த  கண்ணிகளின் கனம் கனத்தது.

கொஞ்சநேரம்... கொஞ்சமே கொஞ்ச நேரம் கண்ணிகளை அவிழ்த்து, சிக்கெடுத்து காட்டில் பரத்தி... இந்த நினைவுகள் மட்டுமே அவனை ஈரப்படுத்திக்கொண்டிருந்தன. சுத்தி, சுத்தி முகத்தில் நெருப்பள்ளிக் கொட்டின வாழ்வில் முகம் கருகி, நாக்கு வெளித்தள்ளி செத்துப்போயிருப்பான். இந்தக் காடுதான் காப்பாற்றியது.

ரோட்டிலிருந்து ஒத்தையடிப் பாதையில் இறங்கின கால்கள். தார் ரோட்டை மறுத்து மண்ரோட்டில் இறங்குகின்றபோதே ஜப்பான் கிழவன் காட்டோடு மல்லுக்குத் தயாராகின்றான். வெறி ஏறுகிறது ரத்தத்திற்கு... ÿமாட்டேன்... மாட்டேன்...ý என்று கதறக் கதற... இவன் வெளியேறும்போது அதன் குழந்தைகுட்டிகளைக் குத்துயிரும், குலையுயிருமாக இழுத்துக்கொண்டுதான் போகிறான்.

நரைத்துத் துடிக்கும் காவியேறிய மீசையின் பக்கத்தில் வெற்றியின் சிரிப்பு வந்து மறைவதும் அந்த நேரத்தில் மட்டும்தான்.

மண்தரையில் பட்டவுடன் சனிமூலையில் கும்பிட்டான்.

வேலிக்காத்தான் முள் இடதுகால் பெருவிரல்பட்டுத் தைத்தது.

அனாவசியமாகக் காலை மேல் தூக்கிப் பிடுங்கி எடுத்தான். ரத்தம் கசிந்தது. எச்சிலை மண்ணில் தொட்டு ரத்த வாயில் பூசினான்.

நடந்தான்... எப்போதும் செருப்பு போடறவங்களைப் பாத்தா எகத்தாளம்தான் கெழவனுக்கு. செருப்பு சத்தத்துல ஒரு மொசக்குட்டிக்கூட ஓடிடும்.

ஆலமர மைதானத்தில் மல்லாந்து கிடந்தபோது, எதுவுமற்று இருந்த

மனசிருந்தது. ஒத்தையடிப் பாதையின் கடேசியாய் இவன்முன் சண்டையிட்டு நிற்கப் போகும் காடு பெரும் ஆரவாரமான காற்றோடு பயமுறுத்திக் கொண்டிருந்தது.

இருட்டிக் கொண்டிருந்தது. இவனுள் இவன் மட்டுமே இருந்த நாழிகை அது. எதுவுமற்று அம்மணமாய் இருந்தது மனசு. பார்த்தான். எதிரில் தன் ராட்சதச் சிறகை விரித்து இவனை அப்படியே அலகில் குத்திக் குதறித் தூக்கிப் போக நின்று கொண்டிருக்கும் அந்தக் காட்டை.

இந்தக் கணங்களில்தான் இவன் பயமற்றுப் போகிறான். அச்சங்கள் உதிர்த்து லேசாகிறான். காற்று மாதிரி உரிமையோடும், அந்நியமற்றும் காட்டுக்குள் நுழைகிறான்.

இருட்டிவிட்டிருந்தது.

குளிர்ந்த காற்று முகத்திலடித்தது. நிதானமாக மடியைப் பிரித்து புகையிலையை எடுத்து வாய்க்குள் அதக்கினான். இது அவன் உலகம்.

அவசரமற்ற உலகம். அவசரம் சீவனை உசுப்பி விடும். ஒரு நீண்ட இரவு அவனுக்கு மட்டுமே இந்தக் கானகத்தில் காத்திருக்கிறது. எதற்கு அவசரம்?

தாலியறுத்தான் பாறையில் ஏறினான். ஏறும்வழி பழகிவிட்டிருந்தது. அம்மாவாசைக்கு முந்தின ஐந்து நாட்களும் பிந்தின ஐந்து நாட்களும் வேட்டைக்கு உகந்தவை. வெளிச்சமற்ற இரவுகள் ஆள் வருவதை சீவன்களுக்கு உணர்த்தாது. வெளிச்சத்துக்கு எப்போதுமே டார்ச் லைட் கிடையாது. கண்கள்தான் சுற்றிலும் சாம்பல் பூத்து நடுவில் மணி மணியாய் ப்ரவுன் கலரில் மின்னுதே அதைவிடவா செல் அடைத்த டார்ச் லைட்?

போன வாரம் பெய்திருந்த மழைக்கு ஆப்பு சுலபமாகத் தரையிறங்கியது. மெல்ல கண்ணிகளை விடுவித்தான். நிதானம்.. நிதானம்...

ஒவ்வொன்றாய் தரையில் நிற்கின்றன. இழுத்துக் கொண்டே நகர்கின்றான். இரும்புச் சங்கிலிகளின் அசைவுகள்கூட அவன் கட்டுப்பாட்டிலிருந்தது. செவடன்குளக் கிழக்குப்படிவரைக்கும் வந்தது கண்ணி.

ஏறி நிதானித்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை பச்சை அடர்ந்த இருட்டு. அண்ணாந்தான். தூரத்தில் வெளிச்சமற்ற ஒன்றிரண்டு நட்சத்திரங்கள். மழை வரும்போலிருந்தது. வரட்டுமே. அதனாலென்ன?

என்ன வேணுமானாலும் வரட்டும். கானகத்தின் தலை உச்சியில் நின்று அதையே வம்புக்கிழுப்பது போல ஒரு பார்வை பார்த்துத் தீர்மானித்தான்.

ப்சனி மூலைக்கும் செவடன் குளத்துக்கும் நடுவுல...ýý

என்னைக்குத் தப்பியது அவன் கணக்கு? ஞாபகமாய் மடியில் வைத்திருந்த கற்பூரம் பற்ற வைத்து, சனிமூலையைப் பார்த்து மீண்டும் ஒரு கும்பிடு. கண்ணிக்கும் அவனுக்குமான உறவு சட்டென அறுந்து போனது மாதிரி ஒரு உணர்வு அவனுக்குள் ஏற்பட்டது. தற்காலிகம்தான். மண் முழுவதும் வெற்றுடம்பில் ஒட்ட குளக்கரையின்மேல் படுத்து கண்ணிமேல் கண்வைத்து நேர் பார்த்தான். எதுவும் தவறவில்லை.

நடந்தான்.

இனி நடைதான். நடை மட்டும்தான். கிழக்கிலிருந்து தெற்காகக் கால்களைத் தள்ளிப் போட்டான். கால் எலும்புகளுக்கு உடும்பு வத்தல் வலுவேற்றியிருந்தது. தேய்ந்த பாதை வழிகாட்ட இரட்டைச் சலங்கை கட்டிய கம்பை ஊனியும், விசிறியும் நடந்தான். இரண்டு பக்கத்துப் புதர்களும் மரங்களும் அவனுக்கு அத்துப்படி.

காட்டில் சமீபமாக, குழிவெட்டிப் புளியங்கன்றுகள் நட்டிருந்தது கோபமூட்டியது அவனுக்கு. ப்வேலையத்த... வேலை...ý என்று காவியேறிய மீசை துடித்தது. ப்ஆண்டவனுக்குத் தெரியாதா... இந்தக் காட்டு சீவன்களுக்கு என்ன என்ன மரம்?... என்ன என்ன தழைன்னு?... புளியங்கண்ணு வைக்கறானுங்க... புளியங்கண்ணு... மசுருல...ý கோபத்தில் ஒரு மரக்கன்றைக் குழியிலிருந்து பிடுங்கினான். வரவில்லை.

வலுவாய் பூமியில் ஊனிவிட்டிருந்தன வேர்கள். ஆத்திரத்தோடு கைகளை விடுவித்து, கையிலிருந்த கம்பால் மேல் நுனியில் அறுத்தான். நுனிக்கிளை துளிரோடு வீழ்ந்தது. பாதி வெற்றியும், மீதித் தோல்வியுமாய்

நடந்தான்.

நுணாத் தழையைக் கொத்தாய்ப் பறித்து முகர்ந்தான். காட்டுவாசம் மூளைக்கேறியது. சின்ன சின்ன டூம் லைட்டுகளாய் பழுத்திருந்த நுணாப் பழத்தைக் கொத்தாய்ப் பறித்து வாயில் போட்ட மறுநிமிஷமே துப்பினான். கொட்டைகளாய் வந்து விழுந்தன.

இன்று, நேற்றல்ல அம்பது அறுபது வருசமா நடக்கின்றான் இந்த திப்பக் காட்டுல. தெக்கால போயி மேக்கால திரும்பி மீண்டும் அவன் கண்ணிக்கு சமீபிக்கும்போது விடிந்துவிட வேண்டும். இது கணக்கு? இது தப்பக்கூடாது. கடவுளே இதில் தப்பு பண்ண முடியாது. சுத்தி, சுத்தி சேத்து வைக்கும் காசில் எருமைக்கடா வெட்டுவதெல்லாம் இந்தக் கணக்கு தப்பாமலிருக்கத்தான். அதைப்போய் வேண்டான்றானுங்க... புடிக்கலை... காட்டை வுட்ருன்றானுங்க முடியுமா? கடை வச்சி தராங்களாம் கடை...

தனித்த நடையில் பழைய நினைவுகள் வரிசையிட்டன.

இப்படித்தான் சித்திரை மாத இருட்டு. எதிர்பார்க்காத மழை. திமிற முடியலை. திரும்பி ஓடி தாலியறுத்தான் பாறைக்கு கீழேயே குத்துக்காலிட்டு உட்கார்ந்தான். வெள்ளம் புரள மழை நின்றதும், பாறை மீதேறி நின்று பார்த்தான். எங்கும் இருள் அப்பிக் கிடந்தது. இவன் டார்ச் லைட் கண்கள் அடைந்து போயிருந்தன. எதன் மீதும் ஊடுருவமுடியாமல், தூறலினூடே நடந்தான். சில்லிப்பான விடியல், அவன் கண்ணிகளில் நாலைஞ்சு காட்டுப்பன்னி. நம்ப முடியாமல் கண்களை அழுத்தித் துடைத்துப் பார்த்தான். அந்த இடமே துவம்சமாகி இருந்தது. அரையடி, ஒருஅடிக்கு குழி விழுந்து கிடந்தது. பன்றிகளின் மூர்க்கத்தனம் குழிகளின் ஆழத்தில் தெரிந்தது. மர திம்மைக்குப் பின்புறம் மறைந்து நிதானித்தான். ஒண்ணும் வழியில்லை. திரும்பி ஊர்ந்தான். புதருக்குப் புதர் நிமிர்ந்து பார்த்தான். பன்னிகளின் உறுமல் கானகத்தை நடுங்கச் செய்து கொண்டிருந்தது.

துணையின் அவசியம் ஒரு நிமிடம் புரிந்தது. மறுநிமிடம் மனதால் நிராகரித்தான். ஒத்தையடிப் பாதை பிடித்து ஓடிக்கொண்டிருந்தான், மூச்சிரைத்தது.

அப்பொதெல்லாம் நாலு சுவரற்ற ஆலமர மைதானம்தான். சத்தம் போட்டு பேரம் பேசி மதுரையோடு துப்பாக்கி சகிதம் ஓடலான நேரம், சூரியன் சுர்ரீரென உறைக்க ஆரம்பித்து விட்டிருந்தான்.

தூரத்திலிருந்தே அடையாளம் காட்டினபோது இரண்டு தப்பித்திருந்தது. அறுந்த கண்ணிகள் இவனைக் கலவரமூட்டியது. வெடிச்சத்தத்திற்கு மீதி இரண்டும் சாய்ந்தது.

கூட்டமே கறி தின்று குடித்தது. வந்த விலைக்கு கவுண்டர்களுக்கு வாரிக் கொடுத்தான். மல்லாட்டைக் கூடைக்கு ஒரு கூறு வாரி வைத்தான்.

அந்த மாதிரி நாட்களின் தெம்புதான் இந்த நடை.

மேற்கால திரும்பிவிட்டிருந்தான். கம்பின்மேல் எகிறி கொத்துகிறது. நல்லது இல்லை. விரியன்... நிதானித்தான். உடம்பெல்லாம் கண்ணாடி கண்ணாடியாய்... கண்ணாடி விரியன். நாலடி பின் நகர்ந்து ஓடிப்போய் நடுமுதுகில் எட்டி உதைத்தான். பொத்தென்ற சத்தத்தோடு புதரில் விழுந்தது கேட்டது. திரும்பிப் பார்த்து நடந்தான்.

சத்தம் போட்டு ஜீவன்களைத் துரத்தினான். எந்த அரவமும் இல்லை. சலங்கைக் கோல், காற்றில் விளையாடிக்கொண்டு வந்தது. புதரின் அசைவுக்கு நின்றான். மரம் மாதிரி நின்று, புதருக்குள் கண்களால் நுழைந்தான்.

அஞ்சாறு காட்டுப் பன்னிக்குட்டிகள். நேத்து ராத்திரி அல்லது இன்னிக்கு முன்னேரம். ரத்தப் பிசுபிசுப்பு கையிலெடுத்த குட்டியில் தெரிந்தது. சகிக்கமுடியாத சத்தம் போட்டுக் கொண்டேயிருந்தது. இவற்றைக்கூட வாரிக் கொண்டு போன நாட்கள் உண்டு. அது காசிம்மாவுக்குமுன்.

தாய்ப் பன்னியின் மூர்க்கத்திற்குப் பயந்து சட்டென சகல ஜாக்கிரதையோடும் நடந்தான்.

ரத்தப்போக்கை நிறுத்தமாட்டாமல், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு தூக்கினுபோய், அந்த டாக்டர் முண்டைங்க அவளைத் தொட அருவருப்படைந்து... ஜன்னி வந்து செத்துப் போனதுக்கு அப்புறம்... எதன்

குட்டிகளையும், குஞ்சுகளையும் தொடறதில்லை காசிம்மாள் நினைவாக.

கண்ணியைச் சமீபித்தபோது விடிந்து கொண்டிருந்தது. பரபரப்பு அடைந்து சுற்றிய கண்களுக்கு, வெறுமைதான் மிஞ்சியது. ஒண்ணுமேயில்லை. ஒரு புனுகுப்பூனைகூட இல்லை. நாலஞ்சு தடவை கண்ணியின் தூரத்திற்கு நடந்து பார்த்தான். எந்த ஜீவனின் காலடியும்கூடத் தெரியலை.

வாழ்வின் முதல் தோல்வி. ஆடிப்போனான்.

கால்நீட்டி தரையில் உட்கார்ந்தான். பிருஷ்டத்தில் சுரீரென முள்குத்தியது. துடித்துப் பிடுங்கினான். காரமுள். மலைக்க மலைக்கப் பார்த்தான். காடு வெற்றிக்களிப்பில் காற்றில் கூத்தாடிக் கொண்டிருந்தது.

ஆப்பு பிடுங்கி கண்ணிகளை அவிழ்த்தான். அதன் மீதான தொடலே அருவப்பாய் இருந்தது. இதுவரை ஏமாற்றினதில்லை. ஒரு மொசக்குட்டியாவது மாட்டியிருக்கும். என்ன ஆச்சினே யோசிக்க முடியல.

எப்படி வெறுங்கையோட போவ? ́இன்னா தாத்தா கொண்ணாந்தே...ý்ன்ற கேள்விக்கு என்ன பதில் சொல்வேன்?

ரத்தக்கறை படிந்த பையிலிருந்து சிறுங்கண்ணி வலையெடுத்தான். எப்போதும் பையில்தான் கிடக்கும். ராத்திரி முடிஞ்சு அப்படியே பகலுக்கும். இதை இதுவரை எடுத்ததில்லை. எப்பனா... பகல்ல... மைனா, காடை, கௌதாரி குஞ்சு புடிக்கத்தான். இந்த வெறுமை, இதை எடுக்க வெச்சிருச்சி...

சிறுங்கண்ணிக்குப் பறவைகளை அழைத்து, அழைத்துச் சோர்ந்தான். முடிச்சிலிருந்த கேவுரும், கம்பும் கண்ணிக்கருகில் கேட்பாரற்றுக் கிடந்தன. காடை கத்தல், கௌதாரிக் கத்தல் எல்லாமும் அன்று எதன் காதுக்கும் கேட்காமல் போனது.

காடு, காற்றின் சத்தத்துக்கு வெறியாட்டம் போட்டு இவனை வெறிகொள்ள வைத்துக் கொண்டிருந்தது.

கண் இருட்டிக்கொண்டு வந்தது. செவடன்குளத்துத் தண்ணி எத்தனை

வேளை பசியாற்றும். உடும்பு வத்தல் குழம்பும், சுடுகளியும் நேத்து சாயங்காலம் சாப்பிட்டது. வெய்யில் வேறு. சகல வித்தைகளும் பிரயோகிக்கப்பட்டு தோற்றுக் கொண்டிருந்தன. கண்ணியைச் சுருட்டக்கூட மனமின்றி நடந்தான்.

காட்டோடு அவனுக்கிருந்த பந்தம், பாசம், உரிமை எல்லாம் விடப்பட்ட மாதிரி இருந்தது. காவி மீசைக்கருகில் இருந்த புன்னகை செத்துத் தொங்கிக் கொண்டிருக்க, மண்ணுக் கோனார் பம்புசெட் வழியே ரோடேறினான்.

எட்டிப்போட்ட நடை தளர்ந்திருந்தது. யாராவது ஒரு டீத்தண்ணி வாங்கித்தர மாட்டார்களா... என்றிருந்தது.

வெற்று பை தோளில் தொங்க, எதிர்ப்பட்ட பழக்கதாரர்களின் üüஇன்னாடா இருக்கு...ýý என்ற கேள்விகளை முற்றாக நிராகரித்து கைவிரித்துக் காட்டிப் பேச மனமின்றி நடந்தான்.

அவன் தெரு அவனைப் பழித்துக் காட்டுவது மாதிரி நின்றுகொண்டிருந்தது. விளக்குகள் ஏற்றிவைத்துக் கொண்டிருந் தார்கள். வேதக்காரர்களின் மேடையில், ஒரே பாட்டும், சத்தமுமாய் இருந்தது. இவன் வீட்டைச் சமீபித்திருந்தான்.

மருமகக்காரியும், பேரனும் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டு தெருவுக்கு வந்துவிட்டிருந்தார்கள். தளர்ந்து போயிருந்தான். தூரத்திலிருந்த பாட்டு தெருவெங்கும் நிரம்பியிருந்தது. மெர்க்குரி வெளிச்சத்தில் ஆறேழு பெண்கள் பாடிக் கொண்டிருப்பது தெளிவாய்த் தெரிந்தது.

ஆத்துமமே என் முழு உள்ளமே - உன்

ஆண்டவரைத் தொழுதேத்து - இந்நாள்வரை

அன்புவைத்தா தரித்த உன் ஆண்டவரைத் தொழுதேத்து

எப்போதும் இல்லாமல், இப்போது அவன் மனதில் கசிந்திறங்குகிறது பாட்டு.

அடிபட்ட காயங்களுக்குத் தவிட்டு ஒத்தடம் தருகிறமாதிரி,

வலியெல்லாம் கரைந்து போகிறது, சீவனைப் பற்றியிழுத்துக் கொண்டிருந்தது பாட்டு.

இவன் வீட்டின்முன் நிற்காமல், தாண்டி, மேடையை நோக்கி போய்க் கொண்டேயிருந்தான்.

கண்ணிகள் இவன் பையில் பத்திரமாக இருந்தன.

# பச்சை இருளன்

புகை தந்த மயக்கத்தில் திமிறிச் சரிந்தன எலிகள். மூன்று நாள் அடைமழை தாங்கும் நிலவொளிக்கு பயந்து இதமான சூட்டில் தன் வளைகளின் நீளத்தை விஸ்தரிக்க எத்தனித்த பொழுதில்தான் இரண்டு பக்கங்களிலிருந்தும் புகை. தப்பிக்க நினைத்த பக்கங்களிலெல்லாம் செம்மண் பூசி மெழுகி இருந்தது. கூர்மையாகிப் போயிருந்த முகமும், விஷமேறிய பற்களும் மண்ணின் பலத்தில் சிதிலமடைந்தது. திட்டமிடப்பட்ட தாக்குதலில் தப்பிக்க வழியில்லை. கிழக்குப் பக்க வளைமீது கவிழ்த்து வைக்கப்பட்ட மண்சட்டியில் கங்கு வெறித்தனத்தோடு புகைந்து கொண்டிருந்தது. தேடித்தேடி மற்ற வளைகள் செம்மண் பூசலால் அடைந்து போயிருந்தன. உடைந்த சட்டியில் புதைந்திருந்த வன்மம் நிறைந்த வாய், வெற்று வெளியிலிருந்து காற்றைச் சட்டிக்குள் புகுத்தி புகைபரப்பிக் கொண்டிருந்த கொலைவெறியில் இருந்து தப்பிக்க முடியாமல் திமிறிச் சரிந்த ராஜ எலியை, வெளியே கொண்டு வந்து காலில் சங்கிலி பிணைத்து, இரண்டு கைகளும் பின்பக்கமாக அழுக்கேறிய வேட்டியால் பிணையப்பட்டு, அசைவற்று கிடந்த பச்சை இருளனை ரெட்டை மாட்டு வண்டியிலேற்றி, கூட்டு மொளையில் இழுத்துக் கட்டியிருந்தார்கள். உடன் வண்டியிலிருந்தவர்களின் முகங்களும், பின்னால் நடந்தவர் களின் முகங்களும் மரணத்தால் வெளிறிப் போயிருந்தது. உடம்பின் நடுக்கத்தில் கால்கள் பின்னி மாடுகள் அசைவின்றி நின்றிருந்தன. மரணத்தால் பயமேறிப் போயிருந்த ஆட்கள் அதே வெறியோடு வால்களைக் கவ்வி மாடுகளை விரட்டினார்கள். செய்தி காற்றில் அலைந்து மலைக்குன்றுகளின் இடை வெளிகளில் நுழைந்து ஊரெங்கும் பரவியது.

வெளியே வர பயந்த மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி ஊரை அமைதியாக்கியிருந்தனர். கிடைகளில் நிலவிய அமைதி, மொத்த ஆடுகளும் மரணித்த சந்தேகத்தைக் கோனார்களுக்கு அவ்வப்போது உருவாக்கியும், பயந்து மிரண்ட அதன் கண்கள் அவைகளின் இருப்பையும் மாறி மாறி சொல்லிக் கொண்டிருந்தது.

அந்த இரவு வன்மம் நிறைந்ததாயிருந்தது. பச்சை இருளனின் முழிப்பிற்கு எதிர் நிற்க வலுவற்றுப் போயிருந்தது ஊர். குரலறுந்த கறுப்பு நாய்கூட கூரைவீட்டுச் சந்தில் அசைவற்று படுத்திருந்தது. அதையும் மீறி அதன் மேலும், கீழும் அசைந்த வயிறு பார்த்த எவரையும் பயமுறுத்தியது.

நீண்ட யோசனைக்குப் பின்பே பண்டாரியார், ஜமீன் கடடிடத்தின் வாசலில் அடர்ந்திருந்த மகுட மரத்தில் கட்டச் சொன்னார். மயக்கத்திலிருந்த பச்சை இருளன் குபீரெனத் தாக்கிய மகிழம்பூக்களின் வாசனையில் கண்விழித்தான். நிதானிக்க சில நாழிகைகளே போதுமானதாய் இருந்தது. கறுப்பேறி வளைந்த நூக்க மர நாற்காலியில் சாய்ந்திருந்த பண்டாரியார், அவன் முழிப்பில் அச்சப்பட்டு நாற்காலி நுனிக்கு வந்திருந்தார். சுற்றிலும் நின்றிருந்த ஆட்கள் அவன் முக அசைவுகளிலேயே புதைந்திருந்தனர்.

எவர் கண்ணும் தவறியும் பச்சை இருளனின் பக்கம் திரும்பாமல் இருந்தது. பண்டாரியாரின் பிள்ளைகள் மட்டுமே பயமற்று இருந்தனர். குன்றுகளுக்குள் அமைக்கப்பட்டிருந்த தன் வம்ச வழி அரண்மனை, சுற்றிலும் காவலிருந்த அடிமைப் பறையன்கள், அப்பாவின் கண் அசைவிற்கு நின்ற ஊர், தோட்டு, கம்பத்தம் எல்லாமும் அவர்களுக்கு உரமேற்றி இருந்தன. கேள்விப்பட்டிருந்த பச்சை இருளனின் இரவுகள் பயமேற்றி இருந்தாலும் இப்போது முற்றிலும் வேறுமாதிரியான ஆட்களாகி அவனை வேடிக்கைப் பொருளாக்க எத்தனித்தார்கள். நிதானமற்று போயிருந்த கண்களில் ஒவ்வொருவனாகக் கொண்டு வந்து கொண்டிருந்தான் அவன். அந்தப் பார்வைக்கு பயந்து, நின்ற இடத்திலேயே புதர்களில் பதுங்கினார்கள். எல்லோருக்கும் தெரிந்திருந்தது, அவன் உறுமி உதறும் ஒரே உதறலில் உயிருக்குப் பயந்து ஓடப்போகும் பெருநரிகளும்,

மூர்க்கத்தால் உருவேறியிருந்த துஷ்டமிருகங்களும் அவன் உடம்புக்குள்ளேயே படுத்திருக்கிறது என்பது.

மௌனம் அதுவாகவே உடைந்தது. சகடை வண்டியை இழுத்து வர நாலைந்து ஒட்டர்கள் ஓடினார்கள். ஒருவரும் ஒரு வார்த்தையும் பேசாமல் வண்டியின் மேல், சுற்றிலும் கம்பிப் பூண் போட்ட இரும்புக் கூண்டை ஏற்றினார்கள். கண்களில் நெருப்புத் துளிகள் உருள, பெரும் மூர்க்கத்தோடு படுத்திருந்த பெருநரி எழுந்து உள்ளுக்குள்ளேயே நடமாட ஆரம்பித்தது. பண்டாரியாரின் பெரும் கத்தலுக்கு சகல பணிவோடும் எதிரில் நின்றான் கட்டைய இருளன். நரியற்று இருந்த வேறு கூண்டு மகுடமரத்தை ஒட்டி நிறுத்தப்பட்டது. இறுகி இருந்த கட்டை அவிழ்க்க முடியாமல் கட்டைய இருளனின் கைகள் நடுங்கின. அவன் பார்வை மகுடமரத்து வேர்வரை போயிருந்தது. அடி திம்மையளவிற்கு நீண்டிருந்த பச்சை இருளனின் தொடைகளைச் சந்திக்கவும் திராணியற்று இருந்தான். திமிராமல், முரண்டு பிடிக்காமல் அவமானப்பட்டிருந்த அவனைக் கூண்டுக்குள் இழுத்துப் பூட்டவே முன்னிரவு முழுக்கத் தேவையாய் இருந்தது. தலை கூண்டுக்குள் நுழையும்போது கம்பிகளுக்கிடையே ஜமீன் மாடியிலிருந்து ஒளிர்ந்த பச்சை மரகத வெளிச்சம் பட்டு கண்கூசினான். சுற்றிலும் இருந்தவர்கள் வெளிச்சப் பிரக்ஞையற்று இருந்ததையும் அவன் கவனித்தான்.

ஜமீனுக்குள் அடைபட்டிருந்த பச்சை மரகத லிங்கத்தைப் பற்றிய செய்தியை ஊர் தேக்கி வைத்திருந்தது தெரியும் அவனுக்கு. யாராலும் நெருங்க முடியாத அதன் வெளிச்சம் அவனை கதிகலங்க வைத்திருக்கிறது. அதை நகர்த்திவிடத் துடித்த பொழுதுகளை, கேள்விப்பட்டிருந்த கதைகள் தடுத்திருந்தன. ஊரும் உலகமும் நெருங்க முடியாத தூரத்திலும், பாதுகாப்பிலும், அழகிலும் உறைந்து போயிருந்த பச்சை மரகத வெளிச்சம் அவனை ஒன்றுமில்லாதவனாக்கி இருந்தது. பெண் ஸ்பரிசம் படாமல் முறுக்கேறியிருந்த உடம்பு லகுவாகிக் கொண்டிருந்தது.

கம்பிக் கதவுகள் சாத்தி இரும்புப் பூண் இழுத்து பூட்டப்பட்ட போதும் அசைவற்று இருந்தான். ஆள் கூண்டின் தரையில் கால் ஊன்றி, எழுந்து நின்று அசைகிற அளவுக்கு அனுக்குமலை தச்சனால் மெருகேறி

இருந்தது நரிப்பூண். அன்றைய பின் இரவு முழுக்க நின்று அசையாமல் ஜமீன் வீட்டின் மேல்மாடியில் ஒளிர்ந்த வெளிச்சத்தையே தேடிக் கொண்டிருந்தான் பச்சை இருளன்.

பயத்தில் உறைந்திருந்த ஊரை, பெரிய தொந்தாலியின் தமுக்கு சத்தம் எழுப்பிவிட்டது. ஐப்பசிக் குளிரில் சில்லிட்டிருந்த உடம்புகளில் ஆர்வமும், பயமும் பரவ வீட்டின் வெளியே வராமல் உள்ளுக்குள்ளேயே மறைந்து, மறைந்து தெருவை கவனித்தார்கள்.

தொந்தாலியின் தமுக்குச் சத்தத்தினூடே சகடை வண்டி கட்டைய இருளன் வகையறாக்களால் மெல்ல அசைந்து வந்து கொண்டிருந்தது. பெரும் சத்தத்தில் பெருநரி கூண்டுக்குள் குதிகாலம்போட்டு, எட்டி நடை நடந்து, கம்பிகளில் மோதி காயம் பட்டுக் கொண்டது. எதன் மீதும் பற்றற்றவனாய், ஆனால் கண்கள் எதற்கோ ஏங்குபவை போலக் கூண்டுக்கு வெளியே நின்ற பச்சை இருளனின் முழு உருவம், பெருநரியைப் பயமுறுத்தி உடனேயே கூண்டுக்குள்ளேயே படுக்க வைத்தது.

தெருத்தெருவாய் சகடை வண்டி இழுபட, பேச்சற்று நின்று கொண்டிருந்தான். மண்ணில் ஊனப்பட்ட விதைகளின் பாதி முளைப்பாய், மர ஜன்னல்களில் பாதிப்பாதி கண்கள் முளைத்தும், மறைந்தும் அவனுக்குப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தன. அந்த ஊர் சுற்றலின் அவமானம் அவனுக்கு இல்லாமல் இருந்தது. சகடை வண்டி கூண்டில் அடைபட்ட நிமிடத்தில் அந்த வெளிச்சம் மட்டும் தென்படாமல் போயிருந்தால், இந்த கூண்டும், பெரு நரியும், இழுத்துக் கொண்டிருக்கிற கட்டைய இருளனின் வம்சமும் இன்னேரம் அற்றுப் போயிருந்திருக்கும்.

எதிர்பாராமல் தெருவில் எதிர்ப்பட்ட சில பெண்கள், திகிலடைந்து கையெடுத்துக் கும்பிட்டார்கள். மறைந்து பார்ப்பதில் தான் பெரும்பாலோர் ஆர்வப்பட்டனர். அவன் தெருக்களையும், அதன் பகல் நேரத்துத் தன்மைகளையும், வீட்டோடு ஒட்டியிருந்த படப்புகளையும் பார்த்தபடி பின்னால் திரும்பினான்.

எந்த வீட்டு ஆட்டுப் படப்பிலும் கைவிட்டு, மென்னி திருகி, கழுத்தில் தூக்கிப் போட்ட வெள்ளாட்டுக் கிடாய்களும், செட்டியார்

வீடுகளில் ஓட்டைப் பிரித்து இறங்கி அற்றுக் கொண்டுபோன நகைகளும், ஜமீன் களஞ்சியத்தில் நுழைந்து வாரிக் கொண்டு வந்த தானியங்களும், எல்லாவற்றிக்கும் மேலாக கோட்டாங்கல் குன்றும் நினைவில் முட்டியது.

இரவின் எந்த நாழிகையிலும் அவன் வரவை எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும் கோட்டாங்கல் குன்று. அவன் பாத அசைவுகளில் மேலும் இறுகும் பாறை, அவன் வாரிக் கொண்டு வரும் எதையும் இழுத்து தன்னுள்ளே வைத்துக் கொண்டு, ஒன்றும் தெரியாமல் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும். கோட்டாங்கல்லின் அடிப்பாறை சந்தில் எந்த இரவிலும் கண்ணில் நெருப்புருள ஒன்றிரண்டு பெரு நரிகள் படுத்திருக்கும். அதுதான் இவனுக்குக் காவல். இதுவரை எந்த சீவனையும் கோட்டாங்கல் குன்றை எட்டிக்கூடப் பார்க்கவிடாமல் வைத்திருந்தது. ஊர் எப்போதும் கோட்டாங் கல்லையும், அதன் உள்ளே இருந்த பச்சை இருளனின் தனி ஜமீனையும், யாரும் நெருங்க முடியாத அதன் வலிமையையும் பேசியதாகவே எப்போதும் தூங்கும்.

இனி எப்படி கோட்டாங்கல் முகத்தில் முழிப்பேன் என்ற அவமானம் மட்டும்தான் இப்போது அவனிடம் இருந்தது. தன் பாதம் பட்டு உருகி தன்னையே இழுத்துக் கொள்ளுமா கோட்டாங்கல் பாறை? தன் தோல்வியின்மீது பாய்ந்து தன்னைக் குதறி எடுக்கப்போகும் பெருநரிகளுக்குப் பயந்தான். கோட்டாங்கல்லின் அடியில் தான் போட்டு வைத்திருக்கும் நகைகள், தானியங்கள், கிடாய்கள் எல்லாவற்றையும் அந்த விநாடியே விட்டுவிட்டு ஜமீன்மாடியில் ஒளிர்ந்த அந்த வெளிச்சத்தில் அடைக்கலம் தேடினான்.

வெயில் ஏறிக் கொண்டிருந்தது. கட்டைய இருளன் சோர்ந்து போயிருந்தான். மாரியம்மன் கோவில் அரச மரத்தடியில் நின்றது சகடை வண்டி. கோயில் மேடையில் சப்பணம் போட்டு உட்கார்ந்து நீராகாரம் அருந்தினார்கள் கட்டையன் வகையறாக்கள்.

பச்சை இருளன் கைச்சைகை காட்டிக் கட்டையனை அழைத்தான். திறந்து விட்ட மடை மாதிரி ஓடி நின்றான் அவன்.

üüயார் அவ? ýý

இதற்காகவே காத்திருந்தவன் போல, மாடுகள் தெறித்து விடப்பட்டிருக்கும் சகடை வண்டியின் நுகத்தடியின் மேல் ஏறி நின்று முதன் முதலில் பச்சை இருளனின் முகம் பார்த்து சொன்னான் கட்டைய இருளன்.

ü்ü்தொரையின் ஒரே தங்கச்சி.ý́ý́

ஒளிரும் அந்த மரகத வெளிச்சம் மீறி, பெரும் துக்கம் சூழ, அவள் அழகில் தினம் தினம் அவளே இறுக, துருவேறிய காலம் உதிர, ஒரு ஆணின் தீண்டலுக்கான பல நீண்ட வருடங்களின் காத்திருத்தல் அது.

தெருத்தெருவாய் சகடை வண்டி உருண்டதையோ, பெரும் சோர்வோடு மாடுகள் ஜமீன் குன்றில் ஏறியதையோ, மீண்டும் மகுட மரத்தின் அடியிலேயே சகடை வண்டியிலிருந்து இறக்கப்பட்ட கூண்டுகளில் ஒன்றில் தான் அடைபட்டு நிற்பதையோ, அவன் மறந்திருந்தான். நேர் எதிரே சாத்தப்பட்டிருந்த ஜன்னலை மீறி வெளியே பரவியிருந்த வெளிச்சத்தில் மயங்கி இருந்தான்.

இரண்டாம் ஜாமம் முடிந்த அடுத்த நிமிஷம், எட்டி எதிர் கூண்டு பெருநரியின் வாயைப் பிடித்திழுத்து அதில் திக்கு முக்காடி, மல்லுக்கட்டி, நிற்க இடம் கொடுக்காமல் அதன் நாற்றமடித்த பற்களைக் கம்பிகளில் தேய்த்துத்தேய்த்து ரத்தக்களறியாக்கி, மூன்றாம் சாமத்தில் அவனும் பெருநரியும் வெளியேறினார்கள். அந்தப் பின்னிரவில் திடுக்கிட்டெழுந்த அனுக்கமலை தச்சன் உத்திரத்தில் தொங்கினான்.

திரும்பிப் பார்க்கவும் திராணியற்று, பாறைகளின் இடைவெளியில் மறைந்தது பற்களிழந்த, வாய்கிழிந்த பெருநரி.

நிரம்பி இருந்த சிங்காரக்குளப் படிக்கட்டுகளில் இறங்கினான். நாள் முழுவதும் வழிந்திருந்த வியர்வை நாற்றம் போக முகம் கழுவினான். எழுந்து திரும்பும்போது பலாக்காய்கள் முகத்தில் மோத, கோட்டாங்கல்லுக்கு எதிர் திசை நோக்கி, வடக்குக் கரையில் பெரும் நடை நடந்தான், மரகதலிங்கத்தின் பெருஒளி ஒன்று தன்னைப் பின்தொடர்வதை அறியாதவனாக.

நிரம்பலில் ததும்பிய ஏரியில் இறங்கி நடந்தான். எதிரில் பெரும்

மைதானத்தில் அங்கங்கே நின்றிருந்த பாறைக் குன்றுகளுக்கும் அவன் பாதங்களின் அசைவுகள் தெரிந்திருந்தது. விஷத்தைக் கொடுக்குகளின் முனையில் தேக்கியிருந்த மொணப்பா ஏரியில் தேளி மீன்கள் கால்களில்பட உதறிவிட்டு நடந்தான். ஒரு தேளியும் அவன் உடம்பில் ஒரு சிறு கீறல்போட தைரியமற்று இருந்தது.

இடையனுக்கும், பச்சை இருளனுக்கும் நடுவில் நிறைந்திருந்த ஆடுகள் அசைவற்று நிற்க, பேரழகோடு நகர்ந்த அந்த பச்சைவெளிச்சம் பாறைகளால் இறுகியிருந்த குன்றுக்குள் நுழைந்து திரும்பி பச்சை இருளனை மட்டும் கைநீட்டி அழைத்தது.

இடையனும் ஆடுகளும் நின்ற இடங்களிலேயே கற்களாய் சமைந்து நிரந்தர சாட்சிகளாகிப் போனார்கள். யாரும் எட்டிப் பார்க்க முடியாத இடங்களில், கோட்டாங்கல்லுக்கு அப்புறம், அந்த ஊரில் பொறையாத்தம்மன் குன்றும் சேர்ந்தது.

# ஓணான்கொடி சுற்றிய ராஜாம்பாள் நினைவுகள்

பனிப்பொழிவின்போதே விழும் தூறல் அபூர்வமானது. அந்த வருடக் கார்த்திகை எல்லாவற்றையுமே மறுதலிப்பதாயிருந்தது. பனியின் மூடாப்பைத் தூறல்தான் விலக்கியது. மூன்றாம் ஜாமத்தின் துவக்கத்திலேயே அற்புதம் பாட்டிக்கு முழிப்பு தட்டியது. பக்கத்தில் தன் கதகதப்பிலும், வெற்றிலைச் சாறின் கார நெடியிலும் பழக்கப்பட்டு தூக்கத்திலிருந்தவனைக் கிள்ளி எழுப்பினாள். பாட்டியின் நகங்கள் அவனைத் தவிர எல்லோருக்கும் பயமூட்டக்கூடியவை. அவள், நகநுனிகளில் உலகின் பல ஜால வித்தைகளை வைத்திருந்தாள். மூன்றாவது கிள்ளலில் துடித்தெழுந்தான். இருளின் அடர்த்தியைக் குறைக்க வெளியில் ஒரு முயற்சி நடந்தேறிக் கொண்டிருக்கையில், பாட்டி தெருவில் நின்று வடக்கால் திரும்பி மலை பார்த்தாள். பனியும், தூறலும், பத்தாதென்று மேகமும் மறைந்த போதும், ஒரு சிம்னி விளக்கொளி மாதிரி தீபம் தெரிந்தது. கண்களில் தெரித்து

விழுந்த ஈரத்துளிகளை வழித்துப் போட்ட கையோடு மலை நோக்கிக் கும்பிட்டாள். மறுபடி வீட்டுக்குள் நுழைந்து தயாராக மடிக்கப்பட்டிருந்த இரண்டு கொங்காணிகளை எடுத்து ஒன்றை அவனுக்குப் போட்டுவிட்டாள். ஒரு பெரிய கூடையை இடுப்பில் இடுக்கி சாக்கு போட்டு மூடினாள். அதில் ஒரு சிறு கூடை, ஒரு பித்தளை சொம்பு, அவள் வெத்திலை இடிக்கும் உரல், உலக்கை இருந்தது.

நடை.

அவள் நடைக்கு அவன் ஓட வேண்டியிருந்தது. தார்ரோடு இரவெல்லாம் நனைந்த ஈரத்திலிருந்தது. செருப்பில்லாத கால்கள் ஈரத்தைத் தலை உச்சிவரை கொண்டுபோய்க் குளிரவைத்தது. அவள் உடல் நடுக்கத்திற்கு அவனை இழுத்தணைத்து நடத்தினாள்.

குறுக்கால் பிரிந்த மண்பாதையின் நுழைவிலேயே, தாறுமாறாய் வளர்ந்திருந்த சப்பாத்திக் கள்ளிகளின் நெருக்கம் யாருக்கும் தரும் லேசான பயத்தைத் தந்தவாறிருந்தது. அற்புதம் பாட்டியின் காய்ப்பேறிய கரங்களின் நெருக்கலில் அவன் இன்னும் ஒடுங்கினான். வழியெங்கும் யாரோ அளவெடுத்து நட்டு வைத்த மாதிரி வளர்ந்திருந்த பனைமரங்கள் அவர்களுக்கான பாதைக்கு வழிகாட்டிகளாய் நின்றிருந்தன. கேட்கும் மழை சத்தம், பறவைகளின் விடியற்கால ஆரவாரச் சப்தங்களை முற்றிலுமாக உறிஞ்சி விட்டிருந்தது.

நடை நின்று, நிலத்தில் ஊனின கால்கள்.

சனிமூலை ü்மென ý பிடித்தார்கள். ராத்திரி கவுண்டர் மல்லாட்டை பிடுங்க ஆள் கூப்பிடும்போதே அற்புதம் பாட்டி முடிவெடுத்தாள், மொத ஆளா நெலத்துல நின்னு, சனிமூலை மென புடிக்கணும்.

பிடித்தாள்.

கறுப்பேறி பழுத்திருந்த இலைகளும், இலை உதிர்ந்து மொட்டையாய் நின்றிருந்த காம்புகளும், காய்களின் உள்முற்றலை வெளிச்சொல்லிக் கொண்டிருந்தன. குனிந்து பத்து செடி புடுங்கியவளுக்கு, மெல்ல ஒரு பயம் தன்மீது கவிழ்வதை உணரமுடிந்தது.

அவசரப்பட்டு முன்னாலேயே வந்துட்டுமோ? நாம மட்டும் தனியா நிக்கறதைப் பாத்தா எவனும் என்ன நெனப்பான்? யோசனைகளைச் சுத்தமாய்த் துடைப்பது மாதிரி முப்பது நாப்பது ஆட்கள் தூறலில் நனைந்து கொண்டே நிலமிறங்கினார்கள்.

üüகெழக்கத்தி ஆளுங்களா?ýý

அந்த நாளின் முதல் வார்த்தை அற்புதம் பாட்டியிடமிருந்து நடுங்காமல் கொள்ளாமல் மழை சத்தத்தை மீறிக் கேட்டது. பதிலையும் அவளே ஊகித்த மாதிரி, அதற்காகவெல்லாம் காத்திருக்காமல், இதுவே அதிகம் என்பது மாதிரி குனிந்தாள். மாரணைத்து குவிந்த செடிகளோடுதான், மீண்டும் நிமிர முடிந்தது. அவள் இருப்பை சுத்தமாக மறந்திருந்தாள்.

துவரஞ்சாலைக்குள் அடர்ந்திருந்த செடிகள், அவளின் ஆவேசமான அலசலில் வேரோடும், சேறோடும் குவிந்தன. முன்பே அறிந்ததுதான் எனினும், பாட்டியின் இந்த வேகம் அவனை நிலை குலைய வைத்தது.

மேற்கு மரிச்சில் ஏறி நின்றுதான் திரும்பினாள். கெழக்கத்தி ஆட்கள் முக்கால் மெனை ஏறிவிட்டிருந்தார்கள்.

தூறலின் மீதே நிகழ்ந்த விடியலின் வெளிச்சம் அழகு நிரம்பியதாயிருந்தது.

புடுங்கிப் போட்டுக் குவித்திருந்த மல்லாட்டைச் செடிகள் அவனுக்கு மலைப்பாகவும், அவளுக்குச் சாயங்காலம் வரை தாங்குமா? என்றுமிருந்தது.

முழங்கை பெரிசுக்கு தடித்திருந்த ஒரு துவரஞ்செடிக்கு மேல், ஒரு பழம்புடவையை விரித்தாள். மழை பெய்தால் மழைக்கு, வெய்யிலடித்தால் வெய்யிலுக்கு.

பெரிய்ய கூடையைப் பக்கத்தில் இருத்தி, சிறு கூடையில் காய்களை ஆய்ந்தாள். பாட்டியின் உக்கிரமான முறுக்கலில் செடிகள் காய்களைக் கூடைக்குள் உமிழ்ந்தன. அந்த வேகம் ஒரு இயந்திரத்தையும் ஸ்தம்பிக்க வைக்கக் கூடியதாயிருந்தது.

அவன், பேருக்கு ஒன்றிரண்டு காய்களைக் காம்போடு பிய்ப்பதும், கூடைக்குள் போடுவதும், பித்தளைச் சொம்பில் நிரப்புவதும், நிரம்பும் முன் பெரிய கூடைக்குள் கவிழ்ப்பதுமாக, அந்த அதிகாலையை வேடிக்கைக்குள் கொண்டு வந்து கொண்டிருந்தான். பாலேறி முற்றி, பெற்ற மழையீரத்தில் முளைவிடத்தயங்கிய காய்களாகப் பொறுக்கி, பாட்டி அவனிடமிருந்து பிடுங்கிய பித்தளை சொம்பில் போட்டாள்.

அவள் கைகளையே வெறித்துக் கொண்டிருந்தான். செடிகளை முறுக்கி உதிரும் காய்களில், முத்துக்களை அவள் தனியே பிரிப்பதற்கு ஒரு துளியும் தனியே முயற்சிக்காது, அது தன்னால் பிரியும் என்பது போல இயங்கினாள்.

சொம்பு நிரம்பியதும் ÜÜஉரிச்சி துண்ணுÝÝ என்று அவனைப் பார்த்து சொன்னாள். அவன் அந்த ஈரமான காலையில் உற்சாகமேறியிருந்தான். முதல் காயை எடுத்து உரித்தான்.

ரோஸ்நிறப் பருப்பில் இளம் மஞ்சளாய் முளைவிட்டிருந்த இடத்திலிருந்து ஓர் உயிர் துடிப்பதை உணர்ந்தான். இவனின் அதிர்வுக்கு முன்பே ஒரு இளவரசியைப்போல மின்னும் அழகோடு அவள் இவன் முன் உட்கார்ந்திருந்தாள். பிரமிப்பும், ஆச்சர்யமும், லேசான நடுங்குதலும், நிறைய சந்தோஷமும் குழைய, குழைய அடுத்த காயை உரித்தான்,

இதோ இன்னொரு இளவரசி.

இரண்டு இளவரசிகளும், இவனோடு காய் உரிப்பதில் சேர்ந்து கொண்டார்கள்.

உரிக்க உரிக்க ரோஸ் நிறப் பெண்கள் வந்துகொண்டே இருந்தார்கள். அவர்கள் பேரழகோடு ஒளிர்ந்து இவன் கண்களைக் கூச வைத்தார்கள். இந்த விந்தைகளில் சம்மந்தமில்லாதவளாக அற்புதம் பாட்டி, சிறு கூடையை நிரப்புவதும், அதைப் பெருங்கூடையில் கொட்டுவதுமாய் இயங்கிக்கொண்டிருந்தாள்.

அவள் இவனையோ, இவள் எதிரிலும் பக்கத்திலுமாக சூழ்ந்திருக்கும் பெண்களையோ கவனிக்கும் பிரக்ஞையற்று இருந்தாள்.

துவரஞ் சாலைகளுக்கூடாக நீண்ட ரயில்பெட்டி மாதிரி நின்றார்கள் அச்சிறுமிகள். இவன் முதல் ஆளாக நின்றான். இவன் பின்பக்கச் சட்டையைக் கொத்தாகக் கசக்கிப் பிடித்து நின்றிருந்த பெண் ராஜாம்பாள் மாதிரியே இருந்தாள். அவள் மீதிருந்து கிளம்பிய லேசான வாசனை நிரம்பிய நாற்றம் ராஜாம்பாளிடமிருந்து ஏற்கனவே சுவாசித்தது. அவர்களின் ரயில் வண்டி சத்தமின்றி புறப்பட்டது. இந்த விந்தைகளைப் பார்க்காமலேயே அற்புதம் பாட்டியைப் போலவே கிழக்கத்தி ஆட்களும் காய் ஆய்வதில் மும்முரமாயிருந்தார்கள்.

இவர்கள் ரயில், கருவேடியப்பன் கோவில் வேப்ப மரங்களுக்கிடையே தேங்கி நின்ற இருட்டில் நின்றது. இவன் முற்றிலும் பயம் உதிர்ந்து குதூகலமாயிருந்தான். ராஜாம்பாள் உடனான நாட்களில் அவனிருந்தது போலவே இந்நாள் அவனை மாற்றியது.

üüஇருளக் குட்டிக்கூட என்னடா வெளையாட்டுýý என்று இவனை அறுத்துக் கொண்டுபோய், டவுனில் டி.வி. ஆண்டனாவில் கட்டிப் போட்டு, தினம், தினம் வீசும் காற்றில் துடித்துக் கொண்டிருந்த நூல், இன்று அறுந்து விட்டது மாதிரியிருந்தது.

அச்சிறுமிகள் சிரிப்பதும், பேசுவதுமாயிருந்தார்கள். சிலர் லேசாக பாடக்கூடச் செய்தார்கள். எல்லாருமே, ராஜம்பாளின் முக ஜாடையை ஒத்திருந்தார்கள்.

இவர்கள் ரயில் வண்டி கருவேடியப்பனின் கோவிலில், உடைந்து சிதிலமாகிக் கிடந்த குதிரைகளில் ஏறி...

அசைகிறதா? நிற்கிறதா? எனக் கணிக்கமுடியாத ஒரு நதியின் கரையில் நின்றது. நதியின் மேற்பரப்பு முழுக்க கண்ணாடியிட்டு மூடியிருந்தது மாதிரியும், எந்த விநாடியும் இது அவர்களை உள்ளே இழுத்துக்கொள்ள சித்தமாயிருப்பது மாதிரியும் இருந்தது.

ஓடி வந்த களைப்பில் நதியின் மடியில் இளைப்பாற அவர்கள் எல்லோரும் ஒரே நேரம் முடிவெடுத்தார்கள்.

பெரும் நாக மரங்கள் நதியின் கரையோரம் அடர்ந்திருந்தன. அது

கார்த்திகை மாதமானதால் பழமோ காயோ அற்று, இலைகளால் மட்டும் அடர்ந்திருந்தது. காலை வரை நீடித்திருந்த தூறலின் மிச்சங்கள் ஒன்றிரண்டாய் சொட்டிக் கொண்டிருந்தன.

சப்தமற்று ஒருத்தி, உள்ளங்கால் மட்டும் நதியில் நனைய இறங்கி, தன் பாவாடையை ஏந்தினாள். கெண்டை மீன்கள் துள்ள, துள்ள அவள் ஓடிவந்த உற்சாகம் அங்கிருந்த எல்லோரையும் தொற்றிக் கொள்ள, ஓணான்கொடி பிடுங்கி நாக மரத்தில் ஏறி, ஊஞ்சல் கட்டினார்கள்.

மரம் முழுக்க சிறுமிகள் பூத்திருந்த பேரழகை நாக மரங்களும், களங்கமற்றிருந்த நதியும் மட்டுமே அன்று பார்த்தன.

ஒவ்வொருத்தியாய் உட்கார்ந்த ஓணான்கொடி ஊஞ்சல் நதியின் கரையிலிருந்து, நதியின் நடுமுதுகுவரை அநாவசியமாகப் போய் வந்தது. அவர்கள் எல்லோருக்குமே நதியின் அக்கரைக்குப் போகும் ஆவல் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

அவன் பெரும் உற்சாகத்திலிருந்தான். ஒவ்வொருத்தியாய் ஊஞ்சலில் உட்கார்த்தி வைத்து, தள்ளிவிடும் அவனின் உந்துதல் மேலும் வலுப்பெற்றிருந்தது. அதில் நதியின் அக்கரை நோக்கிய இலக்கிருந்தது.

ஒவ்வொரு சிறுமியின் ஸ்பரிசமும், ராஜாம்பாளின் தொடுதல் களையே நினைவூட்டின. நதியின் அக்கரையில் ஒவ்வொருவரும் நனைந்த உடைகளோடு விழுந்து கொண்டும், இறங்கிக் கொண்டுமிருந்தார்கள்.

மீன் பிடித்து மடியில் தேக்கி வைத்திருந்தவள், ஊஞ்சல் போகும்போது ஒரு கையில் ஓணான்கொடி பிடித்து, இன்னொரு கையில் மீன் நிரம்பிய மடி பிடித்தும் போனது  மற்ற சிறுமிகளை ஆரவாரக் கூச்சலிட வைத்தது.

எல்லோரையும் போய் சேர்த்துவிட்ட ஓணான்கொடி ஊஞ்சல் திரும்பி வராமல் நதியின் இடையில் நின்று கொண்டது. அதுவரை பீறிட்ட அவன் உற்சாகத்தை திடீரென வந்த நதிநீர் அடித்துப் போனது.

அவன் ஊஞ்சலைத் தன் பக்கமிழுக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டு தோற்றான். நாகமரத்திலிருந்து நதியில் குதித்து நீந்துவது என

முடிவெடுத்த கணம், நதியின் ஆழமும், குணமும் அறியாமல் குதிப்பது குறித்த எச்சரிக்கையும், கண்ணாடி போர்த்தி உறங்கும் அதன் பேரமைதி குறித்த பயமும் அவனுக்குள் முளைத்தது. எதிர்ப்பக்கச் சிறுமிகள் ஆரவாரமாய் இவனைத் தங்கள் பக்கம் அழைத்தார்கள்.

இஞ்சின் இன்றி அவர்கள் ரயில் அறுந்து கிடந்தது. அந்த நிமிடத்தில் எது நடப்பினும் பயமற்று நதியில் குதித்தான்.

இவன் நினைத்த மாதிரி எதுவுமற்று, நதி ஒரு குழந்தையைச் சுமப்பது மாதிரி தன் முதுகில் சுமந்து, இவனுடைய ராஜாம்பாள்களிடம் இவனைச் சேர்ப்பித்தது.

பெரும் கானகத்தின் நுழைவாயில், நதியின் அக்கரை. பருத்திருந்த மரங்களின் திண்மைகள் இதுவரை அவன் பார்த்தறியாதது. அடிக்கடி கேட்ட விநோதமான குரல்களும், கேட்டிராத சப்தங்களும், அவர்களுக்குள் கொஞ்சம் கொஞ்சம் ஒட்டியிருந்த பயத்தையும் உதிரச்செய்து முற்றிலும் பயமற்ற வெளிக்கு அழைத்துச் சென்றன. மரங்களுக்கிடையே படுத்திருந்த பாறைகள், நீண்ட கவனிப்புக்குப் பிறகே பாறைகள் என ஊர்ஜிதமாயின. ஒரு மரம் முழுக்க தலைகீழாய்க் காய்த்திருந்த வௌவ்வால்கள் அவர்களைத் தங்கள் மௌனம் நிரம்பிய உலகுக்கு அழைத்தன. அப்படிப் போக மனமற்று, சப்தமும், ஆராவாரமும், பெரும் கூச்சலும், பாடல்களும், பறவைகளின் கீச்சொலியும் நிரம்பிய உலகில் இருப்பதையே அவர்கள் எல்லோருமே விரும்பினார்கள்.

காய்த்து, பழுத்து இருந்த காய்களையும், பழங்களையும் பறித்து எல்லோருமே அவனுக்காக மட்டுமே தந்து கொண்டிருந்தார்கள்.

ராஜாம்பாளின் உலகம் ருசிகளால் ஆனது.

வாழ்வு, அதுவரை தந்திராத சுவையை அவர்களுக்காக, வழங்கிக் கொண்டிருந்தது.

ஒவ்வொருத்தியும் அவனுக்காக மடி, மடியாய் பிரியத்தை வைத்திருந்தார்கள்.

அவர்கள் உற்சாகமும் விளையாட்டும் எல்லை கடந்திருந்தன.

கானக அமைதி கலைந்து, இவர்களால் குதூகலம் சூழ்ந்திருந்த, அதுவரை யாரும் யாரோடும் அறிந்திராத உலகத்தில் அவர்கள் சுற்றினார்கள். தொடர்ந்து நீண்ட விளையாட்டில், அவர்கள் களைப்புறாதவர்களாயிருந்தார்கள். நிமிடங்கள் கடக்க, கடக்க அவர்கள் புதுசாகிக் கொண்டே இருந்தார்கள். புதுப்புது விளையாட்டுகளில் மூழ்கி, எழுந்து, அடு

ïïகண்ணாமூச்சி ஆடலாமா?ýý

உடனே சம்மதித்தான். மரத்தில் முகம் புதைத்து நூறுவரை எண்ண வேண்டும். பரவியிருந்த மரங்களின் இடைவெளிகளில் அவர்கள் மறைத்தார்கள்.

மீன் நாற்றம் காட்டிக் கொடுத்துவிடுமென, செத்து, விரைத்திருந்த மீன்களை அவன் காலடியிலேயே கொட்டிவிட்டு ஓடினாள் அவள்.

ஒண்ணு... ரெண்டு... மூணு...

நூறு... நூறு...

கானகம் முழுக்கத் தேடியும் அவர்கள் யாரும் அகப்படவில்லை. எல்லா மரப்பருமன்களும் அவர்களின் மறைவின்றிதான் இருந்தன. அவன் துக்கத்தின் ஆழத்திற்குப் போய்க்கொண்டேயிருந்தான்...

ïïராஜாம்பா... ராஜாம்பா... ராஜாம்பா...ýý

அவன் குரல் சிதைந்து சுக்குநூறாகி நதியில் வீழ்ந்தது. அவர்களின் ஓணான்கொடி ஊஞ்சல் அறுந்து நதியில் மிதந்து கொண்டிருந்தது. பெரும் குரலெடுத்து அழ ஆரம்பித்த அவன் அழுகை கொஞ்ச நேரத்திலேயே கேவலாய் மாறியது. கருவேடியப்பன் கோவில் வேப்பமர நிழலில்தான் அது நின்றது.

இருட்டிவிட கொஞ்சமே பொழுதிருந்த வேளை, அற்புதம் பாட்டி ஒவ்வொரு கிணறாய் தேடியலைந்து, களைத்து, அவனைக் கண்டெடுத்தாள். மல்லாட்டைக்குள்ளிருந்து வந்த ரோஸ் நிற ராஜாம்பாள்கள் குறித்து, எதுவும் அறியாதவளாய் அவனைத் திட்டித் தீர்த்தாள்.

அன்று ˘˘எட்டுக்கு ஒண்ணுˇˇ என்று அவள் ஆய்ந்த காய்கள் அளக்கப்பட்டன.

இருள் அடர்ந்து போயிருந்தபோது, அவர்கள் வீட்டை அடைந்தார்கள். அவனுக்குள் அப்போதும் லேசான விசும்பல்கள் நீண்டிருந்தன. வாசலில் நின்று பாட்டி மலையைப் பார்த்தாள். தீபம் அவளுக்கு மட்டும் மினுக்கிட்டாம்பூச்சிப்போல் மின்னி மேகத்தில் மறைந்தது. அற்புதம் பாட்டி நடுவீட்டுக்குள் நின்று, தன் பின் கொசுவலத்தைத் தளர்த்தினாள்.

பாலேறி முற்றியிருந்த நெத்துக்களாய் மல்லாட்டைகள் உதிர்ந்தன.

அவன் அவசர அவரசமாய் ஒரு ரோஸ் நிற ராஜாம்பாளின் உயிர்ப்பின் எதிர்ப்பார்ப்போடு ஒரு காயை உரித்தான்.

## சத்ரு

அவன் காசிரிக்கா நாரினால் கயிற்றுக் கட்டிலோடு இழுத்துக் கட்டப்பட்டிருந்தான். சுற்றி நின்றிருந்தவர்களின் முகங்களில் மரணமேறி இருந்தது. சிலர் ஆர்வத்தின் நுனியிலிருந்தார்கள். அவன் பிடிவாதமாய் கண் திறக்காமல் கிடந்தான். ரங்கநாயகி கிழவி தனி பொம்பளையாகப் பதட்டமின்றி, அவன் தலைமாட்டில் குந்தி இருந்தாள். அவள் நிதானத்தில் அனுபவம் குழைந்திருந்தது. மௌனம் எல்லோருக்கும் பொதுவாய் பரவி இருந்தது. அந்தச் சின்னக் குடிசை, தன் உள்புறம் இதற்குமேல் ஒரு ஆளையும் அனுமதிக்காத பிடிவாதத்தில் இருந்தது.

வீட்டின் வெளி, புதுசாய் பார்க்கிற எவரையும் பயமுறுத்தும். நீண்டு, அகன்று பரவியிருந்த பாறைகளின் நடுவில் ஒதுங்கியிருந்த மண்திட்டில், கட்டியிருந்த கூரையின் வெளியில் நின்று பார்த்தால், கருங்கோடுகளாய் நீண்டு கொண்டே போகும் பனைமரக்கறுப்பும், பீவேலி மரங்களும், கோடையின் உக்கிரத்தை அநாவசியமாக்கும் எட்டிமர இலைகளும், இந்த அத்துவான வெளியில் வீடு கட்டின பாண்டு ஒட்டனின் தைர்யத்திற்குத் துணைநின்றன.

அவன் உளியின் நுனிகளால் பாறைகளைத் தின்று குழிகளாக்கினான். விழுந்த குழிகளில் கறுப்பு மருந்தேற்றி, திரி பற்ற வைக்கும் லாவகம் வேறெங்கும் காணமுடியாதது. வெடித்துச் சிதறிய கற்பாறைகளின் கங்குகளுக்கும், எழும் கரும்புகைக்கும் நடுவில் ஒவ்வொரு முறையும் வெற்றியோடு வெளிப்படுவான். பெரும் சத்தங்களையும், கலவரத்தையும், குழப்பத்தையும், ஆபத்துகளையும் சதா சந்தித்த அவன் விநாடிகள், நேர் எதிராக நிரந்தர அமைதி தேங்கி நின்ற இந்தப் பாறையின் நடுவில் நிலைத்திருந்தது கூரையாய். கண்டாச்சிபுரம், மேவாலைப்பக்கம் என கல் உடைக்கப் போனவன் இன்னமும் திரும்பவில்லை. காலம் அவனை மீட்டுத்தரும் நம்பிக்கையை இழந்து, அவன் பாறைகளுக்கு நடுவில் மறைந்தது குறித்து அவ்வப்போது எழுந்த கதைகளையும் ஈவிரக்கமின்றி அழித்து, அவன் பாறை வீட்டை ஊராருக்குப் பொதுவாக்கி தந்திருந்தது.

தேங்கி நின்ற மௌனத்தின்மீது, சிறு கல்லெறிந்து பார்க்கவும், அவர்களுக்குள் தயக்கம் இருந்தது. அவனுக்கு எதிரான உரையாடல் மொழி இழந்து, நடுக்கத்திலிருந்தது. இத்தனைக்கும் அவன் கண் திறக்காமலேதான் கிடந்தான். பின்கதவு சத்தமின்றித் திறக்கப்பட்டு, அவர்களைப் பின்புறப் பாறையில் உட்கார்த்தி வைத்தது.

சைகை மூலம் ரெங்கநாயகி கிழவி அழைக்கப்பட்டாள்.

அவர்களின் பேச்சு அவர்களுக்கே கேட்காதவாறு இரகசியமாக்கப்பட்டது. அவன் பிடிபட்டதின் அதிகபட்ச கஷ்டங்களும், அவன் மரணத்தின் அவசியமும் ஓரிரு வார்த்தைகளால் ரெங்கநாயகிக்கு சுருக்கப்பட்டது. விடிகிற பொழுதின் முதல் நாழிகை, அவன் பிணம் எரியூட்டப்பட வசதியாக அவன் மரணம் சௌகரியப்படுத்தப்பட்டது.

பதட்டமற்று இருந்த கிழவியின் முகம் இருளத் துவங்கியது. புள்ளதாச்சி பொம்பளைகளுக்கு குச்சி வைத்து, ரத்தப் பெருக்கில் புரளும் சதைப் பிண்டங்களை வாரி வீசிய கைகள்தான் எனினும் ஒரு முழுமனிதனின் மரணத்தின் எதிர்கொள்ளல் அவளுக்கு நடுக்கமேற்படுத்தியது. சமாளித்துப் பேசினாள்.

ப்ப்ஊராருக்கு நான் கட்டுப்படுறேன். ஆனா அவனை நேருக்கு நேரா

மொகமெடுக்க முடியலை. வண்டி கட்டி என் வூட்டுக்கு ஆளனுப்பின நம்பிக்கையை நான் கெடுக்கலை சாமிகளா. இந்த பகலுக்கும், மலைகாட்டுல சுத்தி வெஷத் தழ பறிச்சாறேன். என்கூட ஒரு ஆளு இருந்து, இருட்டனப்புறம் பாறையில கொட்டி, ஒட்ட, ஒட்ட அரைக்கணும், ரெண்டு வெண்கலச் சருவச் சட்டி வேணும். சீரா தண்ணி ஊத்தி, தழையை அரைச்சுட்டா போதும். விடியற நேரம் அவன் திமிராம கொள்ளாம நாலு பேரு புடிச்சிக்குங்க, ரெண்டு கையையும் ரெண்டுபக்க சருவ சட்டில தொவைச்சி புடிச்சிக்குங்க. ஒரே ஒரு மணி நேரம் தான். ஆளு வெரைச்சிடுவான்.

நான் ஒத்தை வீட்டு பொம்பளை. அவன் கை கால ஒதைச்சிகிறத பாக்க முடியாது, தழை அரைச்சி கொடுத்ததும் எனக்கு வெடை குடுங்க சாமிங்களா.

யோசனையின் கச்சிதம் எல்லோருக்குமே பிடித்திருந்தது. தலையில் முடி பொசுங்கும் அந்த மத்தியான அனலில், அவளும் சின்னாப்புவும் அனுக்குமலை காட்டுக்குள் நுழைந்து மலை ஏறினார்கள்.

கண் திறக்காமல் கட்டிலில் கிடக்கும் பொட்டு இருளனின் திருட்டுச் சாகசங்கள், அந்த மலைக்காட்டு மத்தியானத்தில் ரங்கநாயகி கிழவிக்குக் கதையாக்கப்பட்டு, பகல் நகர்ந்தது.

அந்தப் பஞ்சத்தின் உக்கிரத்தை சொல்லவாவது சில குழந்தைகளை நெட்டித்தள்ளி ஒதுக்க மிச்சமின்றி, பொசுக்கியது காலம். அந்த ஈரமற்ற நாட்களில் மனிதர்கள் உலர்ந்து, காய்ந்து கருகினார்கள். பிள்ளைப்பெற்ற பொம்பளைகளின் முலைக்காம்புகள், பச்சை குழந்தைகளுக்குச் சொரிவதற்கு ஒரு சொட்டுப் பாலின்றி வெடித்திருந்தன. வளர்ந்த குழந்தைகள், ஈரம் தேடி மலைக் காடுகளின் பாறை நிழலுக்குள் சதா அலைந்து திரிந்தன. வற்றி வெடித்த பூமியின் முகம் கோரமேறி மனிதர்களை விழுங்கிவிடத் தயாராய் இருந்தன. வைத்த ஒவ்வொரு அடியும், பூமியின் வெடிப்பில் விழுந்துவிடாதவாறு எச்சரிக்கை அடைய வேண்டியிருந்தது.

எட்டி மரங்களின் பச்சையும், காய்களின் சிவப்பும் பார்க்கிற எவரையும் ஏமாற்றி, சிரித்து ஏளனப்படுத்தியது. தண்ணி முட்லான்

செடிகளின் காய்ந்து போகாத பசுமை, பள்ளிக்கூடம் விட்டகன்ற பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் மரணத்தைத் தள்ளிப்போட்டு வேடிக்கை காட்டியது.

அவர்கள் காய்ந்த பூமியில் கால் பதித்து, வெறி கொண்டு கிழங்கு தோண்டினார்கள். பூமி தன் இரகசிய மார்பில், தான் தேக்கி வைத்திருந்த தண்ணி முட்லான் கிழங்குகளின் ஈரத்தைத் தன் குழந்தைகளின் நாக்கில் நனைத்து, தன் ஈகையில் நிலைத்தது.

அந்தப் பஞ்சத்தை வகைப்படுத்த முடியாது. தலைமுறைகளில் தப்பிப் பிழைத்திருந்த கிழவன்களும், கிழவிகளுமே பார்த்திருந்திராத பஞ்சமது. அரசாங்கப் புள்ளி விவரங்களுக்குள் வர மறுத்து, ஊர் பொதுத்திட்டில் வைத்து, அளக்கப்பட்ட மக்காச் சோளத்திற்கு அடங்க மறுத்த பசித்த மனிதர்களைப் போல.

தானியக் குதிர்களில் ரத்தம் சுண்டிய பெருச்சாளிகள் வலைதோண்டி ஏமாந்தன. ஒத்தையான பாதைகளிலும், கள்ளிகளடர்ந்த ரெட்டை மாட்டு வண்டிப் பாதைகளிலும் பாம்புகளின் எலும்புக்கூடுகள் குறுக்காலும் நெடுக்காலும் கிடந்தன. வெளுத்துத் தெரிந்த, ஊர்ந்த அதன் முள்ளெலும்புகள் யாரையும் அச்சப்படுத்தின.

பிறக்கும் குழந்தைகள் இரத்த பிசுபிசுப்பின்றி உலர்ந்து செத்துப் பிறந்தன. தண்ணீரற்றுக் காய்ந்து கிடந்த கிணறுகளில், எப்போதோ வாழ்ந்த அடையாளத்தில், நண்டுகள் செத்து, ஓடுகள் மட்டும் உடையாமல் ஒட்டி இருந்தன. ஒரு சிறு குச்சியின் உராய்வில், ஒரு சிறு கல்லின் விழுதலில், உடைந்து சிதறும் அதன் மக்கிய ஓட்டின் சத்தமே, நண்டுகளின் வாழ்ந்த காலத்தின் ஞாபகத்தில் மீந்தது.

மலைக்காட்டுப் பாறை பொந்துகள் வெப்பத்தால் வெளியேற்றிய, காட்டுப் பன்னிகளும், குள்ளநரிகளும், பெரும் கூச்சல்போட்டு பஞ்சம் நெருக்கியிருந்த குரல்வளைகளைத் தங்கள் அகோர சப்தத்தால் நிறுத்தின.

ஆடுகளும், மாடுகளும் வந்த விலைக்கு, கிடைத்த சோளத்திற்கு, கம்பந்தட்டைகளுக்கென்று கைமாறின. பூர்ச மரக்கிளைகளில் உரிக்கப்பட்ட

ஆடுகளின் வரிசை தெரிந்தது. மக்கள் உப்பு போட்டு அவித்து இறைச்சி தின்றார்கள். ஊராகாலி மாடுகள் யாருமற்ற அனாதைகளாயின. யாரும் யாரையும் தின்றுவிடக்கூடிய கொலைவெறியைப் பஞ்சம் மனித மனங்களில் ஏற்றியிருந்தது. மனிதர்கள் அவர்கள் வீட்டு ஆடுகள், மாடுகள் போல், அவர்கள் மலைகளின் பெருநரிகள் போல் சிரிப்பற்றுப்போன முகத்தோடு திரிந்தார்கள். அவர்களின் ஒட்டுமொத்தத் தேடலும், ஒருசொட்டு ஈரத்தை நோக்கியதாய் மட்டுமே இருந்தது.

அந்தத் துளியூண்டு ஈரம் மாரியம்மனின் கண்களுக்குள் இருப்பதாக உறுதியாய் நம்பினார்கள். அதைத் தொட்டு உணர்ந்துவிட குதிர்களைத் துடைத்து, பானைகளை அலசி, கதிர் அறுத்து, நாள் கடந்த வயல்களைப் பெருக்கிச் சேர்த்த எட்டு மரக்கா கேவுறும், அஞ்சி படி கம்பும்தான் மாரியம்மனின் கருணை நிறைந்த கண்களுக்குப் படைக்கப்படப் போகும் கூழ் ஊற்றல். நம்பிக்கையின் கடைசிப்படியில் ஒட்டியிருந்த இரவில்தான் பொட்டு இருளன் அதில் கை வைத்து, கையும் களவுமாய்ப் பிடிபட்டது.

அந்த ஊரே விசித்திரங்களால் அடுக்கப்பட்டிருந்தது. கல் மலைகளும், தரையில் படர்ந்திருந்த பாறைகளும், பாறைகளுக்குள் அடங்கி இருந்த குகைகளும், அங்கங்கே தெரிந்த மண் திட்டுகளில் கட்டியிருந்த வீடுகள், தெருக்கள் என்ற ஒழுங்குக்குள் வர மறுத்தன. பாறைகளுக்குள் மறைந்து கொண்ட வெப்பால மரத்து வேர்கள் இக்காய்ச்சலுக்கும் தாக்கு பிடித்தன.

துவரம் மிளாறுகளிலான பட்டிகளில், ஒலித்த ஆடுகளின் குரல்கள், இரவுகளில் படிந்து, அந்த ஊரின் விசித்திரத்திற்கு சப்தமேற்படுத்தித் தந்திருந்தது.

பாறையைத் துளைத்து உரல் குடையப்பட்டிருந்தது. எட்டு பங்காளிகளின் வீடேறி, கொண்டு வந்த கம்பு அடிபட்டு மாவாகிக் கொண்டிருந்தது. இடிப்பவளின் முகமே இருண்டிருந்தது. உலக்கையின் நிழலோடு இன்னொரு நிழல் விழுவதைக் கவனித்தாள். கை தானாக நின்று முகம் திருப்பினாள்.

மூன்று பொம்பளை புள்ளையோடு ஒருத்தி. முகம் வேற்றுமுகம்.

சாயல் அவளூர் சாயல் இல்லை. கெழக்கத்தி கூட்டமா? நிதானிக்க முடியவில்லை.

பார்வையால் அவர்கள் நால்வரும் பாறையில் திரண்ட, பச்சை மாவைத் தின்று கொண்டிருந்தார்கள். அந்தப் பார்வைகள் மீறி, மாவிடித்தலுக்குக் கைகள் வலுவற்று இருந்தன.

ப்என்ன தாயீ பாக்கற? ý பதிலற்ற கேள்விகள் தொடர்ந்தன.

கெழக்கத்தி பொம்மனாட்டியா நீ?

ப்கழுத்துல ஒண்ணேயும் காணோம். புருஷன் செத்துட்டானா? இந்தப் பஞ்சத்துல எவன் பொழைச்சான்? ý

அவளின் தொடர்ந்த கேள்விகள் எதிர் நிற்பவளின் கறுத்த முகத்தில் மோதி, பாறைகளில் விழுந்தன.

பசியின் பார்வைகள் பச்சை மாவைக் கேட்பதுபோல் அவள் உணர்ந்து,

ப்ப்மாவு வேணுமா? ýý

ப்ப்ஆமா என் புள்ளைங்களுக்கு, கூழுக்கு, மாவுகரைக்க மாவு தர்றீயா? நாளைக்கே திருப்பித் தர்றேன்.ýý

ப்ப்அதெப்படி நாளைக்கே திருப்பி தருவெ? இங்க என்ன மழை ஊத்தி, வெள்ளம் பொத்து, வெள்ளாமையை அறுக்க முடியாம அருவா ஒடிஞ்சி ஒலக்கடத்துக்கா நடக்கறோம்?ýý

ப்ப்நாளைக்குத் திருப்பி தந்துடுவேன்ýý

அவள் குரலில் தெறித்த உறுதி இவளை நிலை குலைய வைத்தது.

ப்ப்அதான் எப்படி? ýý

ப்ப்நாளைக்கு சத்திமா திருப்பித் தந்துடுவேன். என் புள்ளைங்க வயிறு குளிரணும் தாயி..ýý

அவள் குரலில் குழைந்திருந்த கனிவும் அதுவரை அவள் கேட்டிராதது.

நிமிடத்துக்கு நிமிடம் வேறுபட்ட அவள் வார்த்தைகளுக்கு இவள் ஆச்சரியப்பட்டாள்.

அந்த வார்த்தையில், காய்ந்து வெடித்திருந்த அவள் முலைக் காம்புகள் பால் சொரிந்தது மாதிரி உணர்ந்தாள்.

ÿÿசட்டி வச்சிருக்கியா தாயி? ýý

அவள் மூத்த மகள் கருஞ்சட்டியை நீட்டினாள். கம்பம்மாவு சட்டியில் நிரம்பியது.. போட.. போட.. நிரம்புகிறது.. இன்னும்.. இன்னும்.. பாறையின் குழி அவள் மார்மாதிரி சுரந்து, நிரம்பிக் கொண்டே இருக்கிறது.. அவள் இடக்கண் முந்திக் கொண்டு ஒரு சொட்டை உதிர்க்கிறது.

காலம் கருணையில் நிரம்பி வழிந்தது.

உச்சி மத்தியானத்தில், மாரியம்மன் சிலையின் இடக் கண்ணிலிருந்து ஒரு சொட்டு விழுந்ததை கூட்டாத்தான் பார்த்ததைத் திருப்பி, திருப்பி சொல்லிக் கொண்டிருக்க, தலைமுடி பொசுங்க, மலைக் காட்டில் விஷத்தழைபறிக்க அலைந்த ரங்கநாயகியின் நெற்றிப் பொட்டில் அத்துளி விழுந்தது.

பூமியை இருளின் நாக்கு ஒரே நொடியில் கவ்விக் கொண்டது. வானம் கிழித்து ஊற்றுகிறது. எதன் பொருட்டும் அதன் உக்கிரம் குறைய வழி இல்லை. மரங்கள் முறிய, பாறைகள் கரைய, நீரின் வன்மம், விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே போகிறது. மலர்தலுக்குப் பதிலாக மனித முகங்களில் பீதி பற்றிக் கொண்டது.

இனி விடிதலுக்கான, சாத்தியமற்ற இருள் அது. மழையினால் பூமியைத் தின்ன, வெறி பிடித்து வானம் வாய்பிளந்து நிற்கிறது.

மடியில் பறித்த விஷத்தழைகளோடு, பாறைச்சுனையில் ரெங்கநாயகி கிழவி மல்லாந்திருந்தாள். விஷத்தழை ஊறின உடல், யானையளவிற்குப் பெருத்து மிதந்தது.

சின்னாப்பூ அனுக்குமலைக் காட்டில் ஏதாவதொரு பாறையிடுக்கில் குரல்வலை அறுபட்டுக் கிடக்கக் கூடும்.

நீரின் வன்மம் பெருகிக் கொண்டே போகிறது. இத்தனை வருடத்து பூமியின் வெடிப்பை, ஒரே நொடியில் இட்டு நிரப்பிச் செல்கிற காலத்தின் விசித்திரத்தில் ஊர் கிடந்தது.

கதவிடுக்குகளின் இடைவெளிகளில் பார்த்த கண்களுக்கு நீரின் மட்டம் பாறைகளில் தெரிந்தது.

ஒரு நீண்ட ராத்திரியின் மிச்சத்தில் மாட்டி, ஒரு பகல் முழுக்க கண் திறக்காத பிடிவாதத்தில் கிடந்த பொட்டு இருளனை, மழை தான் எழுப்பியது. சுற்றிலும் ஆட்களற்ற பாண்டு ஒட்டனின் வீடு, அவனைப் பெரிதும் பயமுறுத்தியது. மரணவெறி கொண்ட சில மனிதர்கள்கூடப் பக்கத்தில் இருந்தால் தேவலாம்போல் உணர்ந்தான். இந்தப் பிரளயத்தை மூழ்கடிக்கும் வல்லமையோடு மல்லுக்கட்டும் மழை கொடுத்த தனிமை அவனால் தாங்கிக் கொள்ள முடியாததாய் இருந்தது. விசித்திரமான ஒலிகளை மாற்றி மாற்றி எழுப்பித் தன் தனிமையை வென்றுவிட முயன்றான்.

தலை விரித்தாடிய தாண்டவம் முடிய ஒரு முழு இரவு தேவைப்பட்டது. வானத்திலிருந்து சொட்ட இனி ஒரு துளியும் மீதியில்லை என்ற உறுதியில் அது தன் கோர ஆட்டத்தை நிறுத்தினபோது, விடிந்தது. இரவில் நீடித்த வன்முறையில் நிலவும், நட்சத்திரங்களும் எங்காவது தெரித்து விழுந்திருக்கலாம்.

அவர்கள் பத்திருபது பேர், ஈரப் பாறைகளில் கால் மாற்றி, கால் மாற்றி வைத்து, பாண்டு ஒட்டனின் வீட்டை அடைவதற்குப் பல மணி நேரம் தேவைப்பட்டிருந்தது.

ராக்கண் விழித்து, பெரும் கலக்கத்திலிருந்த அவனுக்கு அவர்களைப் பார்த்த விநாடி, மீண்டும் தான் மரணத்தின் பற்களில் நசுங்கப்போகும் கனம் நினைவு வந்துவிட்டது. ஆனால் தெப்பலாக நனைந்திருந்த அவர்களின் முகங்களில் தெரிந்த கருணை, ஒரே கணத்தில் அந்த நினைப்பைப் புரட்டிப்

போட்டது.

ஒரு குழந்தை மாதிரி மலங்க மலங்க அவன் அவர்களைப் பார்த்தான்.

காசிரிக்கா நாரின் இறுக்கம் தளர்த்தப்பட்டு, கட்டு அவிழ்க்கப்பட்டது. புஜத்தில் கசிந்த ரத்தம் கண்டு அவர்களில் பலர் üüஇச்ýý கொட்டினார்கள்.

நடப்பது குறித்த பிரக்ஞையற்று இருந்தான்.

அவர்கள் முகங்கள் வன்மமற்று, குழந்தை முகங்களாகி, புன்னகை புனைந்திருந்தது.

üüஇனி ஜென்மத்துக்கும் திருடாத. மாரியாத்தா கண் தொறந்து மழை கொடுத்திருக்கா. போ போய் பொழைச்சிக்கýý.

எல்லோர் குரலும் நனைந்திருந்தது.

அலைகள் மாதிரி, நீர் தளும்பிய சத்தம் கேட்டுக் கொண்டே ஏரிக்கரையின் முடிவிலிருந்த தேவதானப்பேட்டை மலைமீது கால் வைத்து நிமிர்ந்தான்.

வெள்ளம் மலை முழுக்க, சிறு அருவிகளாகி இறங்கிக் கொண்டிருக்கும் பேரழகை எதிர்கொண்டு ஏறுகிறான். நீர்த்துளிகள் முகத்தில் மோதி, சிதறி மலையில் தெறிக்க, தெறிக்க... ஏறித் திரும்பினான்.

ஊர் ஈரத்தில் நனைந்திருந்தது.

# சிதைவு

என் எட்டு வயதிலிருந்து பதினெட்டு வயது வரை தொடர்ந்து நடந்த இந்தத் தாக்குதல்களையெல்லாம் திரட்டி ஒரு புள்ளியில் நிறுத்த முடியவில்லை. என் பதினெட்டாவது வயதில் கல்லூரியில் சேர்ந்து ஓரிரு மாதங்களே கடந்திருந்த ஒரு சாயங்காலத்தில் வழக்கம் போல என்னை அடிப்பதற்கு அப்பா கை தூக்கியபோது, தடுத்து நிறுத்தி அவர் கையைப் பிடித்து முறுக்கி, அவர் அலறலில் தெருவே கூடி நின்று வேடிக்கை

பார்த்ததும், பலபேர் என் திமிறலைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறியதும், அத்தனை ஆண்டுகளாய் அவரிடமிருந்து கேட்டு, கேட்டு ஊறிப்போயிருந்த மொத்த கெட்ட வார்த்தைகளையும் அவருக்கெதிராய் தெருவில் நின்று நான் பேசியதும்தான் என் மீதான அப்பாவின் இறுதித் தாக்குதல்.

வீட்டுக்குள் விழும் அடிகளைப் பொறுக்க முடியாமல் தெருவுக்கு ஓடியதும் எப்போது என நினைவுபடுத்த முடியவில்லை. பத்துக்குப் பத்து அறையில் விழும் அடிகள் அபாயகரமானவை. கையில் எது கிடைக்கிறதோ அதை எடுத்து என் மீது வலுவாகப் பிரயோகிப்பதைப் பொறுக்க முடியாமல்தான் வாசல் தாண்டி தெருவுக்கு ஓடிவந்தது. என்னைத் துரத்திக்கொண்டு ஓடிவரும் அப்பாவிடமிருந்து தப்பிப்பது என் இளவயது கால்களுக்குச் சுலபமாக்கப் பட்டிருந்தது. என் மறைவின் உறுதிப்படுத்தலோடு, முனகிக் கொண்டே வீட்டுக்குத் திரும்புவார்.

சரியாக வளர்க்கவில்லையென கெட்ட வார்த்தைகள் அம்மா பக்கம் திரும்பும். அம்மாவின் மறுபேச்சுக்கு அடியோ, அல்லது கால் மிதிகளோ கிடைப்பதும் வழக்கமாகி விட்டிருந்தது எங்கள் வீட்டில்.

அப்பாவிடம் தப்பித்து ஓடி மறைந்து விட்டபின் மீண்டும் வீடு திரும்பலுக்காக நான் பட்ட பிரயத்தனங்கள் ஒவ்வொன்றும் ஒருவிதம். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு மாதிரியான அவஸ்தைகளும், அவமானங்களும். என் +1, +2 காலத்தில் கவிதைத் தனத்தோடு காதல் கடிதங்களை எழுதி கொடுத்து, வாங்கிக் கொண்டிருந்தபோதும் இது தொடர்ந்தது.

அடிபட்ட உடம்போடு நண்பர்கள் வீட்டுக்குப் போவதும், அவர்களின் அப்பா அம்மாவின் அறிவுரைகளால் உடம்பு இன்னும் வீங்குவதும் தாங்கமாட்டாமல் இனி நண்பர்களின் வீடு நம் பதுங்குகுழி அல்ல என முடிவு செய்தபிறகு, கட்டி முடிக்கப்படாத வீடு, வாழ்ந்து இற்று விழுந்த, வாழ்வின் அடையாளமான குட்டிச்சுவர்களின் கொஞ்சம் சுமாரான பகுதிகள், என் வீட்டுக்குப் பின்னாலேயே அப்பாவுக்குத் தெரியாத மறைவுப்பிரதேசங்கள். யாரோ ஒரு பெயிண்டரோடு ஓடிப்போனபின்

எப்போதும் பூட்டிக் கிடக்கும் ஜ÷லி அக்காவின் வீடு...

இது எல்லாமும் அப்பாவால் சுலபமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அவரால் யூகிக்க முடியாத ஒரு மறைவிடத்திற்கு மனதால் திட்டமிட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்தத் தாக்குதலும், துரத்தலும் நிகழ்ந்தது.

தெருவிலேயே விழுந்த இரண்டு மூன்று அடிகளுக்குப் பிறகு அவரிடமிருந்து பிடிநழுவி நாலுகால் பாய்ச்சலில் அடுத்த தெருவுக்குள் நுழைந்து தார் ரோட்டைக் கடந்து, பூட்டியிருந்த சர்ச் கேட்டின் மீதேறி, கீழே குதித்து வெளிச்சத்தில் பார்த்தபோதுதான் லேசான ரத்தக்கசிவின் பிசுபிசுப்பை உணர முடிந்தது. அதுவரை உள்ளடங்கியிருந்த வலியும் மெல்ல மெல்ல தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. சர்ச் படிக்கட்டில் உட்கார்ந்து கொஞ்ச நேரம் யோசித்தபோது, பிரிக்க முடியாத வலைப்பின்னல்கள் போல என் வாலிபப் பருவம் என் அப்பாவின் கைகளில் மாட்டிக் கொண்டு விட்டதே என்ற துக்கம் என்னைச் சூழத் தொடங்கியது.

ஆனால் பல நேரங்களில் அவர் என்மீது செலுத்தின பேரன்பின் நினைவுகள் வெடித்த இலவம்பஞ்சுபோல என் முன்னே காற்றில் பறந்துகொண்டிருந்தன. நான் மூணாம் வகுப்பு முடிக்கும்வரை தன் தோளில் போட்டுக் கொண்டு தெருவில் நடந்து நடந்து எனக்குக் கதைகள் சொன்ன மனதும் அப்பாவுடையதுதான் என்பதும், எனக்கு இரண்டு காலிலும் கடுவான் வந்து கால்களை அசைக்க முடியாமல் பாயில் படுக்க வைத்திருந்தபோது, குதிரைச்சாணத்தைப் பையில் கொண்டு வந்து சூடாக என் கால்களின்மீது தடவித்தடவி விட்டதும், என்னை ஜட்காவண்டி பிடித்து சந்தப்பேட்டை மிஷன் ஆஸ்பத்திரிக்கு ஒருமாதமாய்க் கூட்டிக்கொண்டு அலைந்ததும் இதே அப்பாதான். வன்முறைக்கும் பேரன்புக்கும் இடையில் நின்று கொண்டிருக்கிற ஒரு திடகாத்திரமான ஹெட்மாஸ்டர்தான் அவர். இந்த ஜென்மத்துக்கும் அடி வாங்காமல் இருக்க நான் என்ன செய்யவேண்டுமென, சர்ச் லைட் வெளிச்சத்திலிருந்து விலகிப் போய் வேப்ப மரத்துக்குக் கீழே பரவியிருந்த இரவின் அடர்த்தியில் மல்லாக்கப் படுத்துக் கொண்டு யோசித்த வாக்கில் அப்படியே தூங்கிவிட்டிருந்தேன்.

அந்த அடர்ந்த இருட்டைச் சுக்கு நூறாக்கிய தேவாலய மணி ஓசையின் சப்தம், குளிரில் முடங்கிக் கிடந்த என் உடலில் மின்சார ஒயர்கள் பாய்ச்சப்பட்டது போலப் பிடித்து எழுப்பியது. பயமும், உடலில் ஒட்டியிருந்த மீதி வலியும், நான் எங்கிருக்கிறேன், நேற்றிரவு என்ன நடந்தது, இப்போது என்ன ஆனது என்பதையெல்லாம் உடலில் பரவும் காய்ச்சல்போல உணர்த்தியது.

எழுந்து சப்ளாங்கோல் போட்டு உட்கார்ந்து கொண்டேன். சப்தம் என்னிடமிருந்து அறவே அகற்றப்பட்ட ஒன்று போல விலகிவிட்டிருந்தது. கூர்மையாக்கப்பட்டு, சகல கவனத்தோடும் உற்று நோக்கப்படும் ஏதாவதொரு கண்களுக்குத் தவிர்த்து என் இருப்பை அறிய சாத்தியமேயில்லை.

மணி ஒலித்துக் கொண்டேயிருந்தது. விட்டு விட்டு இரட்டை இரட்டையாக ஒலித்த அதன் ஓசை யாருடைய மரணத்தையோ சபைக்குச் சொல்லிக் கொண்டிருந்தது. இப்படியே நான் இந்த வேப்பமரத்தில் தூக்கு மாட்டிக் கொண்டாலும் இந்த மணி இப்படித்தான் ஒலிக்குமோ என்ற யோசனை வந்துபோனது. என்மீது ஒட்டிக்கிடக்கும் இந்தத் தனிமையை நான் துடைக்க முயன்ற நேரம், தாஸ் ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு சர்ச் படிக்கட்டில் உட்கார்ந்தான். அந்த இரவைப் பிளப்பதற்கு அவனுக்கு ஒரு பீடி நுனியின் கங்கு போதுமானதாய் இருந்தது.

ஒரு நொடியில், அந்தப்படிக்கட்டின் மத்தியில் உட்கார்ந்து அவனை நெருங்கியிருந்தேன். என்னை பார்த்த நிமிடம் அவன் அதிர்ச்சிக்குள்ளாகி மீளுவது எனக்கு உறைத்தது.

இந்த அகாலம், இந்த இடம், தேவாலயத்திலிருந்து ஒரு சின்ன கேட்டை திறந்தால் விரியும் பழைய கல்லறை. அதனுள்ளிருந்து வந்த என் வருகை அவனை நிலைகுலைய வைத்து, வார்த்தைகள் வெளிவராமல் மௌனத்தால் உறைந்திருந்தான். நானேதான் பேச ஆரம்பித்தேன்.

ÜÜஒண்ணுமில்லே, வழக்கம் போலதான் ... ராத்திரி அப்பா செமத்தியா அடிச்சிட்டார்ÝÝ

ÏÏவயசாச்சேன்னு அந்தாளுக்கும் அறிவில்லை, வயசு ஏறுதேன்னு உனக்கும் புத்தியில்லைÝÝ

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவன் என் அப்பாவை அறிவில்லாதவன் என்று சொன்னது அவன்மீது எரிச்சலை ஏற்படுத்தியது. இந்தக் கோயில்பிள்ளை வேலையே அப்பா அவனுக்குப் போட்ட பிச்சை என்பது எனக்குத் தெரியும். பேச்சை மாற்ற,

ÏÏயாரு செத்துட்டாங்க?ÝÝ என்றேன்.

ÏÏதேவஇரக்கம் அய்யாவோட அம்மாÝÝ

இன்னொரு பதட்டத்துக்கு நகராமல் மனம் சமாதானம் அடைந்தது.

ÏÏநான் வீட்டுக்குப் போறேண்ணாÝÝ

என்று அங்கிருக்கப் பிடிக்காமல் அவன் பேச ஆரம்பிக்கும்முன் அங்கிருந்து அகன்றேன்.

எகிறி குதிக்க அவசியமின்றி சர்ச் கேட் திறந்து கிடந்தது.

பனியில் லேசாக நனைந்திருந்த தார் ரோட்டில் வெறும் கால்களோடு நடப்பது கொஞ்சம் சுகமானதாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை இருட்டு அடர்ந்திருந்தது. தெரு ட்யூப் லைட்டுகளில் எங்கோ ஒன்றுக்கு மட்டும் தான் உயிர் இருந்தது. அந்த இருட்டு இந்த என் மனநிலைக்கு ரொம்பவும் அவசியப்பட்டது. திசை எதுவாகிலும் இலக்கில்லாமலே நடக்கவே விரும்பினேன். எதுவுமற்றவனாகி எல்லாவற்றின் மீதும் வெறுப்பு மேலோங்கியது. ஆனாலும், வேட்டவலம் சாலை சந்திப்பை நோக்கியே நடக்க ஆரம்பித்தேன். எனக்கு நானே துணையில்லாத தருணமது.

எல்லா இரவுகளுமே இப்படியான அமைதியில்தான் மூழ்கியிருக்குமோ என நினைத்தேன். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையே வாசலில் படுத்து கதை கேட்ட இரவுகள் ஞாபகத்துக்கு வந்துபோனது.

அஞ்சு நிமிஷ இலக்கற்ற என் நடை, அந்தப் புளியமர இருட்டிலிருந்து அவசரமாக வெளியேறிய ஒரு சைக்கிளால் நின்றது. அந்த

ஆள் தன் முகம் யாருக்கும் தெரிந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையில், என்னைத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக மிதித்துக் கடந்தான்.

பருத்தகன்ற புளிய மரத்தின் பின்னாலிருந்து ஒரு குச்சியை சுற்றியடி அவள் வெளிப்பட்டாள்.

விஜயா.

அவள் உண்மையான பெயரேகூட அதுவாக இருக்கலாம். ஆனால் இந்தப் பெயரில்தான் சமீப நாட்களில் எங்கள் பகுதியில் அவள் இரகசியமாக அறியப்பட்டாள். வசீகரமான உடல்வாகு அவளுக்கு வாய்த்திருந்தது. கண்கள் மட்டும்தான் எந்நேரமும் வெளியில் வந்து விழுந்துவிடலாம் என பயமுறுத்திக் கொண்டிருந்தது.

தன் குடிசை வீட்டில் மூன்றாம்தரமான பெண்களை வைத்துத் தொழில் நடத்திக் கொண்டிருந்த டில்லி அம்மாவுக்கு விஜயாவின் வருகை லாட்டரிதான் என்று தெருவில் பேசிக் கொள்வார்கள்.

ஆறேழு மாதங்களாக எங்கள் பகுதியில் விஜயாவின் நடமாட்டம் வயது பேதமின்றி ஆண்கள் மத்தியில் ஒருவித ஈர்ப்பை உருவாக்கியிருந்தது. பொழுது மங்கும் சில சமயங்களில் யாராவது ஒரு சின்னப்பையனை சைக்கிள் கேரியரில் உட்காரவைத்துக் கொண்டுச் சத்தமாகப் பாடிக்கொண்டே அவள் சைக்கிள் ஓட்டுவதைத் திருட்டுத் தனமாகவேனும் பார்க்கும் கண்களை நானறிவேன். மடிப்பு மடிப்பான அவள் இடுப்புச்சதை ஆண்களின் ஏக்கப் பெருமூச்சுகளாலும், நிறைவேறாத கனவுகளாலும் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அடிக்கடி வந்த என் தொடர் கனவில், விஜயா சைக்கிள் ஓட்டும் காட்சியும், கேரியரில் நான் உட்கார்ந்திருப்பதும், அவள் பழைய காதல் பாடல்களைப் பாடிக்கொண்டே யாருமற்ற ஒற்றையடிப் பாதையைக் கடப்பதும், சுகமான அவஸ்தையாக வளர்ந்து கொண்டிருந்தது.

ပံပံஇந்த நேரத்துல எங்கேருந்து வர்ற...ýý என்ற அவள் கேள்விக்கு நான் முகம் திருப்பிக் கொண்டேன்.

ပံပံஎன் மேல கோவமா?ýý

நான் மௌனமாகத்தான் நின்றேன்.

ΰΰஇந்த வயசுல நீ கெட்டுப்போய்டுவேன்னுதான் அன்னிக்கி அப்படிச் சொன்னேன்.ýý

நான் தலைகவிழ்ந்து நின்று கொண்டிருந்தேன். புளியமர இருட்டு என் மௌனத்தை அடைகாத்தது.

கார்த்திகை திருவிழாக் காலங்களில் ஊரின் முகமே மாறும். புதுப்புது மனிதர்கள், புதுப்புது விளையாட்டுகள், ரங்கராட்டினம், வித்தை காட்டுபவர்கள், மூணுசீட்டாடுபவர்கள், சிங்கம், புலி, கரடி படம் வரைந்து காசு வைக்கச் சொல்லி ஏமாற்றுபவர்கள் என ஊர் பலவித மனிதர்கள், பலவித வேடிக்கைகளால் நிறையும்.

டியூஷன் முடிந்து பிரபாகரனோடு வந்து கொண்டிருந்த ஓர் முன்னிருட்டில் முனிசிபல் ஸ்கூலுக்கருகில் சுற்றி நின்றிருந்த கூட்டத்திற்கு முன்னால் ஒருவன் தன் மொழியால் வித்தை காட்டிக் கொண்டிருந்தான். சாணி மெழுகப்பட்ட மூங்கில் கூடை ஓர் ஓரமாக வைக்கப்பட்டிருந்தது. தன் வார்த்தைகளால் அவன் கூட்டத்தைக் கட்டிப் போட்டிருந்தான். அவன் நெற்றியில் தீட்டப்பட்டிருந்த கறுப்பு மையும், அதன் மீதே அப்பப் பட்டிருந்த குங்குமமும், துணியால் தைக்கப்பட்டிருந்த ஒரு பொம்மைக்கு அவன் செய்திருந்த அச்சமூட்டும் அலங்காரமும் ஒருவரையும் நகரவிடாமல் செய்து விட்டிருந்தது. கூட்டத்திற்குள் நுழைந்து திரும்பிப் பார்த்தேன். பிரபா விடுபட்டிருந்தான். அடுத்த ஐந்தாவது நிமிடம் அந்தக் கூட்டத்தின் அச்சம் எனக்குள்ளும் அப்பிக் கொண்டிருந்தபோது, முழுக்க வண்ண வண்ண வளையல்கள் அணிந்த ஒரு கையால் என் கை பிடிபடுவதை உணர்ந்தேன். முரட்டுத்தனமான பிடி அது.

ΰΰதள்ளி நில்லுடாýý

பதட்டமாகி விலகினேன். அவள் பார்வை கீழிறங்கி என் கால் சட்டையில் நின்றது.

ΰΰபடிக்கிற வயசுல...ýý

என முனகிக் கொண்டே அவள் அங்கிருந்து நகர்ந்ததும், என்மீது விழுந்த அற்பப் பார்வைகளைப் பிடுங்கிக் போட்டுக் கொண்டே மிகுந்த அவமானமுற்று நானகன்றதும்தான் அவளுடைய இன்றைய விசாரிப்பு.

üüசொல்லு என் மேல கோபம்தானே...ýý

இப்போது என் கன்னத்தைத் தொட்டு முகத்தை நிமிர்த்திக் கேட்டாள்.

என்னை மிக நெருங்கியிருந்த அவள் மீதிருந்து பரவிய மணம் நானறியாதது. மயக்கத்தைக் கோருவது.

üüஇல்லை.... ஆமாம்...ýý

பளீரெனச் சிரித்தாள். மிருதுவான விரல்கள் என் கன்னத்திலிருந்து விடுபடாமலே üüடீ குடிக்க வர்றீயா? ýý என்றாள்.

மறுத்துத் தலையாட்டினேன்.

üüஆமாம் எங்கூட வரமுடியாதுதான். நீ முன்னாலே போ, நான் கொஞ்ச நேரம் சென்னு வர்றேன்ýý என்ற வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு வேட்டவலம் சாலைச் சந்திப்பை நோக்கி நடந்தேன்.

ஏ.பி.கே. ரைஸ்மில்லைத் தாண்டும்போது இரண்டாம் ஆட்டம் முடிந்து யாரோ இரண்டுபேர் சத்தமாகப் பேசிக் கொண்டே என்னைக் கவனிக்காமல் போய்க்கொண்டிருந்தார்கள். இந்த ரைஸ்மில்லிலிருந்து ஆரம்பித்து பெட்ரோல் பங்க்வரை ரோட்டின் மேற்கே அழகழகான குடிசைகள் நிறைந்திருந்தபோது இத்தனிமையின் அவஸ்தை இல்லை. குளிர்காலங்களில்கூட போர்வை போர்த்திய நெருங்கிய உடல்களின் தெருவோர உறக்கம் காணக் கிடைக்கும். ஸ்கூலுக்கு சைக்கிளில் போகும்போது தென்னந்தட்டி மறைப்பில் குளித்து, மார்புவரை உயர்த்திக் கட்டிய பாவாடையும், தோள்மீது கிடக்கும் புடவையுமாக அவசர கதியில் மறையும் அன்னக்கிளி அக்காவின் தோற்றத்திற்காகத் தவிக்கும் மனசு பல நேரம் பீடிப்புகை பெருகும் உதட்டோடு வெளிப்படும் அவள் புருஷனின் உருவம் கண்டடங்கும்.

நெடுஞ்சாலைத் துறையால் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஜே.சி.பி. மொத்த வீடுகளையும் சில மணி நேரங்களில் துடைத்து, மனிதர்களை திசைகளின் இடுக்குகளில் தூக்கி எறிந்து, சாலையின் இரு பக்கங்களையும் துடைத்தடங்கியபோது நிரந்தர இருட்டும், பயமும் குடிசைகளுக்குப் பதில் குடியேறிருந்தது.

டீக்கடைக்குப் போகலாமா? இப்படியே வீட்டிற்கு ஓடிவிடலாமா? என்கிற இரண்டு சிந்தனைகளுக்கிடையில் நடந்து கொண்டிருந்தேன்.

அவளோடு பேசினதும், அவள் என்னைத் தொட்டதும், அது விவரிக்க முடியாத அவஸ்தையைக் கொடுத்ததும், பிரக்ஞை திரும்பி, சகஜ நிலையில் அதை யாராவது பார்த்திருந்தால் தன் குடும்பத்திற்கு எத்தனை பெரிய அவமானமென்றும் நினைத்தேன். ஆனால் சகஜ நிலைக்குத் திரும்பாமல் இருப்பதையே மனம் விரும்பியது.

என்னென்னமோ யோசனைகளின் மீதான நடை டீக்கடைக்குக் கொண்டுபோய் நிறுத்தியது.

விஜயா எனக்கு முன்னமே அங்கு வந்துவிட்டிருந்தாள். அந்தக் கடைக்கே அவள்தான் எஜமானி போல அங்கிருந்தவர்களிடம் சத்தமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு அந்தப் பின்னிருட்டைக் கலகலப்பாக்கிக் கொண்டிருந்தாள். டியூப் லைட் வெளிச்சத்தில் அவளை உற்றுப் பார்த்தேன். அவள் பிருஷ்டம்வரை தொங்கிய மல்லிகைச் சரம், அப்போதுதான் வைத்த மாதிரி கலையாமல் இருந்தது. நான் பார்ப்பதை யாரும் பார்க்கிறார்களோ என்ற பதட்டமே அவளுக்கு என்னைக் காட்டிக் கொடுத்தது. இந்த முறை தனக்குள் ஆழமாய்ச் சிரித்துக்கொண்டு, எனக்கு ஒரு டீ ஆர்டர் தந்தாள். அவளைத் தொட முயன்று அவள் பார்வையின் தீவிரத்தைத் தாங்க முடியாமல் அவளைத் திட்டிக்கொண்டே நகர்ந்த டிரைவர் ஒருவன் என்னையும் முறைத்தான்.

டீக்கடைக்காரன் என்னைச் சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டே டீ கொடுத்தான். என் அப்பாவிடம் இந்த இரவைப் பற்றி இவன் சொல்லக்கூடுமோ என்ற பயம் எனக்குத் தொத்திக் கொண்டது.

ÜÜஎனக்கு வேண்டாண்ணேÝÝ

என்று மறுத்துவிட்டு மீண்டும் நடக்க ஆரம்பித்தேன். யாருமே இல்லாத அந்தத் தார்ச்சாலையில் கண்ணன் ரைஸ்மில்லைத் தாண்டுவதற்குள் அவள் இவனை சமீபித்து ÜÜஸ்கூல் கிரவுண்டுக்கு வரமுடியுமா, கொஞ்சம் பேசணும்ÝÝ என்றாள்.

ÜÜஉங்கூட நான் எதுக்கு வரணும்ÝÝ

சொல்லும்போதே அவளோடு போனால் என்ன? என நினைத்தேன்.

ÜÜபுடிக்கலைன்னா வேணாம்ÝÝ

என்று நின்று கொண்டாள்.

இப்போது எனக்கேற்பட்டிருந்த தைரியம் என்னை என் வீட்டிற்கனுப்பியது. யாருமற்ற இது போன்ற இரவுகள் என்னை எங்கெல்லாமோ கொண்டு போய்விடுமோ என்றும், கொண்டு போக வேண்டும் என்றும் நினைத்தேன்.

உறங்கும் தெரு மீது இருட்டு ஒரு போர்வை போல மூடியிருந்தது.

என் வீட்டில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தது என்னைப் பதட்டப்படுத்தியது. மெல்ல உள்நுழைந்து எட்டிப் பார்த்தேன். பாட்டி மட்டும் கால்களை நீட்டிப் போட்டுக்கொண்டு, சின்ன உரல் உலக்கையால் வெற்றிலை இடித்துக் கொண்டிருந்தாள்.

இரகசியமான குரலில் ÜÜஆயா, அப்பாவும், அம்மாவும் எங்க?ÝÝ என்றேன்.

அதிகப் பதட்டப்படாமல், ÜÜஏண்டா எங்க போயிருந்த, அந்த மனுசன் இந்தப் பொம்பளையக் கூட்டிக்கிட்டு ராத்திரியெல்லாம் உன்னைத் தேடிக்கிணுகீறான்ÝÝ என்றாள்.

Üசாப்டயாÝ என்ற தளர்ந்த குரல் கவனப்பாரின்றி கரைந்தது.

சத்தம் போடாமல் கட்டிலுக்குக் கீழே ஒரு பாயைப் போட்டுப் படுத்துக் கொண்டேன்.

விஜயாவின் உலகம் குறித்துப் பொறாமையாக இருந்தது. அவள் சைக்கிள் ஓட்டுவதும், நீளும் இரவுகளின் வெளிகளில் சுத்துவதும், டீக்குடிப்பதும், யாரோடு வேண்டுமானாலும் ஸ்நேகித்திருப்பதும் எத்தனை சுதந்திரமானவள் என்ற நினைவின் நீடிப்பினூடே ..

தெருவில் துரத்தி, துரத்தி அடிக்கிற அப்பா அவளுக்கு வாய்க்காமல் போனது எவ்வளவு அதிர்ஷ்டவசமானது என்பதோடு கூடவே ...

அவள் திரும்பிப் போக, வீட்டில் இது மாதிரி பின்னரவில் விளக்கெரியாமல் இழுத்து மூடப்பட்ட கதவுகளுக்குப்பின் குறட்டை விட்டு நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருந்த ஒரு கணவனின் முகம், அந்தப் பின்னரவில் கெட்ட வார்த்தைகள் சொல்லி என்னைத் திட்டிக் கொண்டே உள்ளே நுழைந்த அப்பாவின் குரலில் சிதைந்தது.

# நட்சத்திரங்கள் ஒளிந்து கொள்ளும் கருவறை

நடுநிசியைத் தாண்டிய மூன்றாம்ஜாமத்தில், அசைவற்றுப் புதருக்குள் பதுங்கியிருந்து, திடீரெனப் பிரவேசிக்கும் ஒரு துஷ்டவிலங்கைப் போல, ஊமையன் எங்கிருந்தோ அத் தெருவுக்குள் நுழைந்தான். அசைவற்றுக்கிடந்த அத்தெருவின் உறக்கம் அவன் எதிர்ப்பார்த்ததுதான். இத்தெரு வீடுகள் ஒவ்வொன்றும் எப்போதோ அவனுக்குள் பதிவாகியிருந்தன. தெரு மனிதர்களின் முகம், வயது, நிறம், குழந்தைகள் குறித்த விபரங்களைப் பத்து பதினைந்து வருடங்களின் தொடர்ச்சி அவனுக்குள் ஏற்றியிருந்தது.

எங்கிருந்து ஆரம்பிக்க?

யோசனை அறுபட ஆறேழு நாய்களின் திடீர் குரைப்பொலி காரணமானது. நிதானித்து, குரைத்த நாய்களைச் சமீபித்து பார்வையால் துளைத்தான். பழக்கப்பட்ட மனித வாசனையால் கட்டுண்டு நாய்கள் குரலடங்கி அகன்றன. உறுதிப்படுத் தலுக்காகத் திரும்பிப் பார்த்து அவன்

நின்ற முதல் வீடு நிறைமாத கர்ப்பிணியான மேரிவில்லியம்ஸின் முல்லைப் பந்தல் விரிந்த ஓட்டுவீட்டு வாசல்.

ஒரு விநோத ஒலியெழுப்பி அவன் பேசினான். அச்சமெழுப்பும், ம் … ம் … ம் … என்ற ஒலி, ஒரு அபஸ்வரம் மாதிரி அந்த அமைதியைக் குலைத்து ஒலித்தது.

திகிலுற்றெழுந்த மேரி அவ்வொலியின் முழு அர்த்தத்தை உள்வாங்கினாள். குறட்டைவிட்டுத் தூங்கும் தன் கணவனை நெருங்கிப் படுத்தாள். அவனுக்குள் பதுங்கி, அவன் உஷ்ணத்தை உணர்ந்து தன்மீது படரும் இந்த நச்சுப் பாம்பை உதறிவிட எத்தனித்துத் தோற்றாள். முழிப்புத் தட்டி, எழுந்து படுக்கையில் குப்புற உட்கார்ந்து கொண்டாள். எழுந்து விளக்கைப் போடவும் அச்சம் அனுமதி மறுத்தது.

ம்… ம்ம்… ம்ம்… ஒலியுடன் ஊமையன் விளையாடிக் கொண்டிருந்தான்.

வார்த்தைகளற்ற தன் ஒலி உள்ளே ஒருத்தியின் உடம்பை நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் என்பதை அறிந்தவனாகவோ… அல்லது அறியாதவனாகவோ…

ஒலியினுள் புதைந்திருந்த வார்த்தைகள் மேரி வில்லியம்ஸ÷க்கு ஒரு ரகசியத்தைப் போல நுட்பமாகப் பதிந்தது.

üüஇந்தக் குழந்தையும் உனக்குத் தங்காது.ýý

பட்டாம்பூச்சிகள் பறந்து திரிந்த அவள் கனவின்மீது ஊமையன், எரியும் கொள்ளிக்கட்டையை வீசியிருக்கிறான். தீ எங்கிருந்து வேண்டுமென்றாலும் பற்றலாம்.

இருட்டுக்குப் பழக்கப்பட்ட கண்களினூடே, ஆட்டுக் குட்டியை மார்பில் அணைத்து நிற்கும் இயேசுவின் புகைப்படத்தை வெறித்துப் பார்த்தாள். கொஞ்சம் தெரிந்தும் தெரியாமலும், இயேசுவும் ஆட்டுக்குட்டியும் போக்குக் காட்டினார்கள்.

தெரு நுனியிலிருந்து ஊமையனின் ஒலி சப்தம் இன்னமும்

கேட்டுக்கொண்டிருந்தது. அச்சத்தத்தைக் கேட்க திராணியற்று உட்கார்ந்த வாக்கில் தன் இரண்டு முட்டிக் கால்களுக்கிடையே முகம் புதைத்துக்கொண்டாள். அந்த அடர்த்தி அவள் அழுகையைக் கட்டுப்படுத்தப் போதுமானதாயில்லை.

பெத்தலகேமில் பிறந்தவரை

போற்றித் துதி மனமே - நீ

பெத்தலகேமில் பிறந்தவரை

போற்றித் துதி மனமே...

என்ற கீர்த்தனைப் பாடல் ட்ரம்ஸ் சத்தத்தில் மெருகேறி, அந்த இரவின் தனிமையையும், குளிரையும் துரத்தி அடித்தது. மார்கழியில் பதினைந்து நாட்களுக்குத் தொடரும் இப்பஜனைப் பாடல்கள் சபைத்தெருவை கிருஸ்மஸ் கொண்டாட்டங்களுக்குத் தயார்ப்படுத்தும். பெருகும் ட்ரம்ஸ் சத்தம் குழந்தைகளை பஜனைக் குழுவை நோக்கி இழுக்கும் தூண்டில்கள். மப்ளர் சுற்றிப் பனியில் நனைந்து, விடியலைப் பார்த்து, யார் வீட்டிலாவது குடித்த கறுப்பு காப்பிச் சுவையுடன் திரும்பும் குழந்தைகளுக்கு அன்றிரவுவரை இக்கொண்டாட்டங்கள் மனதைவிட்டகலாது. யார் தலையிலாவது சுமக்கப்படும் பெட்ரோமாக்ஸ் விளக்கொளி இச்சூழலை அப்படியே காப்பாற்றிக் கொள்ளும்.

அப்பாடலை நோக்கி அவள் மனம் நகர முயன்று தோற்றது. கடவுள், கணவன், ஊமையன், பாடல், புகைப்பட ஆட்டுக்குட்டி எதுவுமே பிடிக்காமல் போனது.

கை நிறைய சில்லறைக் காசுகளோடு பஜனைக் குழுவினரை வரவேற்கும் அவள் இயல்பு படுக்கையை விட்டகலாமல் கிடந்தது. திறக்கப்படாத கதவின் முன் நின்று,

ப்தேவநாம சங்கீர்த்தன பஜனை

தேவா... தேவா...

நித்யபிதா ஒருவருக்கே

நமோஸ்தே... நமோஸ்தே...ýý

என்று குரலெழுப்பி அடுத்த வீட்டை நோக்கி நடந்தார்கள்.

குழுவின் சப்தத்தால் தூக்கம் கலைந்து புரண்டு படுத்த வில்லியம்ஸ், தன் மனைவி இப்படி குப்புற உட்கார்ந்திருந்ததை இயல்பெனக் கருதினாலும், அவளைத் தொட்டு முகத்தைத் திருப்பினான். அந்தச் சிவந்த முகத்தில் நீண்டநேர அழுகையின் படிதல்களைப் பார்த்து அதிர்வுற்றான்.

நீண்டநேர கெஞ்சல், அதட்டல், ஆறுதலுக்குப் பிறகு அவள் ஊமையனின் குறி சொல்லலைச் சொல்லி வெடித்தழுதாள். உள்ளுக்குள் அவனுக்கும் ஒரு பயமிருந்தும் அவளுக்குத் தெரியக் கூடாதெனக் கருதி, தைரியமானவனைப் போல,

üüஅவனே நாக்கறுக்கப்பட்ட ஊமையன். பேச முடியாது. அவன் ஏதோ பிச்சை வாங்க உளறனதைப் போயி பெரிசுபண்ணி இப்படி அழறியே, நீ படிச்சு உத்யோகம் பாக்குற பொம்பளைதானேýý என மெதுவான குரலில் அதட்டினான்.

üüஇல்லீங்க, கர்ப்பிணிங்க வீட்டு முன்னாடி அபஸ்வரக் குரலெழுப்பி அவன் சொன்ன அத்தனையும் பலிச்சிருக்கு, நகோமி டீச்சர் துவங்கி டெய்சி சித்தி வரைýý என்று விட்டு விட்டுப் பேசினாள். ...

எங்கேயோ கேள்விப்பட்டதை ஒரு செய்தியாக உள்வாங்கியிருந்தவனுக்குத் தன் வீட்டிலேயே அது நிகழப்போகிறது என்பதை ஒரு செய்தியாக உணரமுடியவில்லை. துக்கத்தின் அடர்த்தி அவனையும் நெட்டித் தள்ளியது. எதுவுமற்றவனாக நடித்து தன் மனைவியைத் தேற்றி தைரியம் சொல்லித் தன் வார்த்தைகளின் உதாசீனத்தால் அவள் காயப்பட்டு விடக்கூடாது என்பதில் மிக கவனமாக இருந்தான். தன் நெருக்கமான ஸ்பரிசம் அவளைத் தேற்றுமென நம்பி, தனக்குள் புதைத்துக் கொண்டான். குளிரோடு துவங்கிய அன்றைய காலை அவர்களுக்கு முடிவின்றியே நீண்டது.

யாருமற்ற தனிமை பயத்தை வாயோடு கவ்விக்கொண்டு அவள் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தது. மீண்டும் தெருவில் கேட்ட ஊமையனின்

குரல் நடுக்கமேற்படுத்தியது. கதவைத் திறந்து தெருவை வெறித்தாள். இரவு சொன்ன செய்திக்காக சேகரிக்கப்படும் பகல்நேர பிச்சையில் ஊமையன் மும்முரமாயிருந்தான். கதவுகளினூடான இடைவெளியில் நின்று, எதிர்வீட்டில் நிற்கும் அவனை முழுவதுமாக ஊடுருவினாள் மேரி.

நெடுநெடுவென வளர்ந்த தோற்றம். நல்ல சிவப்பு நிறம். தோல் சுருக்கங்களுக்கிடையே அவன் வயது முதிர்ந்து ஒளிந்திருந்தது. கலர் கலரான அழுக்கு உடைகளை உடம்பு முழுக்கச் சுற்றியிருந்தான். தோளில் மாட்டியிருந்த இரண்டு மூன்று பைகளில் ஒன்று நிரம்பியிருந்தது. கறுப்பு மையால் நெற்றியில் பொட்டிட்டு, பின்னணியில் ஆரஞ்சு கலர் சாந்து பூசியிருந்தான். யாரையும் கிட்ட நெருங்கவிடாத தோற்றம். கண்கள் உள் புதைந்திருந்தது.

சடேரென இவள் வீட்டுப்பக்கம் திரும்பி நின்று என்னமோ நிதானித்து, பின் நிராகரித்து அடுத்த வீட்டிற்கு நகர்ந்தான். கெட்ட செய்தி சொன்ன வீட்டில் தட்சணை என்ன வேண்டியிருக்கு? என்ற தர்மம் அவனுக்குள்ளும் நிரம்பியிருந்திருக்கலாம்.

இச்செய்கையில் மேலும் கலங்கினாள். நேற்றிரவு நடந்தது ஒரு துர்க்கனவு மாதிரியென நினைத்துத் துடைக்க முடியாமல் தன் சரீரத்தில் படிந்திருப்பதை உணர்ந்தாள். கதவை உட்பக்கம் தாழிட்டு படுக்கையறைத் திரைச் சீலையையும் இழுத்துவிட்டு அறையை இருட்டாக்கினாள். கட்டியிருந்த புடவையைத் தளர்த்தி கீழ்வயிற்றில் கைவைத்து குழந்தையின் அசைவை உணர்ந்து அதன் உயிர்ப்பை உறுதிப்படுத்தினாள். வயிற்றுச் சுருக்கங்கள் இழந்த இரு குழந்தைகளின் ஞாபகத்தை வடுக்களாக்கி வைத்திருந்தன.

தெரு கிருஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்திருந்தது. பெருகி வழியும் இசை சப்தம், அவ்வப்போது ஆலயத்திலிருந்து கேட்கும் எக்காள பாடல்கள், வீடுகள் பூசிக்கொள்ளும் புது வர்ணங்கள், வீடுகளில் தொங்கின கலர் கலரான நட்சத்திரங்கள், அமைக்கப்பட்ட குடில்கள், வந்து குவியும் வாழ்த்து அட்டைகள் எனச் சூழல் குதூகலமாகிக் கொண்டேயிருந்தது. எதிலும் ஆர்வமற்று ஒரு பிணம்

மாதிரி கிடந்தாள் மேரி.

வில்லியம்ஸின் ஆறுதல்கள் பாறைகளில் விதைத்த விதை மாதிரி விரயமாகிக் கொண்டிருந்தன. அன்றிரவு கன்னிமரியாள் ஒரு கழுதையின் மீதேறி யோசேப்புடன் வரும் காட்சி அவள் கனவில் விரிந்தது. கன்னி மரியாளின் வயிற்றில் அசையும் ஒரு குழந்தையின் கருவை மேரி தேடினாள்.

ஏரோதின் பளபளக்கும் வாள் நுனியில் ஒட்டியிருந்த குழந்தைகளின் ரத்தத்துளி ஒன்று தன் முகத்தில் தெறிப்பதை உணர்ந்து திடுக்கிட்டு அலறினாள். நாடெங்கும் சிதறிக்கிடந்த குழந்தைகளின் தலையில்லாத முண்டங்கள் மீண்டும் மீண்டும் அவளுக்குமுன் நினைவுக்கு வந்துகொண்டிருந்தன.

தன் குழந்தையும் இப்படித்தான் அனாதையாகத் தெருவில் கிடக்குமா? அல்லது உத்தானத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படுமா என்ற துக்கத்தின் வலி பொறுக்க முடியாமல் துடித்து துடித்து அடங்கினாள். அவளைத் தேற்ற வார்த்தைகளற்ற வில்லியம்ஸ் உள்மனப் புகைச்சலில் குமைந்து கொண்டிருந்தான்.

ஏரோது மன்னனின் போர்வீரர்களின் பூட்ஸ் ஒலிச் சத்தம் மிக சமீபித்திருந்தது. அக்கூட்டத்து வீரர்களின் முகங்களைத் தேடி அலைந்தாள். ஊமையன் போர்வீரர்களுக்கான உடையில், கொலைவெறி மின்னும் கண்களோடு போய்க்கொண்டிருந்தான். அவன் இடுப்புறையில் வாள் வெளியே துருத்திக் கொண்டிருந்தது தெரிந்தது. திடுக்கிட்டு எழுந்து ஜன்னலைத் திறந்து தெருவைப் பார்த்தாள். ஒரு கறுப்புப்பூனை மட்டும் எதிர்வீட்டு மதிற்சுவரில் உட்கார்ந்திருந்தது. தீயைப் போல ஒளிர்ந்த அதன் சிவப்புக் கண்களில் மரணம் ஒளிந்திருப்பதைப் பார்த்து பயந்து தன் அடிவயிற்றை மீண்டும் தடவிப் பார்த்துக் கொண்டாள். பஜனை சப்தமும், மனித நடமாட்டமுமற்ற தெரு இருண்டிருந்தது. தூரத்தில் இருட்டை விலக்கி ஒளிர்ந்து கொண்டிருந்த ஒரு நட்சத்திரம் தெரிந்தது. வான சாஸ்திரிகளுக்கு வழிகாட்டும் நட்சத்திரம் அதுதானென்று நம்பி கைகூப்பி வணங்கினாள். தன் வீட்டுப் பக்கம் அந்த நட்சத்திரம் திரும்பினால், தன் குழந்தை

பிழைத்துக் கொள்ளும் என்று நம்பினாள். நட்சத்திரம் எதிர்திசையில் மேகங்களுக்கிடையே நகர்ந்து கொஞ்ச நேரத்தில் மறைந்தது, மேரிக்கு இன்னும் பயத்தைத் தந்தது.

ப்என் குழந்தையைக் காப்பாற்றவும் ஒரு ரட்சகர் வேண்டும்ý

என முட்டியிட்டு இறைந்து மன்றாடினாள். நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்குமான இடைவெளியைத் தன் மனதால் தொட்ட வண்ணம் அந்த இரவைக் கடந்தாள்.

கிருஸ்மஸ் வெகு சமீபத்திலிருந்தது.

இன்றைய இரவின் நகர்தலில் அதை அடையமுடியும். பகலுக்கான அவசியமின்றி தெரு இருட்டை மின்விளக்குகள் உறிஞ்சி வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. மார்கழிக் குளிர் பண்டிகைக்கால உற்சாகத்தைக் கொட்டிக் கொண்டிருந்தது. சீரியல் விளக்கொளியும், பெண்களின் ராமுழிப்பும், குழந்தைகளின் புதுத்துணி குதூகலமும், அடுத்தநாள் விடியல் ஒரு குழந்தையின் பிறப்பு உலகம் முழுக்க சந்தோஷத்தை அள்ளிக் கொட்டப் போகிறதை முன்னறிவிப்பு செய்து கொண்டிருந்தன.

மேரி மாட்டுக்கொட்டகையின் வைக்கோல் படுக்கையில் ரணமான வலியில் முனகிக் கொண்டிருந்தாள். பக்கத்திலமர்ந்து ஜோசப் அவள் தலைமுடியைக் கோதிக் கொண்டிருந்தான். வில்லியம்ஸ்சின் மடியில் மேரி சலனமற்றுப் படுத்திருந்தாள். மொழியற்ற ஒரு சத்தம் அவளை முடக்கிப் போட்டிருந்தது. அன்று இரவு ஆராதனை அவர்களின்றி இயேசுவின் பிறப்புக்காக நடந்தேறியது.

பட்டாசுகள் வெடிக்க மீண்டும் ட்ரம்ஸ் ஒலி முழங்க, கிருஸ்மஸ் தாத்தா வேடம் போட்ட ஒருவர் கையில் சாக்லெட் நிரப்பப்பட்ட பெரிய பக்கெட்டில் கைவிட்டு அள்ளி அள்ளி ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுத்துக் கொண்டிருந்தார். கொத்துகொத்தான சந்தோஷத்தில் தெரு நிரம்பிக் கொண்டிருந்தது.

ட்ரம்ஸ் சத்தம் உச்சத்திற்குப் போய்க்கொண்டிருந்தது.

ப்சர்வத்தையும் படைத்தாண்ட

சர்வ வல்லவர் - இங்கே

பங்கமுற்ற பசுந்தொட்டியில்

படுத்திருக்கின்றார்ý

ஆராதனை முடிந்த பகல்நேர பஜனைக் குழுவினரின் நடை, கிட்டத்தட்ட ஓட்டமாக மாறியிருந்தது. ஒவ்வொருவரின் முகத்திலும் பண்டிகையின் மகிழ்ச்சியும், அவசரமும் இருந்தது.

அழுது வீங்கின முகத்தோடு மேரி வாசற்கதவைப் பிடித்துக் கொண்டு தனியாக நின்றிருந்தாள். யாருமற்றுப்போன வெளி அவளைச் சுற்றிப் படிந்திருந்தது. சத்தத்தின் வலி பொறுக்காமல் எங்காவது வனாந்தரத்தை நோக்கி ஓடிப்போய் விடமுடியுமா? என்ற தவிப்பிருந்தது.

வீட்டிற்குள் திரும்ப நினைத்த அவள் கையைப் பிடித்து விரித்து, கிருஸ்மஸ் தாத்தா நிறைய சாக்லெட்டுகளைத் திணித்தார்.

üஎதுக்கு இவ்ளோ?ý

üநேற்றிரவு நம் கன்னிமரியாளுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது.ý

üஎந்தச் சேதாரமுமின்றியா?ý

எதிர்பாராத இக்கேள்வியால் கிருஸ்மஸ் தாத்தாவின் கைகள் லேசாக நடுங்கின. சமாளித்து,

üதாயும் சேயும் பூரண நலம்ý.

மேரி ஒரு கன்றுக்குட்டி மாதிரி துள்ளிக் குதித்து வீட்டிற்குள் ஓடி ஒரு ட்ரே நிறைய கேக்குகளையும், பலகாரங்களையும் அடுக்கிக் கொண்டிருந்தாள் பஜனைக் குழுவினருக்குக் கொடுக்க.